Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර්

மார்ச். 17-23, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAM 606



## சமரசம் எதிர்கொள்ளும் சவால்கள்

## சு.ப.வின் ஐரோப்பிய சுற்றுலா

## உணவும் உணர்வுகளும்

## செச்சினிய கிளர்ச்சித் தலைவனின் மரணம்

சிறப்புப் பார்வை

# முழு மனிதனாக வாழ முயற்சிப்போம்

கல்விக் கடலை நீந்திக் கரை சேர்ந்தவர் இவ்வுலகில் எவருமே இல்லை. அதனால் தான் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கற்றது கைம்மண்ணளவு என்றும் கல்லாதது உலகளவு என்றும் குறிப்பிட்டார்.

இப் பரந்த உலகில் சிறந்த முறையில் நாம் வாழ முதலில் மூலதனமாகத் தேடவேண்டியது கல்வி அறிவையே. அதுவும் கசடறக் கற்று அதன்படி ஒழுகுதலே உத்தமம்.


இனங்கள் பல இருப்பினும், மதங்கள் பல இருப்பினும் மனிதன் புனிதனாக வாழ வழிகாட்டும் ஒளிவிளக்கு கல்வி.

"சீனம் சென்றாயினும் ஞானந்தேடு" என்று ஒரு சிறப்பான கவி வரி மணியாகவுள்ளதை மறவாதவர்கள் எப்படியாவது அறிவுத்திறனைப் பெறுவதற்காகக் கல்விச் செல்வத்தை கஷ்டப்பட்டேனும் தேடவே முற்படுவர். தேடல் சுகமானது - அது தேடும் விதத்தைப் பொறுத்து,

படிப்பறிவு பெற்றவன் நல்ல பண்பாடு தவறாமல் வாழவும், அடிதடி சண்டைக்குப் போகாமல் அன்பைப் பேணி, ஆண்டவனுக்குப் பயந்து, மத அனுஷ்டானங்களுக்கு மதிப்புக் கொடுத்து வள்ளுவன் வழியில் நல்லவனாக வாழ முயல்வான். எல்லாவற்றிற்கும் மூலதனமாக முயற்சியைக் கொண்டு கல்வி அறிவு பெற்று முழு மனிதனாக வாழ முயற்சிப்போமாக!

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

# ஆன்மீகம்



## இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

"பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும். வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும், பெரிய அடையாளங்களும் உண்டாகும்." லூக்கா - 21:11.

"என் நாமத்தின் நிமித்தம் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள்." லூக்கா - 21:17.

"சூரியனிலும், சந்திரனிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்." லூக்கா - 21:25.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. லூக்கா - 21:33.

சகோதரனே! சகோதரியே! இன்றைய நாட்களிலே நடக்கின்ற இயற்கை அனர்த்தங்கள் அன்றைய நாட்களிலே கர்த்தராகிய இயேசுவால் கூறப்பட்டு விட்டது. அவருடைய வருகையின்போது இப்படியான காரியங்கள் நடக்கும். ஆனால் ஜனங்கள் மனம் திரும்பமாட்டார்கள்.

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டினாலும், வெறியினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்." லூக்கா - 21:34.

எதிர்பாராத திகிலூட்டும் ஆபத்துகள், அனர்த்தங்கள், பயங்கரமான உயிரிழப்புகள் இவைகளைச் சந்திக்கும் நாள் வந்துகொண்டிருக்கிறது. சகோதரனே! சகோதரியே! எமக்காக, எமது குடும்பத்திற்காக, எமது சகோதர, சகோதரிகளுக்காக, எமது தேசத்திற்காக, எல்லோருடைய மனந்திரும்புதலுக்காக, முழங்கால்படியிட நேரம் வந்துவிட்டது. தாமதிக்காதீர்கள். "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கத் தக்கதாகவும் ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்." எசேக்கியேல் - 22.30. சகோதரனே! தேவன் தேடுகிற மனுஷனாக நீ ஏன் இருக்கக்கூடாது இப்போதே ஜெபி. ஆமேன்.

-போல் ஜோன், தெல்தெனிய.

## மறுமை வாழ்வின் அவசியம்

மனித வாரலாற்று நெடுகிலும் மரணத்தின் பின்னான வாழ்வு பற்றிய சிந்தனை இருந்தே வந்திருக்கிறது. மனித வாழ்வு ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், மன எழுச்சிகள் என்பனவற்றால் இயக்கிச் செல்லப்படுகின்றன. இதன் விளைவாக எல்லாக் காலத்திலும் மனிதன் உயிர் அழிந்துவிடக் கூடாது என்று சிந்திக்கலானான். இத்தகைய சிந்தனையே மறுபிறப்புக் கொள்கையை உருவாக்க வழி வகுத்தது. இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மறுபிறப்புக் கொள்கை பிழையானது என்ற போதிலும் மனித வாழ்வின் இடை நடுவே மரணம் குறுக்கிடுவதால் மனிதன் இவ்வாறு சிந்திக்கத் தொடங்கினான்.

உலகில் மனிதன் புரிகின்ற ஒரு நன்மையான செயலுக்கும், தீமையான செயலுக்கும் நியாயமான தீர்ப்பை வழங்க முடியாது. மனித வாழ்வு ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன மேலிட்டதாகக் காணப்படுவதால் அவ் வாழ்வின் எதிர்பார்ப்புக்களையும், ஆசைகளையும் முழுமைப்படுத்துமிடமாக மறுமை வாழ்வை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான்.

மனித வாழ்வை நெறிப்படுத்தும் வகையில், அவனது இலட்சியத்தை உணர்த்தும் வகையிலும், மிக நீதமானத் தீர்ப்பை வழங்கும் இடமாகவும் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கவும், அல்லாஹ் சொன்னபடி இவ்வுலகத்தில் வாழ்ந்து காட்டியவர்களுக்கு நன்மைகளை வழங்கவும் (சுவனம் வழங்க) மனித ஆற்றலை முழுமையாகப் பிரயோகிக்கக் கூடிய இடமாகவும் மறுமை அமைந்திருப்பதால், மறுமை வாழ்வின் அவசியம் முக்கிய இடத்தை வகிக்கிறது. அல்லாஹ் கூறிய பிரகாரம் நற்கருமங்களைச் செய்து உயர்தரமான சுவனத்தைப் பெற எம் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக!

-றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.603



**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### அதிசயப் பிறவி

கலப்படமில்லா
மனிதத்திற்கு
ஒன்பது அன்னைகளும்
ஒரு செவிலித்தாயும்?
சுனாமியகதிக் குழந்தை
என்றாலும் - அபிலாஷ்
நீயொரு
அதிசயப் பிறவியப்பா!

-ஏ.ஏ.பாத்திமா தீனா, ஏறாவூர் - 01 ஏ.

**பரிசுக்குரிய கவிதை**

### தேடல்

மரபணுப் பரிசோதனையால்
இந்த மழலைக்கு
மாதாவைத் தேடிக் கொடுத்தீர்
மாற்றுக் கருத்துப் பேசிய
என் தந்தையைக் காண
மருத்துவத்தில் மருந்துண்டா?

-சங்கம ஹிஷாம்,
திருகோணமலை.

### அபிலாஷ்!

சுனாமியால்
சுருண்டு போன
தேசத்துக்கு!
உன் பெயர்
சர்ச்சைக்குரியதல்ல!
சரித்திரத்திற்குரியதே!

-சீனிராசா எடிசன்,
கொழும்பு - 13.

### இன்று

தூழியிலே தூங்க
வைத்தாள் உன்
அன்னை
ஆழியிலே
ஆர்ப்பரித்தாள் கடல்
அன்னை
பேசாமடந்தை நீயும்
இன்று - உலகில்
பேசும் தெய்வக்
குழந்தையானாய்
தாய்க்கு.

-தெ.லோஜனா,
கொழும்பு - 06.

### சுனாமியை வென்ற சூரன்

சுனாமியை வென்ற
சூரன் இவன்
ஆழிப் பேரலையைக் கடந்த
ஆழிக்குமரன் இவன்
மரணத்தை விரட்டிய
மாவீரன் இவன்
ஒன்பது தாய் உரிமை கோரி
உண்மைத் தாய்க்குப்
பிள்ளையானவன் இவன்
இவன் வாழ்க பல்லாண்டு!

-ஏ.ஜே.எப்.பஸ்னா, மல்வானை.

### சுனாமி பேபி - 81

சுனாமியின் தாக்கத்தை
விட
சூடான தாக்கம்
சர்வதேசமே பார்த்தது
சுனாமி பேபி - 81.


-எஸ்.பி.பாலமுருகன்.

### நீளாதோ?

சுனாமி விதைத்த
சிசுவுக்குத் தான்
எத்தனையெத்தனை
பெற்றோர்கள்!
ஆண்டு பல அல்லலுறும்
அனாதையில்லக்
குழந்தைகட்கும்
இவர்கள் கரம் நீளாதோ.

-அ.சந்தியாகோ, கண்டி.

## கவிதைப் போட்டி இல.606



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 23.03.2005.

கவிதைப் போட்டி இல.606
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### வாழ்த்துகின்றோம்

பேசத் தொடங்கு
முன்னே
பிரபலமாகிவிட்ட
மொட்டே,
பின்வரும் காலத்தில்,
கலை பல கற்று
சாதனை பல செய்து
புகழ் மணம் பரப்பி
பிரபல்யம்
நிலைப்பதற்கு நாம்
எல்லோரும்
வாழ்த்துகின்றோம்.

-சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

### எடுத்துக்காட்டு

நான்
தாய்ப் பாசத்திற்கோர்
எடுத்துக்காட்டு
நீதிக்கோர்
எடுத்துக்காட்டு
விஞ்ஞானத்தின்
விந்தைக்கோர்
எடுத்துக்காட்டு
அதிர்ஷ்டத்திற்கோர்
எடுத்துக்காட்டு
நான் யார்
தெரியுமோ?
சுனாமி பேபி - 81

-றெ.பி.மரியடினேசன்,
மன்னார்.

### அதிசயக் குழந்தை

சுனாமி காவு கொண்ட
பிஞ்சுகளில்
தப்பிப் பிழைத்தவன் நீ
வளர்த்த பாசம் அணைக்கிறது
பத்து மாத பந்தம் தேடுகிறது
மரபணுச் சோதனையில்
சாதனை புரிந்து
ஊடகங்களால் பிரசித்தமானாய்
அமெரிக்க செல்லும்
அதிசயக் குழந்தை நீ.

-யூ.செல்லத்தம்பி,
கல்முனை.

### தெய்வீகப் பிறவி

மாண்டுவிட்டதென
ஈன்றோர்
பரிதவிக்க
அகிலம் வியக்கும்
வண்ணம்
அற்புதமாய் உயிர்
பிழைத்து
மீண்டு
வந்ததுவோ
தெய்வீகப் பிறவி
இது!

-சு.கமால்தீன்,
ஏறாவூர் - 03.

# உங்கள் பக்கம்

## காத்தான்குடி கடற்கரை வீதி அவலம் நீங்குமா?

கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு மாவட்டம் - காத்தான்குடி பிரதேச சபைக்குட்பட்ட கடற்கரை வீதி மிகவும் மோசமான நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இது மிகவும் முக்கியமான மக்கள் பாவனை கூடிய வீதியாகும். இந்த வீதியில் பொது மைதானம், பாடசாலை, ப.நோ.கூ.சங்கம், பொதுச் சந்தை, பள்ளிவாசல்கள், கடைத் தொகுதிகள், தேசிய பாடசாலை மேலும் விசேடமாக மாவட்ட வைத்தியசாலை போன்றவை இருப்பதால் நாளாந்தம் மக்கள் நடமாட்டம் உள்ள வீதியாக உள்ளது இதை யாரும் இதுவரை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. மேலும் சில வேளைகளில் கர்ப்பிணித் தாய்மார் மகப்பேற்றுக்காக வைத்தியசாலைக்குச் செல்லும்போது வழியிலேயே மகப்பேறு ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தளவுக்கு வீதி மிக மோசமாக உள்ளது. எனவே தயவுசெய்து மிகவும் முக்கியமான இவ்வீதியை அவசரமாகவும் அவசியமாகவும் செப்பனிட்டுத் தர ஆவன செய்யுமாறு இதனோடு சம்பந்தப்பட்டவர்களை மிகவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

-சமீம், காத்தான்குடி.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):-4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk




### தினமும் நீ போராடு!

இலட்சியங்கள் என்றென்றும்
தொடர் கதையாகத்
தொடரட்டும்.....
உன் இறுதி மூச்சு
உள்ளவரை
உன் இலட்சியத்தை - நீ
கைவிட்டு விடாதே!
கனவுகள் கண்ணோடு
இலட்சியங்கள் நெஞ்சோடு
உன்னை வெல்ல
யாருமேயில்லை.
உறுதியோடு - தினமுரசே
தினமும் போராடு!

-ந.பிறேமா, வத்திராயன்.

# வாசக(ர்) சாலை

## அறிவுக்கு விருந்தாகும் முரசே!

முரசுக்கு என் கோடான கோடி நன்றிகள்.

இன, மத, பேதமின்றி அனைவருக்கும் பொதுவான, நடுநிலையான செய்திகளைத் தாங்கி இவ்வகிலம் முழுவதும் வளம் வருகின்ற என் அன்பான முரசுக்குக் கோடான கோடி நன்றிகள். சிறியோர் முதல் முதியோர் வரை படித்துப் பயன்பெற இனிமையான, புதிரான அம்சங்களை உள்ளடக்கி ஊர் சுற்றுகிறாய். அறிவுக்கு விருந்தாகும் முரசே, நீ சென்ற மாதம் தாங்கி வந்த அத்தனை செய்திகளும் என் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தன. உன் வரவானது ஒவ்வொரு நாளும் தொடராக வரவேண்டும் என்பதே எனது அவா.

முரசே ஓர் அறிவுப் பசி தீர்க்கும் ஆசான் போல அன்பானவன் நீ. தொடர்ந்து இவ்வுலகம் உள்ளவரை நீ வரவேண்டும். அதனை நான் பார்க்க வேண்டும். உறங்கும் உள்ளத்திற்கு உணர்வூட்டும் முரசே, நீ வாழ வேண்டும். தொடர்ந்து வெளிவர வேண்டும். நாள் முழுதும் வர வேண்டும். உன் சேவையை தினம் தினம் பலர் பாராட்ட வேண்டும். நற் செய்திகளையும், புதிய புதிரான தகவல்களையும் தரவேண்டும். தினமுரசின் வளர்ச்சியை ஸ்திரப்படுத்த வல்லவன் அல்லாஹ்விடம் கரம் ஏந்துகிறேன். தினம் வாழ்க வளமுடன் என வாயார வாழ்த்தும் பல "வாசகர் வட்டத்தில் நானும் ஒருவன் 'முல்லைக் கலைமகன்'.

-றஸீன் றஸ்மின், கொத்தாந்தீவு.

### தினமுரசு வேண்டும்!

திசை யாவுக்கும்
தினமுரசு வேண்டும்
தடுமாறும் செய்தியறிய
தினமுரசு வேண்டும்
அதிசயங்களை
அறிந்திட
தினமுரசு வேண்டும்
இருபதையும்
அறுபதையும்
சந்தோச வானில்
சிறகடித்துப்
பறக்க வைக்க
தினமுரசு வேண்டும்
தாய் நாட்டின்
துயர் பாடத்
தினமுரசு வேண்டும்
தடுமாறித்
தவறிடும் மக்களுக்குத்
தினமுரசு வேண்டும்.

-அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் - 01.

# ஆரையம்பதி நிவாரணக் கொள்ளையர்களைக் கைது செய்!

## போராட்டம் வலுவடைகிறது; ஏனைய பெருச்சாளிகளுக்கும் எச்சரிக்கை

சுனாமி கடற் பேரலை அனர்த்தத்தினால் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு உட்படப் பல கரையோரப் பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டு நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் உயிர்களை இழந்து, இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகி அவதியுறும் நிலையில், கோடானுகோடியாக இலங்கைக்குள் கொட்டப்படும் பணத்தையும் பண்டங்களையும் மக்களுக்கு வழங்காமல் கொள்ளையிடும் ஊழல் பெருச்சாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு மக்கள் எழுப்பும் குரல் ஓங்கியொலிக்கிறது. கடந்த பதின்மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரையம்பதியிலுள்ள மண்முனைப் பற்றுப் பிரதேச செயலகத்தின் பின்புற வளவுக்குள் புதைக்கப்பட்டிருந்த பதினொரு வகையான அத்தியாவசியப் பொருட்கள் மக்களால் தோண்டியெடுக்கப்பட்டு அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து ஊழல் விவகாரத்துக்கெதிரான மக்கள் போராட்டம் சூடு பிடித்துள்ளது. தமக்குத் தரப்பட வேண்டிய நிவாரணப் பொருட்கள் ஊழல் பேர்வழிகளால் கையாடப்படுவதாக சுனாமி அவலம் ஆரம்பித்த காலப்பகுதியிலிருந்து இன்று வரை மக்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது. சுனாமி நிவாரணப் பணிகளைக் கையாள்வதற்காக அவசரகாலச் சட்டவிதி கொண்டுவரப்பட்டபோதிலும் ஊழல் பெருச்சாளிகள் மீது இதுவரை பயன்மிக்க நடவடிக்கை எடுக்கப்படாததேன் என்றும் மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

மண்முனைப்பற்றில் காலாவதியான பொருட்களே புதைக்கப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். அப்படியானால் காலாவதியான பொருட்கள் பொலித்தீன் பைகளில் போட்டு அடைக்கப்பட்டுப் புதைக்கப்பட்டதேன்? பொதுச் சுகாதார சேவைப் பரிசோதகர்களினதும் பிரதேச சபை அதிகாரிகளினதும் வாக்குமூலங்களில் முரண்பாடுகள் காணப்படுவது ஏன்? மேலிருந்து கீழ் வரை ஊழல் இராஜாங்கமே நடப்பதால் ஒழுக்காற்று விசாரணைகளையும் நடவடிக்கைகளையும் வெறும் கண்துடைப்பென்றே மக்கள் கருதுகிறார்கள். நிவாரணப் பொருட்களென்ற பெயரில் ஹெலிகொப்டர்கள், நவீன ரகக் கார்கள், ஆண்மைக் குறைவுக்குப் பயன்படுத்தப்படும் வயாகரா வில்லைகள் போன்ற பொருட்களும் தொண்டர் நிறுவனங்களென்ற பேரில், தம்மைத் தொண்டர் நிறுவனங்கள் என்று கூறப்படுபவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் துயரத்திலும் அவலத்திலும் வாட, தன்னார்வத் தொண்டர் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் தமது தொப்பையைப் பெருக்கிக்கொள்கிறார்கள். அரசு உஷாராக வேண்டும்.

### புலிகள் மீதான தாக்குதல்கள் பற்றி விசாரணை


மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலி முக்கியஸ்தர்கள் மீது பெப்ரவரி முதலாம் திகதி முதல் மார்ச் இரண்டாம் திகதி வரையிலான ஒரு மாத காலப் பகுதிக்குள் நடத்தப்பட்ட தாக்குதல்கள், படுகொலைகள் பற்றி விசாரணைகளை நடத்துவதற்காக இதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்முயற்சிகளில் இறங்கியுள்ளது. இரு மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட இந்த ஆணைக்குழு புலிகள், படையினர், பொலிஸார், மக்கள் தரப்பினரிடமிருந்து சாட்சியங்களைக் கோரியுள்ளது. இக் காலப்பகுதியில் குறிப்பிட்ட மாவட்டங்களில் சுமார் பத்துக்கு மேற்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்டோர் கொல்லப்பட்டிருந்தும்கூட புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றியே இக் குழு விசாரணை நடத்துவது ஓரவஞ்சகமெனக் கூறப்பட்டாலும் உண்மைகளை வெளிக்கொணரப் புலிகள் உதவுவார்களென்று நம்புவதாக அந்த ஆணைக்குழு அதிகாரியொருவர் கூறினார்.

### காணவில்லை

யாழ்ப்பாணம், கோண்டாவில் வாகீஸ்வரி வீதியைச் சேர்ந்த யோகராஜா சுஜிதா என்ற பதினெட்டு வயது மாணவியைக் கடந்த இரு வாரங்களாகப் பெற்றோர் தேடி வருகின்றனர். கடந்த நான்காம் திகதி யாழ்.நகரிலுள்ள தனியார் கல்வி நிலையமொன்றுக்குச் சென்ற இந்த மாணவி, பின்னர் வீடு திரும்பவில்லையெனப் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

### ஓட்டோ சாரதி கொலை; ஓட்டமாவடியில் கண்டனப் பேரணி





ஓட்டமாவடியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான அப்துல் ஹமித் அப்துல் றஹிம் கடந்த எட்டாம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரை - கிரிமிச்சை எனுமிடத்தில் வைத்துப் புலிகளால் கொல்லப்பட்டதைக் கண்டித்து கல்குடாத் தொகுதி முஸ்லிம்கள் வீதி மறியல் போராட்டம் நடத்தினர். கண்டனப் பேரணியும் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் போராட்டத்தில் காலை முதல் பகல் வரை கலந்துகொண்டு புலிகளுக்கெதிரான கோஷங்களை எழுப்பினர். மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஸ்ரீன் ஜோர்கென்ஸன் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எம்.ஜயதிலக ஆகியோர், பேரணி நடந்த இடத்திற்கு வந்து மகஜர்களைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து வீதி மறியல் போராட்டம் முடிவுக்கு வந்தது.

"புலிகளே! அப்பாவி முஸ்லிம் மக்களின் உயிர், உடைமைகளை வேட்டையாடும் ஈனச் செயலை நிறுத்து", "இனப்படுகொலைகளைக் கைவிடு", "மாற்றுக் கருத்துக் கொண்டோரின் கருத்துக்கு மதிப்பளி", "புலிசார்பு தமிழ் ஊடகங்களே நியாயத்தைக் கடைப்பிடி", "புலிகளின் அடக்குமுறைக்கு இனி அடங்கிப் போகமாட்டோம்" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். ஓட்டோ சாரதியை வாகரைக்கு அழைத்துச் சென்று புலிகளிடம் கையளித்த மூன்று முஸ்லிம்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வீதி மறியல் போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டதை மேலேயுள்ள படத்திலும், மகஜர் கையளிக்கப்படுவதை கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

### நேரடி நிதியுதவி இல்லை

அமெரிக்காவினால் உலகளாவிய பயங்கரவாத இயக்கங்களென்றும், வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கங்களென்றும் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்புகளுக்கூடாக எந்தவிதப் பொருளாதார உதவிகளும் வழங்கப்படக் கூடாதென்று 'யூ.எஸ்.எய்ட்' என்றழைக்கப்படும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை நிறுவனம் கடந்த வாரம் அறிவித்துள்ளது. உலகளாவிய பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கெதிராக யுத்தத்தை நடத்திவரும் அமெரிக்கா, இதனைப் பின்பற்றிப் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி செல்வதைத் தடுக்க வேண்டுமென்றும் கோரியுள்ளது. 'அல் கொய்தா' போன்ற அமைப்புகளை உலகளாவிய பயங்கரவாத இயக்கங்களின் கீழும் புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமென்பதன் கீழும் அமெரிக்கா தடை செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

### ஹரோல்ட்டை வெளியேற்றக் கோரிக்கை

இலங்கைக்கு வழங்கப்படும் நிவாரண நிதியுதவிகளைப் புலிகளும் பெறக்கூடிய பங்காளிகளென்று கூறியதன் மூலம் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி மாபெரும் தவறை இழைத்துள்ளாரென்று கண்டனம் தெரிவித்திருக்கும், 'இலங்கையில் சமாதானம், ஐக்கியம், மனித உரிமைகளுக்கான அமைப்பு' ஹரோல்ட்டை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு கோரியுள்ளது. இந்த அமைப்பின் தலைவரான டாக்டர் டி.ஜெயசூரியா அவுஸ்திரேலியாவிலிருந்து விடுத்த அறிக்கையில் இவ்வாறு கோரியுள்ளார்.

### உலக வங்கி உதவியளிக்காது

"உலக வங்கியில் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்துவ நாடுகளுக்கு மட்டுமே நிதியுதவிகளும் தொழில்நுட்ப ஆதரவும் வழங்கப்படும். கிளர்ச்சி இயக்கங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படுவதில்லை" என்று உலக வங்கியின் தகவல் தொடர்பு முகாமையாளர் டேமியன் எஸ்.மக்மிலன் தெரிவித்தார். "எமது அங்கத்துவ நாடுகளின் இறைமையுள்ள அரசாங்கங்களை மட்டுமே நாம் அங்கீகரிக்கிறோம். பிரச்சினைக்குரிய அல்லது பிணக்குகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளவர்களின் நிலைமைகளைக் கையாள முடியுமெனில் இந்த அரசாங்கங்களோடு இணைந்தே செயற்படுகிறோம்" என்றும் அவர் கூறினார். கிளர்ச்சிவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக உலக வங்கி கொண்டிருக்கும் கொள்கை என்னவெனக் கேட்டபோது, ஒவ்வொரு நாட்டினதும் இறைமைக்கு மதிப்பளித்து, எம்மிடம் வருபவர்களுக்கு உதவியளிக்க எம்மாலானவற்றைச் செய்ய முயற்சிக்கிறோம்" என்று பதிலளித்தார்.

### வீட்டுக்கு ஒருவர்

"வீட்டுக்கு ஒருவரென்ற ரீதியில் கட்டாயம் இளைஞர்கள் இயக்கத்தில் சேர வேண்டும். இல்லையேல் அக் குடும்பம் இப் பகுதியை விட்டு வெளியேற வேண்டும்" என்று திருமலைப் புலிகளின் தளபதி சொர்ணம் தெரிவித்தார். கடந்த 14ஆம் திகதி சம்பூரில் பொதுமக்களுக்கென நடத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். "சமாதான காலத்திலுமா ஆட்சேர்ப்பு?" என்று பொதுமக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது, "மீண்டும் யுத்தத்துக்குத் தயாராகிறோம்" என்று சொர்ணம் பதிலளித்தார்.

### தமிழ் மக்களுக்கு சிங்களப் படிவங்கள்

யாழ்.மாவட்டத்திலுள்ள புத்தூர் விவசாய வங்கியில் வைப்புச் சான்றிதழ் பத்திரங்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்து, தமிழில் பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட வங்கியின் முகாமையாளர் தமிழ்ப் பத்திரங்களைப் பெறத் தவறியதேன் என்றும் சிங்களப் படிவங்களை விநியோகித்ததேன் என்றும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

### 'சிங் பெய்ன்'னுக்கும் தடை

அயர்லாந்துக் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவின் 'சிங்பெய்ன்' நிதி சேகரிப்பில் ஈடுபடக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சிங் பெய்ன் அமைப்பின் தலைவர் ஜெரி அடம்ஸ் அமெரிக்காவுக்கு ஒரு வார கால விஜயத்தை மேற்கொண்டிருந்த தருணத்திலேயே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வங்கியொன்றினைக் கொள்ளையிட்டதாகவும் வட அயர்லாந்தில் ரோமன் கத்தோலிக்கரான ரொபர்ட் மக்கார்ட்னி என்பவரைக் கொலை செய்ததாகவும் அயர்லாந்து இராணுவத்தின் மீது குற்றஞ்சாட்டப்பட்டதையடுத்தே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட 'பெரிய வெள்ளி' சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் ஐ.ஆர்.ஏ. மீது பிரிட்டன் குற்றஞ்சாட்டியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

### யாழ்ப்பாணத்தில் விபத்து மோதல் தடுப்பு முயற்சி

யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் ஏற்படும் இடத்துக்கு உடனடியாக விரைந்து சென்று விசாரணை நடத்தவும் அசம்பாவிதங்களைத் தடுக்கவும் விசேட போக்குவரத்துக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாழ். நீதித்துறை அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இதற்கான முடிவெடுக்கப்பட்டது. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற இராணுவ ட்ரக்டர் விபத்தில் மாணவியொருவர் மரணமாகியமையும் சாவகச்சேரியில் நடைபெற்ற இராணுவ - சிவிலியன் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டியொருவர் காயமுற்றதையடுத்து களேபரங்கள் ஏற்பட்டமையும் குறித்து கவனத்தில் கொண்டு அவற்றைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை விபத்தில் சம்பந்தப்படும் இராணுவத்தினர் தான்தோன்றித்தனமாகத் தமது வாகனங்களை ஓட்டிச் செல்வது தடுக்கப்பட வேண்டுமென்றும் இக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது. யாழ்.ஆஸ்பத்திரி வீதி விபத்தில் ட்ராக்டரை அப்புறப்படுத்த சிப்பாய் முயன்றதையும் சாவகச்சேரி வீதி விபத்தில் இராணுவ வாகனம் பொலிஸார் வருவதற்கு முன்னதாகவே முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதையும் நீதித்துறைத் தரப்பினர் சுட்டிக் காட்டினர்.

### சிப்பாய்க்கு மறியல்

நீர்வேலிப் பகுதியில் கடந்த பதினோராம் திகதி வயோதிப மாது ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முனைந்தாரென்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### வன்னிச் சிறையில் 61 நாட்களைக் கழித்த லண்டன் தமிழர் விடுதலை

வன்னிக்கு வரவழைக்கப்பட்டு 61 நாட்கள் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ராஜசிங்கம் ஜெயதேவா என்பவர், பிரிட்டிஷ் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அலுவலகம் எடுத்த திட்டவட்டமான முயற்சியையடுத்துக் கடந்த ஒன்பதாம் திகதி விடுவிக்கப்பட்டார். லண்டனில் வசித்துவந்த இவர், தீவிர புலி ஆதரவாளராவார். புலிசார்புக் கட்டுரைகளை ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதி வந்த 49 வயதான இவர், லண்டனிலுள்ள ஈழ பதீஸ்வரர் சிவனாலயத்தின் முகாமைத்துவ தர்மகர்த்தாவாகவும் அங்குள்ள தமிழர் வீடமைப்புச் சங்கத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றி வந்தவர். லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தோடு ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளையடுத்து பிரபாகரன், ஜெயதேவாவைப் பார்த்துப் பேச விரும்புகிறாரென்று கூறி வன்னிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். கடந்த வருடம் டிசம்பர் 27ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்த இவர், மற்றுமொரு லண்டன் பிரஜையான விவேகானந்தன் என்பவரோடு ஜனவரி 8ஆம் திகதி வன்னி போய்ச் சேர்ந்தார். அன்றைய தினமே புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளுக்குப் பொறுப்பாக வன்னியில் செயற்படும் வீரகத்தி மணிவண்ணன் என்பவரைச் சந்தித்து தாம் லண்டனில் சேகரித்த 23,500 ஸ்ரேலிங் பவுண்களை வழங்கினர். தலைவர் இவர்களைக் காண விரும்புகிறாரென இருவரது கண்களையும் கட்டி அழைத்துச் சென்ற புலிகள், இவர்களைச் சித்திரவதை செய்து, லண்டன் பத்தீஸ்வரர் சிவன் ஆலயத்தின் பொறுப்பை நாகேந்திரம் சீவரத்தினம் என்பவருக்குக் கையளிப்பதாகக் கூறும் லண்டனில் தயாரிக்கப்பட்ட அட்டர்னி தத்துவமொன்றினைக் காட்டி அதில் கையெழுத்து வாங்கிய பின்னர் விவேகானந்தனை விடுவித்தனர். லண்டன் திரும்பிய விவேகானந்தன் ஜெயதேவாவின் குடும்பத்தினருக்கு நிலைமைகளை அறிவித்ததும், அவர்கள் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொதுநலவாய மற்றும் வெளிவிவகார அலுவலகத்தில் புகார் செய்தனர். இதனையடுத்து அன்ரன் பாலசிங்கத்தைத் தமது அலுவலகத்துக்கு அழைத்த லண்டன் அதிகாரிகள், ஜெயதேவாவை விடுவிடுக்குமாறு திட்டவட்டமாகத் தெரிவித்தனர். மார்ச் 9ஆம் திகதி விடுவிக்கப்பட்ட ஜெயதேவா, புலிச்சார்புப் போக்கைக் களைந்தெறிந்துவிட்டு லண்டன் திரும்பியுள்ளார்.

### பொதுக் கட்டமைப்பும் இழுபறி

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளைக் கையாள அரசும் புலிகளும் பொதுக் கட்டமைப்பொன்றினை விரைவில் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பிருப்பதாக நோர்வே தரப்பு நம்பிக்கை தெரிவித்தபோதும் அதற்கான சாத்தியம் தெளிவாகத் தெரியவில்லையென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண மீள்கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள மூன்று விதமான கமிட்டிகள் நியமிக்கப்பட வேண்டுமென நோர்வே யோசனை தெரிவித்துள்ளபோதும் அதிலும் சர்ச்சைகள் நிலவுவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### சமஷ்டி முறையில் சாத்தியமாகும் சமாதானத் தீர்வு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை மாற்றுவது தொடர்பிலும், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு தொடர்பிலும் ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் ஆலோசனைகள் இப்போதைய அரசியல் களத்தில் பல விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளன.

இலங்கையின் அரசியல் யாப்பின்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு தடவைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்பதால், தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தொடர்ந்தும் தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவ்வகையான சட்டத் திருத்தங்களைச் செய்ய முயற்சிக்கிறார் என்று சில கருத்துக்கள் உண்டு.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு அந்த அதிகாரங்களை வழங்குவது சிலரின் அரசியல் தேவையாக இருந்தாலும், இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையோ, அதிகாரமுள்ள பாராளுமன்ற முறையோ உதவப் போவதில்லை.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை உருவாக்கிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவே, தமிழர்களின் அல்லது தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதற்கும் ஒடுக்கப்படுவதற்கும் காரணமான சில சட்டத் திருத்தங்களைச் செய்துகொண்டார். அதற்குப் பிறகு இப்போதிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா விரும்பியும் இந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கு ஒரு கௌரவமான தீர்வைக் கண்டுவிடவில்லை.

அடுத்ததாக, பாராளுமன்றமானது இப்போதும் சரி, எப்போதும் சரி பெரும்பான்மையினப் பிரதிநிதிகளின் ஆதிக்கத்தையுடையதாகவே இருக்கிறது. இருக்கவும் போகிறது. இது கூட தற்போதிருக்கும் தேர்தல் முறைமை காரணமாக தமிழ் பேசும் மக்களுக்கு அதிக பிரதிநிதித்துவத்தைக் தரப்போவதில்லை. இந்தக் குறைபாட்டினால் தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த எந்தவொரு தீர்மானத்தையும் சட்டத் திருத்தத்தையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாதுள்ளது. ஜனாதிபதி முறையில் மாற்றம் செய்து பாராளுமன்றத்துக்கு அதிகாரங்கள் குவிக்கப்பட்டாலும் இதே நிலைதான் நீடிக்கும். ஆகவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இருக்கும் ஒரே ஒரு வழி அதிகாரத்தைப் பகிர்வதாகும். அதனை சமஷ்டி ஆட்சி முறைமையூடாகவே வழங்க முடியும். ஆகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமஷ்டி அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழ்த் தரப்புகள் ஆதரவளித்து இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வது நல்லது. இனப் பிரச்சினைத் தீர்வுக்கு எட்டியிருக்கும் மற்றுமொரு நல்ல வாய்ப்பாக இதைக் கருதலாம். அவ்வாறன்றி இதற்கு தேவையற்ற விமர்சனங்களை முன்வைப்பதும், மீண்டுமொரு ஆட்சி மாற்றத்தை விரும்புவதும் காலத்தை இழுத்தடிக்கும் கபடத்தனமான முயற்சியே தவிர வேறெதுவுமாக இருக்க முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி சந்திரிகாவிடமிருந்து கைமாறினால் ஒருவேளை இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தந்துவிடுவார்கள் என்று எண்ணினால், அதைப் போல் மடைமை இருக்க முடியாது. பல வாய்ப்புகளைத் தவறவிட்ட தமிழினம் இதுவரை காலமும் அனுபவித்து வந்த துயரங்களுக்கு இனியாவது முடிவு காணப்படல் வேண்டும். இந்த உறுதியைத் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டு செயலாற்றுவது காலத்தின் தேவையாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# சமரசம் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையின் இன்றைய நிலையைப் பார்க்கும்போது அரசியல் காட்டுக்குள் செம மழையென்றுதான் கூற வேண்டும் போலுள்ளது. யானைகள் பிளிறுகின்றன. சிங்கங்கள் கர்ச்சிக்கின்றன; புலிகள் உறுமுகின்றன. போதாக்குறைக்கு நரிகளும் ஊளையிடுகின்றன. வடக்கு, கிழக்கின் உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள் வதற்கென அரசும் புலிகளும் இணைந்து உருவாக்கிய 'சிரான்' என்னும் உப கமிட்டியிலிருந்து புலிகள் வெளியேறி அடுத்த மாதம் 21ஆம் திகதியோடு இரண்டாண்டுகள் பூர்த்தியாகப் போகின்றன. இந்த உப கமிட்டிக்கு அதிகாரங்கள் போதாதென்று கூறிக்கொண்டு பேச்சுவார்த்தை மேசையை விட்டு விலகியோடிய புலிகளைத் தாஜா செய்து மீண்டும் மேசைக்குக் கூட்டிவர சர்வதேச சமூகமும் இலங்கை அரசும் எடுத்து வந்த முயற்சிகள் இன்றுவரை பலனளிக்கவில்லை. இதற்கிடையில் வடக்கு, கிழக்கில் சுனாமி கடற்பேரலைத் தாக்கத்தினால் ஏற்பட்ட அழிவுகளையும் அவலங்களையும் கையாளுமுகமாக அரசும் புலிகளும் இணைந்து பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்கும் முயற்சிகளும் இந்தக் கடற்பேரலையைப் போல் முன்னேறியும் பின்வாங்கியும் வருகின்றன.

திகழ்ந்தவர்கள் புலிகளென்பதை இம் முயற்சிகளை அசை மீட்டிப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும். முதலில் அரசும் புலிகளும் இதய சுத்தியோடு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பெருவிருப்போடு பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும். எந்த எதிர்த் தரப்பும் வழங்கத் தயாரில்லாத யோசனைகளை முன்வைப்பதே புலிகளின் தந்திரம். இப்போதும் அந்த உத்தியையே அவர்கள் கையாளுகிறார்கள்.

ஆளும் கூட்டமைப்புக்குள்ளிருக்கும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி., அதன் அச்சாணியாகச் செயற்படும் சுதந்திரக் கட்சியோடும் அதன் தலைவியான ஜனாதிபதியோடும் முக்கிய விடயங்களில் முரண்பாடுகளைக் கொண்டுள்ளதென்பது உண்மைதான். தேசிய உற்பத்தி சார்ந்த பிரச்சினைகள், அந்நிய நாடுகளுக்கு எமது வளங்களையும் நிறுவனங்களையும் கையளிப்பது, சமாதானப் பேச்சு, பொதுக் கட்டமைப்பு போன்ற விடயங்களிலெல்லாம் முரண்பாடுகள் நிலவுகின்றன என்பது உண்மைதான். இரு தரப்பு முரண்பாடுகளும் சந்திக்கு வந்துவிட்டமையும் உண்மைதான். இடைக்கால அதிகாரசபை பற்றியோ பொதுக் கட்டமைப்புப் பற்றியோ புலிகளுடன் பேசினால் ஆளும்

பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேசத்தின் நலனை முதன்மைப்படுத்தி ஐக்கியப்பட்டுச் செயற்படும் நோக்கத்தை விடுத்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவது எப்படியென்ற நோக்கிலேயே முக்கியமான கட்சிகள் நடந்துகொள்கின்றன. ஆளும் கூட்டுக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளால், அது எந்த நேரமும் கவிழலாமென எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்து நிற்கின்றன. அண்மையில் இ.தொ.கா. அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்தபோது ஜே.வி.பி.யை உசுப்பிவிடுவதற்கான நடவடிக்கைகள் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

அது மட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலும் நெருங்கிக்கொண்டிருப்பதால் அரசியல் சித்து

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சை முன்கொண்டு செல்வதற்கு இரு தரப்பும் சேர்ந்து அமைக்கக்கூடிய அனர்த்த நிவாரணப் பொதுக் கட்டமைப்பு ஓர் ஏறுபடியாக அமையுமென்று நோர்வேயும் இலங்கையின் சமாதான முயற்சிகளில் அக்கறையோடிருக்கும் ஏனைய நாடுகளும் கொண்டிருக்கும் நம்பிக்கை கடலரிப்புக்குள் ளாகிக்கொண்டிருக்கிறது. இதோ வருகிறது; அதோ வருகிறது பொதுக் கட்டமைப்பென்று அரசாங்கமும் நோர்வேயும் அவ்வப்போது அறிவித்தாலும், இக் கட்டமைப்பின் முக்கிய பங்காளியாக விளங்க வேண்டிய புலிகள் வழமை போல் 'அரசுக்கு அக்கறையில்லை' என்று கூறி, தமக்கு ஏதோ அக்கறையிருப்பதாகக் காட்டிக்கொள்ள முயல்கின்றனர்.

புலிகளென்றாலும் சரி அவர்களின் முகவர்களாகச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களாயினும் சரி, தமது புலி எஜமானர்கள் கூறுவதையோ கிளிப்பிள்ளை போல் ஒப்புவிக்கின்றனர். 'அரசுக்கு அல்லது ஜனாதிபதிக்குச் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஆர்வமில்லை. அதனால் இழுத்தடிக்கிறது' என்பதே இவர்களின் வாதம். சமாதானப் பேச்சுகளென்றாலும் சரி, பொதுக் கட்டமைப்பு என்றாலும் சரி, அரசும் ஜனாதிபதியும் தமது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக்கொடுத்து நெகிழ்வுப் போக்கோடு பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்கிறார்கள். முன்னர் இடைக்கால அதிகார சபை பற்றிப் பேசுவதற்கு மறுத்து வந்த ஜனாதிபதி, இப்போது அது பற்றிப் பேசவும் தயாரென அறிவித்திருக்கிறார். இடைக்கால அதிகாரசபையில் மட்டுமல்ல, பொதுக் கட்ட மைப்பிலும் கூடத் தமக்கே கூடுதல் பிரதிநிதித்துவம் தேவையென்பதே புலிகளின் நிலைப்பாடு. வடக்கு, கிழக்கில் இன்னமும் ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகளிலும் பிள்ளைகள் பிடிப்பிலும் புலிகள் ஈடுபட்டு வருகிறார்களென் பதற்கு, ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான், கொபி அனானின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணு, யுனிசெப் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோர் விடுத்திருக்கும் அறிக்கைகளும் அறிவிப்புகளும் சான்று பகரும்.

**இனியொரு யுத்தத்துக்குத் தமிழ் மக்களால் முகங்கொடுக்க முடியாது. கருணாவின் பிளவுக்குப் பின்னர் புலிகளால் முன்னர் போல் நின்றுபிடித்துப் போராடவும் முடியாது. வடக்கிலும் கிழக்கிலுமுள்ள புலிகளின் தளப் பிரதேசங்கள் பற்றிய அக, புற நிலைமைகள் குறித்து கருணா அணியினருக்கு முற்றும் தெரியும். யுத்தமொன்று ஏற்பட்டால் நிச்சயம் அவர்கள் பிரபா அணிப் புலிகளோடு இணைந்து செயற்படமாட்டார்கள். பிரபாகரனோடு கருணா முரண்பட்டுக்கொண்டபோது 'அடித்தால் மொட்டை வைத்தால் குடுமி' என்ற நிலைப் பாட்டில் அரசாங்கம் விடயங்களைக் கையாண்டிருந்தால், ஆகக் குறைந்தது கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாவது காணாமல் போயிருக்கும். இதைப் புலிகளும் தமிழ் மக்களும் நினைத்துப் பார்க்க வேண்டும்.**

திம்புப் பேச்சுவார்த்தையைத் தவிர இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்டுவந்த சகல முயற்சிகளும் சிதறிப் போனதற்குக் காரணகர்த்தாக்களாகத் கூட்டமைப்பை விட்டு வெளியேறுவோமென்று ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்தபோதிலும், 'ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு' பற்றிப் புலிகளுடன் பேசுவேனென்று ஜனாதிபதி அடித்துச் சொல்லியிருக்கிறார். அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறார். சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையிலான முரண்பாடுகளில் மூக்கை நுழைக்க வேண்டிய தேவை புலிகளுக்குக் கிடையாது.

புலி இயக்கத்துக்குள் முரண்பாடுகள் வந்தால் மாத்தயா, கருணா போன்றோரைக் கையாண்டது போல் துப்பாக்கிகளால் தீர்த்துவிட்டு துரோகிகளென்று நாமம் சூட்டிவிட முடியும். ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இணைந்துகொண்ட ஆளும் கூட்டமைப்பு தமது முரண்பாடுகளைப் பேசித்தான் தீர்க்க முடியும். இல்லையேல் பிரிந்துசென்றுதான் தீர்க்க முடியும். இனியொரு யுத்தத்துக்குத் தமிழ் மக்களால் முகங்கொடுக்க முடியாது. கருணாவின் பிளவுக்குப் பின்னர் புலிகளால் முன்னர் போல் நின்றுபிடித்துப் போராடவும் முடியாது. வடக்கிலும் கிழக்கிலுமுள்ள புலிகளின் தளப் பிரதேசங்கள் பற்றிய அக, புற நிலைமைகள் குறித்து கருணா அணியினருக்கு முற்றும் தெரியும். யுத்தமொன்று ஏற்பட்டால் நிச்சயம் அவர்கள் பிரபா அணிப் புலிகளோடு இணைந்து செயற்படமாட்டார்கள். பிரபாகரனோடு கருணா முரண்பட்டுக்கொண்டபோது 'அடித்தால் மொட்டை வைத்தால் குடுமி' என்ற நிலைப் பாட்டில் அரசாங்கம் விடயங்களைக் கையாண்டிருந்தால், ஆகக் குறைந்தது கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாவது காணாமல் போயிருக்கும். இதைப் புலிகளும் தமிழ் மக்களும் நினைத்துப் பார்க்க வேண்டும்.


கடந்த இரண்டு வருடங்களாகச் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தடையாக இருக்கும் புலிகளே சமரச முயற்சிகளுக்குப் பிரதான சவாலாகத் திகழ்ந்து வருகின்றனர். சமாதான முயற்சியில் ஈடுபடும் இரு தரப்புகளிலொன்றான புலிகள், தமது அணுகுமுறையில் நெகிழ்வுப் போக்கைக் காட்டாத வரை 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற நிலையே தொடர்ந்திருக்கும். இதேவேளை சமரச முயற்சிகளுக்குச் சவால் விடும் பல்வேறு நடவடிக்கைகளில் பெரும்பாலான கட்சிகளும் ஈடுபட்டு வருகின்றன என்பதே அம்மணமான உண்மையாகும்.

"பேச்சுவார்த்தை மூலமன்றி யுத்தத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று நினைப்பவர்கள் மனநோயாளிகளாவர். யுத்தத்தைப் பற்றிப் பேசும் இவர்கள், தமது பிள்ளைகளை யுத்த களத்துக்கு அனுப்புவதில்லை" என்று ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்த கருத்து, யாரை நோக்கி வீசப்பட்ட அம்பு என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டிய தேவையில்லை. ஜாதிக ஹெல உறுமய, தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம், ஏன் ஜே.வி.பி. கூட யதார்த்த நிலைமைகளைக் கவனத்திலெடுக்கத் தவறுவது கவலைக்குரியதாகும். இருபதாண்டு கால யுத்தத்தின் விளைவாக மிஞ்சியவை மரணங்களும் அழிவுகளும்தான் என்பதை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். புலிகளால் நியமிக்கப்பட்ட எம்.பி.க்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் போலிச் சமாதான முகமூடிகளைப் போட்டுக்கொண்டே சமாதானத்துக்கு ஆதரவாகப் பேசுவது போல்தான், ஐக்கிய தேசியக் கட்சியும் பேசி வருகிறது. இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இணங்கிச் செயற்படத் தயாரென்று முன்னைய சந்திரிகா அரசோடு 'லியம் பொக்ஸ்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஐ.தே.க.வினர், புலி ஆதரவு நிலைப்பாட்டை எடுப்பது போன்ற தோற்றப்பாட்டையே காட்டி வருகின்றனர். புலிகளின் யோசனைக்கேற்ப இடைக்கால சபை பற்றிப் பேசு, பொதுக் கட்டமைப்பை புலிகளின் விருப்பத்துக்கேற்ப ஏற்படுத்து, பீற்றர் ஹரோல்ட் கூறியதாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய கருத்துக்களெல்லாம் சரியானவை என்று புலிக்குச் சார்பாகவே ஐ.தே.க. பிரமுகர்கள் வாதிடுகின்றனர். எதிர்க்கட்சியென்றால் ஆளும் கட்சி முன்வைப்பதையெல்லாம் எதிர்க்கின்ற ஒரு பாணியிலேயே விவகாரங்கள் கையாளப்படுகின்றன. அதாவது, இனப் பிரச்சினையென்ற தேசிய முக்கியத்துவம் மிக்க

விளையாட்டுகள் வேகம் பெற்றத் தொடங்கியுள்ளன. இலங்கையின் அரசியல் யாப்பின்படி இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியொருவர் பதவி வகிக்க முடியாதென்ற காரணத்தால் அரசியல் யாப்பை மாற்றி, பாராளுமன்றத்துக்கு அதிகாரத்தை வழங்கி, பிரதமராகச் சந்திரிகாவைக் கொண்டுவரும் முயற்சிகள் ஒரு புறம். இல்லையெனில் யாரைச் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதென்ற இழுபறி மறுபுறம். மஹிந்த ராஜபக்ஷவா? அனுரா பண்டாரநாயக்காவா என்ற குத்துவெட்டுகள் இப்பொழுதே ஆரம்பித்துவிட்டன. ஆளும் கூட்டமைப்புக்குள் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கு மிடையிலான முரண்பாடுகள் மட்டுமல்ல, சுதந்திரக் கட்சிக்குள்ளேயே மஹிந்தவா? அனுராவா? என்ற இழுபறியும் அம்பலத்துக்கு வந்து நிற்கிறது. இந்த ஏட்டிக்குப் போட்டியான அரசியல் குழப்பங்கள் கூட சமாதானம் அல்லது சமரச முயற்சிகளுக்குச் சவால்களாக இருப்பவைதான். ஏனெனில், பல்வேறு கட்சிகளும் இனப் பிரச்சினைத் தீர்வுக்குப் பொது இணக்கப்பாட்டுக்கு வருவதற்குப் பதிலாகத் தமக்குள்ளும் வெளியிலும் குத்துவெட்டுகளில் ஈடுபடுவதையே முதன்மைப்படுத்தி நிற்கின்றன.

இந்த நிலையில் மீண்டுமொரு நல்ல செய்தியை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் ஜோஸ்யம் போல் கூறியுள்ளார். பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதில் அரசும் புலிகளும் நல்ல இணக்கப்பா டொன்றினைக் கண்டிருப்பதாகவும், இது சமாதானப் பேச்சுக்கள் சிறந்த முறையில் முன்னேற வழிவகுக்கு மென்றும் ஜான் பீற்றர்சன் கூறியுள்ளார். எட்டு நாடு களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தமிழ்ச்செல்வன் தரப்பினரை ஒஸ்லோவில் சந்தித்துப் பேசிய பின்னரே பீற்றர்சன் இந்த ஜோஸ்யத்தைச் சொல்லியுள்ளார். முன்னரும் பல தடவைகள் சொல்ஹெய்ம் சொன்ன வார்த்தைகள் நம்பிக்கையூட்டுபவையாக இருந்தபோதிலும், பின்னர் ஏமாற்றமாகவே முடிந்ததால் இதனையும் எத்தனை தூரத்துக்கு நம்ப முடியுமோ தெரியவில்லை. அப்படியானால் அஞ்சல் ஓட்டத்தில் சொல்ஹெய்ம் வெற்றிபெற்றுவிட்டாரா? அரசும் புலிகளும் அரவணைத்துக்கொள்வார்களா? வார்த்தைகளால் அடித்துக்கொள்வார்களா? அரசினதும் புலிகளினதும் யோசனைகளைக் கவனத்திலெடுத்து நோர்வே தயாரித்த பொதுக் கட்டமைப்பு யோசனைகளின் அடிப்படையில் புலிகள் பேச முன்வந்துள்ளனரென்றே சொல்லப்படுகிறது. அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் செயலாற்று அதிகாரமிக்க ஜனாதிபதி அமைப்பு முறை தொடர்பாகவும் இரண்டொரு மாதங்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப் போவதாக வெளிவரும் தகவல்கள், சில வேளைகளில் புலிகள் தமது உத்திகளை மாற்றுவதற்கு உந்துதலாக அமைந்திருக்கலாம். உண்மையிலேயே பேச்சுக்குத் தொடர்ந்தும் புலிகள் சவால் விடுத்து வந்தால் நிலைமை மோசமடையுமென்பதைத் தவிரச் சொல்வதற்கு வேறொன்றுமில்லை. அடுத்த மாத முடிவுக்குள் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் புலிகளும் நோர்வேயும் காலக்கெடு விடுத்துள்ளதாகவும் இல்லையேல் நிலைமை மோசமடையலாமென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாகத் தெரிகிறது. மூன்று கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டுமென்றும் மூவினப் பிரதிநிதிகளையும் கொண்ட முதல் கமிட்டியும் பத்துப் பிரதிநிதிகளைக் கொண்ட இரண்டாவது கமிட்டியில் புலிகளுக்கு ஐந்து அங்கத்த வர்களும் அரசுக்கு மூன்றும் முஸ்லிம்களுக்கு இரண்டு மெனவும் மூன்றாவது கமிட்டி மாவட்ட மட்டங்களில் செயற்படுவதற்கும் நோர்வே யோசனை தெரிவித்துள்ளது. புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளல்லர் என்பது அடிக்கடி நோர்வேக்கு மறந்துபோய்விடுகிறது. என்றாலும் என்றுமே ஏவுகணைகளை வீசிக்கொண்டிருக்கும் புலிகள் வழிக்கு வருவார்களா? ■

# சு.ப.வின் ஐரோப்பிய சுற்றுலா



சுனாமிக்குப் பின்னரான மீள் கட்டுமாணம் தொடர்பில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ள பொதுக் கட்டமைப்பு விவகாரம் அரசுக்கும், புலிகளுக்குமிடையே தற்போதைக்குப் பந்தாடப்படும் விடயமாகிவிட்டது. இதே பொதுக்

**புலிகளுக்கு ஐரோப்பிய விஜயத்தை ஏற்பாடு செய்தது குறித்து நோர்வே பிரதிநிதிகளிடம் கேட்கப்பட்டபோது, பொதுக் கட்டமைப்பு தொடர்பில் ஏனைய நாடுகளில் உள்ள நடைமுறைகளைப் புலிகள் தெரிந்துகொள்ளத்தான் என்று கூறப்பட்டது. அப்படியானால் சமஷ்டி பற்றி ஒஸ்லோவில் பேசப்பட்டதற்கு ஆக்கபூர்வமான இலாபத்தைக் காண முடிந்ததா?**

கட்டமைப்பு தொடர்பில் புதிய வரைவொன்றை நோர்வே தயாரித்து அதைப் புலிகளிடம் முன்வைத்திருப்பதாகவும் அதைப் புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் செய்திகள் அடிபடுகின்றன.

இதற்கு அரசு தரப்பு எவ்வகையான இணக்கப்பாட்டை வெளிப்படுத்தப் போகிறது என்பதும் புரியாத புதிராகவே இருக்கிறது. இதற்குப் பிரதான காரணமும் உண்டு. நோர்வே அரசு தயாரித்த பொதுக் கட்டமைப்புத் திட்டம் குறித்துப் போதுமான விளக்கத்தை இன்னும் வெளியிடவில்லை. இதுவே நோர்வேயின் செயற்பாடுகளில் ஏற்கெனவே சந்தேகம் கொண்டுள்ள தரப்புகளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. நோர்வேயைப் பொறுத்தவரை இலங்கை விவகாரத்தில் பன்மைத்துவத்தையோ ஜனநாயகத் தொடர்பாடல்களையோ கொண்டிருப்பதை விடவும், புலிகளை ஆசுவாசப்படுத்துபவர்களாகவும் அவர்களின் சகல செயற்பாடுகளையும் நியாயப்படுத்துபவர்களாகவும்தான் இருந்து வந்துள்ளனர் - இருந்து வருகின்றனர். அப்படியானவர்கள் தயாரித்த பொதுக் கட்டமைப்பு ஆலோசனையும் அதற்குப் புலிகள் சம்மதம் தெரிவித்திருப்பதும் புலிகளுக்கு அதிக வாய்ப்பைத் தரக்கூடியதாக இருக்குமென்றே எண்ணத் தோன்றுகிறது. ஆக, நோர்வேயின் இவ்வாறான திரைமறைவு சித்து விளையாட்டுக்கள்தான் அதன் செயற்பாடுகளைச் சந்தேகிக்க வைக்கின்றன. அது தவிர, அவை அரங்கேறுகின்றபோது அதிர்ச்சியையும் எதிர்ப்பையும் தோற்றுவிக்கின்றன. இதில் அவதானிக்க வேண்டிய மற்றுமொரு முக்கிய விடயம், மேற்படி பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களின் பங்கு அல்லது அவர்களின் ஆலோசனைகள் எந்தளவில் உள்வாங்கப்பட்டுள்ளன என்பதாகும். வெறுமனே புலிகளையும் அரசாங்கத்தையும் சமரசப்படுத்துகின்ற வட்டத்துக்குள் இந்தப் பொதுக் கட்டமைப்பை அமைத்துவிட முடியாது. பொதுக் கட்டமைப்பிலும் சரி, நிரந்தரத் தீர்வுவிலும் சரி, முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள் கட்டாயம் கவனத்தில் எடுக்கப்படுதலின் அவசியம் இன்று சகல மட்டத்திலிருந்தும் உணரப்பட்டுள்ளது. இந்த இடைவெளியையும் நோர்வே எந்தளவில் உள்வாங்கியிருக்கும் என்பதும் சிந்திக்க வைக்கிறது. புலிகளையும், அரச தரப்பையும், முஸ்லிம் தரப்பையும் உள்ளடக்கிய ஆலோசனை ஒன்றை நோர்வே வரைந்திருந்தால், ஏன் இத்தனை இரகசியமாகக் கையாள வேண்டும்? புலிகளுக்கு ஐரோப்பிய விஜயத்தை ஏற்பாடு செய்தது குறித்து நோர்வே பிரதிநிதிகளிடம் கேட்கப்பட்டபோது, பொதுக் கட்டமைப்பு தொடர்பில் ஏனைய நாடுகளில் உள்ள நடைமுறைகளைப் புலிகள் தெரிந்துகொள்ளத்தான் என்று கூறப்பட்டது. அப்படியானால் சமஷ்டி பற்றி ஒஸ்லோவில் பேசப்பட்டதற்கு ஆக்கபூர்வமான இலாபத்தைக் காண முடிந்ததா? புலிகளைப் பொறுத்தவரை வேறு நாடுகளைப் பார்த்துத்தான் இங்கே நிர்வாகம் செய்ய வேண்டுமென்ற நிலையில் இல்லை. அதற்கான அவசியமுமில்லை. இந்தப் பயணத்தைப் பொறுத்தவரை புலம்பெயர்ந்த நாடுகளில் புலிகளின் பெயரால் அறவிடப்படுகின்ற நிதி குறித்தும், ஆயுதக் கொள்வனவு குறித்தும் சம்பந்தப்பட்ட தமது பிரதிநிதிகளுடனான நேரடிச் சந்திப்புக்களைச் செய்வதே புலிகளின் நோக்கமாகும். இது உலகமறிந்த உண்மையாக இருக்கையில், நோர்வே யாருடைய காதில் பூவைச் சுத்தப் பாக்கிறது என இலங்கையின் பாமரக் குடிமகனும் புரிந்துகொள்வான்.



ஐரோப்பிய நாடுகளில் வைத்துப் பேசினால் என்ன, ஆகாயத்துக்கு மேலே வைத்துப் பேசினால் என்ன, அந்தத் திட்டங்களும், தீர்மானங்களும் இங்கே இலங்கை மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டுவரப்பட வேண்டும். அது ஏற்புடையதா, இல்லையா என்பதைக் கடைசியில் தீர்மானிக்க வேண்டியவர்கள் இவர்கள்தான் என்பதை மனதில் கொள்வது நல்லது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணத்தை எந்தளவுக்குத் தடுக்கவும் தாமதப்படுத்தவும் முடியுமோ, அதுவே இப்போது நடந்து வருகிறது. இதனால் அரசுக்கு எதிராக எதிர்ப்புக் குரல் அதிகரிக்க, அதிகரிக்க புலிகள் மீது எதிர்பார்ப்பு வளரும் என்றும், அவர்களின் தலையீடு நியாயம் என்றும் மக்கள் உணரத் தலைப்படுவார்கள் என்று புலிகள் போட்ட கணக்குத்தான் இந்த இழுத்தடிப்பும், பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஒரு ஐரோப்பிய சுற்றுலா

**தான் நடத்திய ஊழித் தாண்டவத்தை இப்படியெல்லாம் பித்தலாட்டம் செய்து அரசியலாக்குவார்கள் என்று தெரிந்திருந்தால் சுனாமி கூட வெட்கித்து, ஒருவேளை இந்தப் பாவப்பட்ட பூமியைத் தாக்காமலிருந்திருக்கும்.**

என்ற நாடகமும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறுகிறார்கள். தான் நடத்திய ஊழித் தாண்டவத்தை இப்படியெல்லாம் பித்தலாட்டம் செய்து அரசியலாக்குவார்கள் என்று தெரிந்திருந்தால் சுனாமி கூட வெட்கித்து, ஒருவேளை இந்தப் பாவப்பட்ட பூமியைத் தாக்காமலிருந்திருக்கும்.

சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் பன்னிரண்டு பேர் கொண்ட புலிகளின் குழுவினர் ஐந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்பும் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் தேவையற்ற தாமதம் நிலவுமானால், இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்த நோர்வேயும் பெரும் எதிர்பார்ப்புகளை உண்டு பண்ணியவர்களும் எந்த முகத்தோடு மீண்டும் சமூகத்துக்கு முகங்கொடுப்பரீர்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


மொத்தத்தில் இந்தப் பொதுக் கட்டமைப்பு விவகாரமும் தோற்றுப்போய், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்துவருவது போலவே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாக மாறிவிடும் சூழலே அதிகரித்துள்ளது. அப்படி ஒரு நிலைதான் உருவாகுமென்றால் மக்கள் பிரதிநிதிகளாக எவரும் தேவையில்லை. மக்களே சுதந்திரமான முடிவுக்கு வரவேண்டியதுதான். ஒருவேளை, பொதுக் கட்டமைப்பு அமைக்கப்பட்டால் அதன் பிரதான பங்கை வகிப்பவர்களிடமிருந்து பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நியாயத்துக்காக தனியாகச் சேவகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கியமும் ஏற்படலாம். அப்போது நோர்வேயோ, சர்வதேசமோ தட்டிக் கேட்காது, கண்களை இறுக மூடிக்கொள்ளும் என்பதே உண்மை.

அலசுவது

**- மதியூகி -**

---

## அதிரடி அய்யாத்துரை



**அதிகார** அம்மணிக்கும் சிவப்புச் சட்டைக்காரருக்கு மிடையில விலக்குப் பிடிக்கிறதே சில அமைச்சர்மாருக்கு வேலையாப் போச்சுது. சிவப்புச் சட்டைக்காரர் கொஞ்ச நாளா தொட்டாச் சிணுங்கி மாதிரி தொட்டதுக்கெல்லாம் சிணுங்கிக்கொண்டிருந்திச்சினம். அம்மணிக்குத் தலையிடி தாங்க முடியாமல் போகவும் 'விருப்பமெண்டால் இருங்கோ இல்லாட்டில் போங்கோ' எண்டு பொதுவாகத்தான் சொன்னவ. அதுக்குப் பிறகு உந்த சிவப்புச் சட்டைக்காரர் கொஞ்சம் அட்க்கி வாசிக்குமாப் போலத்தான் தெரியுது.

இப்ப என்னடாவெண்டால் சிவப்புச் சட்டை மேக்கப்பில இருந்து காவி கெட்டப்புக்குத் தாவின மாதிரித் தெரியுது. அம்மணிக்கு உந்த ட்ராமாவெல்லாம் பிடிக்காது எண்டது தெரிஞ்ச விஷயந்தானே! அம்மணி பிடிவாதமா நிக்கிறாவாம். உந்த கூட்டு 'கேப்பில' எங்கட கூத்தமைப்பாரும் ஒரு லொறி ஓட்டப் பாத்ததுதான் நகைப்புக் குரியது. 'சிகப்புச் சட்டைக்காரரை விரட்டினீங்கள் எண்டால் நாங்கள் ஆதரவு தருவம்' எண்டிருக்கினம். காடு கிடக்கிற கிடையில மானங் கெட்ட கரடிகள் காவடி ஆடிச்சுதுகளாம்.

**இலங்கைக்கு** சுதந்திரம் கொடுத்த நாட்டில கோயில் கட்டி நடத்திவந்த ஜெயதேவமானவர் பிறந்த பூமியைப் பார்க்க வந்தாராம். ரெண்டெழுத்தார் கோயிலை தங்களிட்டை ஒப்படைக்க வேணுமெண்டு அவரை மிரட்டி எழுதி வாங்கிப் போட்டு, அவரையும் வன்னியில தடுத்து வைச்சிருந்தவையாம். அவற்ற மனிசி, பிள்ளைகள் அந்த நாட்டு எம்பஸியில 'சொந்த நாட்டுக்குப் போன வரை ரெண்டெழுத்தார் தடுத்துப் போட்டினம்' எண்டு கொம்பிளைன் பண்ண, அவை ஆலோசகரை நெருங்கியிருக்கினம். பாவம் பிரஸர் பிடிச்ச ஆலோசகர் அழாக்குறையா செட்டலைட்டில குளறி அவரை விடுவிச்சவராம். தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் எண்டிட்டு, நாடும் வேண்டாம், நிலமும் வேண்டாமெண்டு ஜெயதேவமானவர் அரச பரம்பரை நாட்டுக்கே போயிட்டாராம்.

**கிழக்குக்** கட்சி இப்ப பல கிளைக் கட்சியாப் போட்டுது எண்டது பழைய கதை. ஆனால் அதின்ர தலைவர் கொஞ்ச நாளாவே ரொம்பவும் காட்டமான அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறார். என்னடா இந்த மனிசன் வன்னிக்குப் போய் கை குலுக்கி, மிக்ஸர் சாப்பிட்டுக் கையொப்பம் போட்டவரெல்லோ! இப்ப அதே ரெண்டெழுத்தாரை விமர்சிக்கிறாரே எண்டு பாத்தன்.

இவரோடை செய்துகொண்ட ஒப்பந்தத்தை தட்டிக்கழிச்சது மட்டுமில்லாம இவுரை ஓவர் டேக் பண்ணுற மாதிரி, ரெண்டெழுத்தார் - தங்கட தலைமைக்குள்ளதான் அவையளும் எண்ட கணக்கா பொலிற்றிக்ஸ் பண்ணினமாம். அப்ப பதுங்கக்கேயே இது பாயப் போகுது எண்டு இவருக்கு நெருக்கமானவை சொன்னவையாம். அது இப்பதான் புரியுதெண்டு தலையில அடிக்கிறாராம். யானையும் புலியும் விரட்டுது எண்டு மரத்தில ஏறி நிக்கிறார். அதுவும் சரிஞ்சுடாமல் பாத்துக்கொள்ளுங்கோ.

**வவுனியாவில** கூத்தமைப்பு மூலமா எம்.பி.யானவர் - அதானுங்கோ முந்தி சிவப்புச் சிலுவையில வேலை செய்து எமர்ஜன்சி கதவால இன்டோ பண்ணி பார்லிமெண்டுக்குள்ள எண்ட்ரியானவர், ஊரில தன்ர கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டாராம்.

அரச சேவை செய்யிறவையை அதிலும் தாய்குலத்தை ரெண்டெழுத்தாற்ர பெயரைச் சொல்லி மிரட்டிறாராம். பாத்தியளோ? பூச்சாண்டி வறான் எண்டு குழந்தைக்குச் சாப்பாடு தீத்திற மாதிரி இவர் ரெண்டெழுத்தாற்ர நாமத்தைச் சொல்லி விரட்டிறாராம். தன்ர காலில விழுந்தாத்தான் அவை அரசாங்க வேலையைக் கூட செய்ய முடியுமாம். எல்லாம் பாழாய்ப்போன பாராளுமன்றப் பதவி படுத்திற பாடெண்டு உத்தியோகத்தர்கள் கதைக்கினமாம்.

**முகமாலையில** இருக்கிற ரெண்டெழுத்தாரின்ர சோதனைச் சாவடியில நடந்த சம்பவம் ஒண்டு தெரியுமோ...? சனங்களெல்லாம் லைனில நிண்டு வெயிலில் கஞ்சுகொண்டிருக்க ஒரு பொடிப் புள்ள குறுக்கால நுழைஞ்சு ரெண்டெழுத்தாரைப் பாத்து சினேகிதமாச் சிரிச்சவராம்.

அதில செக்கிங்குக்கு நிண்ட ரெண்டெழுத்துச் சின்னப் பொடிக்கு இவற்ர பல்லிளிப்பின்ர காரணம் பிடிபடயில்லை. என்னெண்டு கேக்கவும், 'அது நான் மீடியா' எண்டு தன்ர ஐ.சி.யைக் காட்டினவராம். உடன, "வாங்கோ" எண்டு கூப்பிட்டாராம். பாவம் சனம், வெயிலுக்க நிக்குதுகள். இவை அவைக்குப் பக்கப் பாட்டுப் பாடிப்போட்டுப் பாத்தியளோ! எவ்வளவு திமிரா ஐ.சி. காட்டிறார் எண்டு அதில் நிண்ட சனத்தில திட்டாத சனமில்லையாம். மீடியா எப்பிடிப் பாதாளம் வரையும் பாயுதெண்டு பாத்தியளோ!

**கிரிமிச்சையில** ஆட்டோ ஓட்டின சகோதரர் ஒருவர் சுடப்பட்டவரெல்லோ! அதுக்கு எதிர்ப்புத் தெரிவிச்சு அந்தச் சனம் ரெண்டெழுத்தாரைத் தாறுமாறாப் பேசினவையாம். ஆர்ப்பாட்டம் நடந்த இரவு அவையளிட்டை போன இப்ப அரசியல் பொறுப்பானவரான இளந்திரையன் சொன்ன கதை ஆச்சரியமா இருக்கு. "எங்கட இயக்கத்தில இருக்கிற சில எளியதுகள் உப்பிடியான வேலைகளை சில நேரங்களில தங்கட இஷ்டத்துக்குச் செய்து போடுறாங்கள். அதால எங்களுக்குத்தான் அவமானம். ஆனால் இதொண்டும் தலைமைக்குத் தெரியாது" எண்டு உருகினவராம். இப்ப தெரியுதோ எப்படியான பொலிற்றிக்ஸ் தெரிஞ்சவரைப் பொறுப்புக்குப் போட்டிருக்கினமெண்டு. அதிலையும் "குற்றவாளிகள் யாரெண்டதை முஸ்லிம்கள் விரைவில் கண்டுகொள்ளுவினம்" எண்டொரு அறிக்கையும் விட்டிருக்கிறார்.

# சதி வலைக்குள் தமிழ் - முஸ்லிம் உறவு!

## எதிர்காலத்தில் காத்திருக்கும் சுனாமியை மிஞ்சும் பேரழிவு

*(சென்ற வாரத் தொடர்ச்சி.....)*

அத்தோடு எல்.ரி.ரி.ஈ. இயக்கம் ஏன் அவருக்கு உயர் பதவியைக் கொடுத்து வைத்திருக்கின்றது?

முஸ்லிம்களையும் அரவணைத்துத்தான் நாம் செல்கின்றோம் எனத் தமிழ்ச்செல்வன் கூறுவது உண்மையாக இருந்தால் கடந்த காலங்களில் அதனை நிரூபிக்கப் பல சந்தர்ப்பங்கள் இருந்தன.

சிங்களப் பேரிவாதிகள்தான் தமிழ்- முஸ்லிம் உறவைச் சிதைக்கச் சதி செய்தார்கள் என்றால், இவர்கள் அதனை முறியடிக்கப் பாடுபட்டிருக்கலாமே. அப்படியானால் தமிழ், முஸ்லிம் உறவு சீர்குலைவதற்குக் காரணமான, முஸ்லிம்களைப் படுகொலை செய்வதற்குத் தன்னிச்சையாக முடிவெடுத்த கரிகாலன் போன்றவர்கள் சிங்களப் பேரினவாதத்தின் கைக்கூலிகளாகவா செயற்பட்டார்கள்?

கிழக்கு மாகாணத்தின் பல சிறிய கிராமங்களிலிருந்தும் பூர்வீகப் பூமிகளிலிருந்தும் 1985ஆம் ஆண்டிலிருந்து கட்டங் கட்டமாகத் துரத்தப்பட்ட முஸ்லிம்கள், இன்று நாட்டின் பல மாதங்களிலும் அகதிகளாக அலைகிறார்கள். அவர்களது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களை சுமார் 20 வருட காலமாக எல்.ரி.ரி.ஈ.யினர் செய்கை பண்ணி வருகின்றனர். தமிழ்ச்செல்வன் கூறுவது போல அவர்கள் முஸ்லிம்கள் மீது கரிசனை கொள்வது உண்மையாக இருந்தால் ஏன் இந்த அகதி முஸ்லிம்களை மீள் குடியமர வருமாறு கேட்டு அவர்களது விவசாயக் காணிகளை மீள ஒப்படைக்க முடியாது?

சமாதான உடன்படிக்கைக்குப் பின்னராவது, வடபகுதியிலிருந்து உடுத்த உடையுடன் துரத்தப்பட்ட முஸ்லிம்களை ஏன் குடியமர அழைக்கக் கூடாது? சுயநிர்ணய உரிமை கோரிப் போராடும் பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள், ஏன் இந்த விடயங்களையும் ஒரு அம்சமாகச் சேர்த்துப் போராடக் கூடாது? முஸ்லிம்கள் தமது பூர்வீகப் பகுதிகளில் சுதந்திரமாகத் தொழில் செய்ய ஏன் அனுமதிக்கக் கூடாது?

தனியே நிர்வாகம் செய்வதற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுவிட்டதாகக் கூறும் புலிகள், அனைத்து உடைமைகளும் தங்களால் அபகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கான இழப்பீடுகளை ஏன் சிபார்சு செய்யக் கூடாது? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியாக 30 கோடி ரூபாவை ஒதுக்கிய புலித் தலைவர் பிரபாகரன் அதில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு எத்தனை கோடியைச் சிபார்சு செய்துள்ளார்? தமிழீழத்தில் ஆகக் கூடுதலான உயிர், உடைமை இழப்பு முஸ்லிம்களுக்குத்தானே?

முஸ்லிம்களின் நலனில் தாம் அக்கறை கொண்டவர்கள் என இப்பொழுது கூறிக்கொள்ளும் புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்தில் ஒன்றை முஸ்லிம் ஒருவருக்கு வழங்கி தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டியிருக்கலாமே. தேர்தல் காலத்தில் வேட்பாளர் பட்டியலில் சில முஸ்லிம் நபர்களின் பெயர்களும் போடப்பட்டு முஸ்லிம்களின் வாக்குக் கொள்ளையடிப்பு இடம்பெற்றதே! ஏமாந்த முஸ்லிம்கள் சிலர் புலிகளினதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காரர்களினதும் பசப்பு வார்த்தைகளை நம்பி வாக்களித்தார்கள்.

புலிகளுக்கு முஸ்லிம்களின் நலனில் அக்கறை உண்டென்றால் அவர்களால் இயக்கப்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் எத்தனை முஸ்லிம்களைப் பணிக்கமர்த்தியிருகிறார்கள்?

புலிகள் முஸ்லிம் சமூக நலன்களிலோ அல்லது பொதுவான சமூக நலன்களிலோ அக்கறையற்றவர்கள் என்பதை நிரூபிக்க இன்னும் எத்தனையோ விடயங்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

ஆக மொத்தத்தில் எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் புலிகள் முஸ்லிம்களை ஏமாற்றுகிறார்கள். தொடர்ந்தும் ஏமாற்றப் போகிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகிவிட்டது.

முஸ்லிம்களை, குறிப்பாகக் கிழக்கிலுள்ளவர்களை எதையெதையோ சொல்லி ஏமாற்றி வளைத்துப் போட வேண்டிய தேவை புலிகளுக்கு இப்போது அவசியமாகவும் அவசரமாகவும் ஏற்பட்டுள்ளது. சுனாமி கடற் கொந்தளிப்பினால் புலிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களும், இலங்கை அரசுக்குக் கிடைத்து வரும் சர்வதேச ஆதரவும் நிதியுதவிகளும் புலிகளைக் கிலிகொள்ள வைத்திருக்கின்றன. சர்வதேச அரசியல் போக்கும் புலிகளுக்குச் சாதகமாக இல்லை. அத்தோடு அடிக்கு மேல் அடியாக கிழக்கிலே முனைப்புப் பெற்று வரும் கருணாவின் செயற்பாடுகளாலும் புலிகள் தமது மூத்த உறுப்பினர்களையும் மக்கள் ஆதரவையும் இழக்க வேண்டிய சூழ்நிலை. கிழக்கு வடக்கிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்ற கூக்குரலும் வலுத்து வருகிறது.

இதனுடன் புலிகள் அமைப்பை சர்வதேசப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய அமெரிக்கப் படையினரும், புலிகளின் பரம வைரியான இந்தியப் படையினரும் இலங்கையில் நிலைகொண்டிருக்கின்றார்கள். போதாக்குறைக்குப் புலிகளைக் குற்றவாளிகள் எனத் தேடும் இன்ரபோல் பொலிஸாரும் இங்கு வந்துள்ளார்கள். புலிகளுக்கு இன்னமும் ஒரு பெரிய தலையிடியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிலும் புலிகளுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட இருக்கின்றன.

எனவே உள் நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் இதுவரை சந்தித்திராத இவ்வாறான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் புலிகள், யார் காலில் விழுந்தாவது இந்த நிலைமையைச் சீர் செய்யவோ திசை திருப்பவோ முயற்சிக்கின்றார்கள்.

அந்த வகையில் அவர்களுக்கு இப்போதைக்குக் கிடைத்த துருப்புச் சீட்டு தமிழ் முஸ்லிம் உறவும் முஸ்லிம்களும்தான். எப்பாடுபட்டாவது தமிழ் - முஸ்லிம் உறவு என்ற பசப்பு வார்த்தையைக் காட்டி முஸ்லிம்களைத் தமது சதிவலைக்குள் சிக்க வைக்கப் புலிகள் முயற்சிக்கின்றார்கள். இதன் மூலமாக முக்கிய பல காரியங்களைச் சாதிக்க அவர்கள் நினைக்கிறார்கள். முக்கியமானவை சில....

சிறுபான்மையினரின் உரிமையைப் பெற முஸ்லிம்களும் இணைந்துவிட்டார்கள் எனக் காட்டிக்கொள்வதன் மூலம் பெரும்பான்மைச் சிங்கள மக்களினதும் படையினரதும் வெறுப்புக்குரியவர்களாக முஸ்லிம்களை ஆக்குவது. கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களைப் படையினருக்கு எதிரான தளங்களாக மாற்றுவது. முஸ்லிம் சமூகத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்தி படையினருக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளைத் தூண்டுவது, முஸ்லிம் சமூகத்தினுள் தமக்குச் சார்பான ஒரு சிலருக்கு ஆயுத உதவியளித்து காலப்போக்கில் அந்தக் குழுக்களை ஒசாமாவின் அல்-கைதா அமைப்புடன் தொடர்புள்ளதாகச் சித்திரித்து அமெரிக்காவிடம் இலங்கை முஸ்லிம்களை மாட்டிவிடுவது, கிழக்கில் பலம்பெற்று வரும் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் என்ற அமைப்பை சிதைவுறச் செய்வது என இப்படியான காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் தாம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமெனப் புலிகள் நினைக்கிறார்கள்.

### ஹுசைன் பின் ஹமீத்

அதுவுமல்லாமல் தமிழ் - முஸ்லிம் உறவை ஏற்படுத்துவது இவர்களது இதய சுத்தியான நோக்கமல்ல. தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்தது புலிகள் அமைப்பினர்தானே. திருகோணமலையில் தமிழ் - முஸ்லிம் - சிங்கள உறவை வளர்க்கும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு யூ.என்.எச்.சி.ஆர். அமைப்பு முயற்சி மேற்கொண்டபொழுது அதனை நடத்த வேண்டாம் என்று தடுத்தவர்கள் புலிகள்தானே. முஸ்லிம்களோடு எந்த விதமான தொடர்பையும் வைத்துக்கொள்ள வேண்டாம் எனப் பிரசுரம் வெளியிட்டு, ஒலிபெருக்கியில் கூறித் திரிந்தவர்கள் புலிகள். கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட கல்குடாத் தொகுதியின் 1800 தமிழ்க் குடும்பங்களை ஓட்டமாவடி முஸ்லிம்கள் பராமரித்தபோது, முஸ்லிம் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களிலிருந்து தமிழ் மக்களை உடனடியாக வெளியேறுமாறு அச்சுறுத்தியவர்கள் புலிகள். காரணம், முஸ்லிம் ஊருக்குள் தமிழ் மக்கள் இருந்தால் தமிழ் - முஸ்லிம் உறவு வலுப்பட்டுவிடும் என்ற அச்சம் புலிகளுக்கிருந்தது.

எனவே புலிகளின் சதிவலைக்குள் தமிழ் மக்கள் சிக்கிவிடக் கூடாது. ஆடு நனைகிறது என ஓநாய் கண்ணீர் விட்ட கதைதான் இது. இப்போது சுமுக நிலையிலுள்ள தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கவே புலிகள் சதி செய்கிறார்கள். தமிழ் - முஸ்லிம் சமூக உறவு புலிகளின் கைகளுக்குள் சென்றால் எதிர்காலத்தில் சுனாமியை விடப் பேரழிவு நேரும் என்பதுதான் உண்மை.

*(முற்றும்)*

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....


முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்






**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**

**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

கடிதங்களுக்கு பதில் எழுத அவகாசம் கிடையாது. என்னிடம் மாந்திரீக பரிகாரத்தால் நன்மை பெற்ற வெளிநாட்டவர்கள், உள்நாட்டவர்கள், நற்சாட்சி கடிதங்களை அவர்களின் நலனுக்காக விளம்பரம் செய்வதில்லை.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்வீக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.

ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்

இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.

தொலைபேசி இலக்கங்கள் :

(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831

**பிரஷாந்த் :.போட்டோ**

**OUTDOOR STILL PHOTOGRAPH**


திருமணம் · பிறந்தநாள் · நடனம்

பாரிஸ், பிரான்ஸ்

தொலைபேசி : 01-44680653

மொபைல் : 06-64820239

புகைப்படவியலாளர் A.S. சந்திரன்



**நவசித்தர் மாந்திரீகம்**

ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத உடல் நோய், குடும்பப் பிரச்சினை, காதல் விவகாரம், வியாபாரம், கல்வி, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பயணம், பிரிந்தவர் ஒன்றுசேர, வேண்டாதவரை விலக்க, இன்னும் அனேக காரியங்களுக்கு மஹாசக்தி உபாசகர் மட்டக்களப்பு பரம்பரை சித்த ஆயுள்வேத மாந்தீரீக மருத்துவர்.


Dr. T. Murukuppillai (S.A.M.P.), Main Street, Pandiruppu - 01. Kalmunai, (Sri Lanka). Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077

## இன்னொருவர் பார்வையில்

# ஹரோல்ட் விவகாரமும் மேலும் முக்கிய விடயங்களும்

**"ஹரோல்ட் விவகாரமும் மேலும் முக்கிய விடயங்களும்" என்ற தலைப்பில் கே.கொடகே என்ற அரசியல் ஆய்வாளர் எழுதி கடந்த 11 ஆம் திகதிய "த ஐலண்ட்" ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது. உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் கூறியதாக வெளிவந்த சர்ச்சைக்குரிய கருத்துக்கள் பற்றி ஆரம்பத்தில் தொட்டுச் செல்லும் கட்டுரையாசிரியர், ஹரோல்ட்டின் சர்ச்சைக்குரிய கருத்துகளுக்கு மையப் பொருளாக விளங்கிய வடக்கு, கிழக்கின் உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்பு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்கிறார். தாய்லாந்தில் 2003ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுகளின் போது 'சிரான்' என்ற உடனடி மனிதாபிமான, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்துக் கொண்டே புலிகள் வெளியேறினர். வடக்கு, கிழக்கின் உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட இந்த உப கமிட்டியின் (சிரான்) அமைப்பு, அதன் பரிமாணம், அதன் திட்டங்கள் தொடர்பாக திரு.கொடகே இங்கு அலசி ஆராய்ந்துள்ளார். சுனாமி நிவாரணப் பொதுக் கட்டமைப்பில் பங்குகொள்ளத் தயாரெனப் புலிகள் தெரிவித்திருப்பதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் அறிவித்திருக்கும் இத் தருணத்தில் எமது வாசகர்களின் சிந்தனைக்கு இது உதவியாக அமையலாம்.**

பீற்றர் ஹரோல்ட் தனது பேட்டி தவறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அப்படியானால் அவர் உண்மையில் என்ன சொன்னாரென்று எங்களால் தெரிவிக்க முடியாது. எமது இறைமைக்கு உட்பட்ட பலவற்றை மதிக்கிறேனென்று அவர் தெரிவித்த அறிக்கை, அவர் உண்மையில் கூறியதை முடிமறைப்பதற்கான ஒரு பகுதியாகவோ அல்லது பிறகு யோசித்துச்



ஹரோல்ட்

சொன்னதாகவோ இருக்கலாம். தானும்கூட அந்தப் பேட்டியை ஒலிப்பதிவு செய்து வைத்துள்ளதாக ஹரோல்ட் தெரிவித்துள்ளார். அப்படியானால் அவர் உண்மையை வெளிப் படுத்துவதன் மூலம் இப் பிரச்சினைக்கு முடிவைக் காணலாம். எனவே, ஹரோல்ட் உண்மையில் என்ன சொன்னாரென்பதை எமக்குத் தெரிவிக்க வேண்டும். ஹரோல்ட்டைப் பேட்டி கண்ட சிரேஷ்ட பத்திரிகையாளரிடமும், பேட்டியின் ஒலிப்பதிவு நாடா இருப்பதாக ஹரோல்ட் தெரிவித்திருக்கிறார். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இப் பிரச்சினையின் அடியாழத்தைக் கண்டறிய வேண்டும்.

"நோர்வேக்காரருடன் ஆரம்பித்து வெளிநாட்டவர்கள் உங்கள் நாட்டைக் கையேற்றுக்கொண்டுள்ளார்கள்" என்று அண்மையில் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கூறியதைப் போன்று, நோர்வேக் காரர்களை எமது நாட்டில் தலையிடுமாறு கோரப்பட்டுள்ளதையும், அவர்கள் வகிக்கும் பாத்திரத்தையும் எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அவர்கள் புலிக்குப் பக்கச் சார்பாக இருப்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு உதவுவதை எம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், இந்தத் தருணத்தில் அல்ல. பாதிக்கப்பட்டவர்களென்று கூறப்படும் இவர்கள் 'சைலொக்கைப் போன்று முழுச் சதையையும் கேட்பதால், இது இந்த நாட்டின் அரசியல் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடும். "இந்த வெளிநாட்டுக்காரர்கள் உங்களை வெறுமனே எல்லாவற்றையும் உறிஞ்சுபவர்களெனக் கணக்கெடுத்துள்ளார்கள் போலத் தோன்றுகிறது. உங்களது சகல விடயங்களிலும் தலையிடுகிறார்கள். எந்தவொரு இராஜதந்திரியும் ஏதாவதொரு நாட்டில் இவ்வாறு சுதந்திரமாகச் செயற்பட முடியுமா?" என்று இங்கு வருகை தந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளரொருவர் அண்மையில் கேட்டிருந்தார். அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த பிரிட்டிஷ் யுத்தக் கப்பலொன்றுக்கு புலி உறுப்பினரொருவரை பிரிட்டிஷார் அழைத்துச் சென்றதையும், அந்தப் புலி உறுப்பினர் யாரென்றோ, அவர் என்ன பதவியிலிருந்தாரென்றோ தெரியாதென பழக்கப்பட்ட விதத்தில் பதிலளிக்கப்பட்டதையும் அந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சுட்டிக்காட்டினார். "இது காலனித்துவ காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டுவந்த முடியாட்சி அராஜகமில்லையா? எனினும் நீங்கள் அவர்களைத் தப்பிச் செல்ல விட்டுவிட்டீர்கள். எனவே இது உங்களுக்குக் கிடைக்க வேண்டியதுதான்" என்றும் அப் பத்திரிகையாளர் குறிப்பிட்டார்.

மீண்டும் ஹரோல்ட்டின் விவகாரத்துக்கு வருவோம். அரசாங்கம் உலக வங்கியையும் ஹரோல்ட்டையும் பிரித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் அவசரப்பட்டு முடிவுகளுக்கு வந்துவிடக் கூடாது. சுனாமி உதவியின் பெரும் பகுதி கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும் அது அறுநூறு கோடியாக இருக்க வேண்டுமென்றும் ஹரோல்ட் கூறியதாக 'சண்டே டைம்ஸ்' பத்திரிகை ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமென்றால், அவரது தவறை மறைக்க முடியாதபடி செய்வதற்காக யாராவது பாரபட்சமற்ற விசாரணையொன்றினை நடத்த வேண்டும். உண்மையில் கடந்த அரசாங்க காலத்தில் செய்யப்பட்ட தேவை மதிப்பீட்டின்படி 4,500 கோடி ரூபா (4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள்)வின் பெரும் பகுதி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குக்கு ஐந்து வருட காலத்துக்குச் செலவு செய்யப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இங்கு கவனிக்கப்பட வேண்டிய இரண்டாவது விடயமென்னவென்றால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் இல்லாமல் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படக் கூடாதென்றும், வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலுள்ள அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலுள்ளதால் புலிகளின் ஒத்துழைப்பைப் பெறுவது பயன்மிக்கதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப கமிட்டி அல்லது சிரான் என்றழைக்கப்படும் கமிட்டியும் உண்மையில் முற்று முழுதாக வடக்கு, கிழக்குக்கென உருவாக்கப்பட்ட தேயாகும். இந்த உப கமிட்டிக்குப் புலிகளின் உறுப்பினரொருவர் பணிப்பாளராகவும் சிங்கள வரொருவரும் முஸ்லிமொருவரும் பணிப்பாளர் சபையிலும் அங்கம் வகித்தனர். ஆறு மாவட்டங்களில் 642 திட்டங்களை இந்த உப கமிட்டி அங்கீகரித்திருந்ததோடு வேலைகளும் ஆரம்பிக்கப்படவிருந்தன. (எழுபது மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படுமென ஒஸ்லோவில் உறுதியளிக்கப்பட்டிருந்தது) இந்தப் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டால் ஓரளவுக்குச் சகஜ நிலை யேற்படுமென்றும் மக்கள் மேலும் யுத்தம் நடப்பதை விரும்பமாட்டார்களென்றும் நினைத்த புலிகள், 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொண்டனர். புலிகளின் திட்டம் வேறு விதமானதாக இருந்தது.

மேலே குறிப்பிட்ட உப கமிட்டி பற்றியும் முன்னைய சமாதான முயற்சிகள் குறித்தும் நாம் மீட்டிப் பார்ப்பது பயன் மிக்கதாகும்.

### உப கமிட்டியின் உருவாக்கமும் அதன் பின்புலமும்

வடக்கு, கிழக்கின் மனிதாபிமான தேவைகளைக் கவனத்திலெடுப்பதற்கும் அதனை முன்னேற்றுவதற்கும் விசேட மையக் குழுவொன்று அவசியமென்று தாய்லாந்திலுள்ள சட்டாகிப்பில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களின் ஆரம்பக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த விடயங்களைக் கவனத்திலெடுத்தே இணைந்த செயலணிக் குழுவொன்றினை உருவாக்குவது பற்றி ஆராயப்பட்டது. கூட்டத் தொடருக்கு செயற்பாட்டு ஒழுங்குமுறையொன்று முன்வைக்கப்பட வேண்டுமென்றும் அதுவே சமபந்தப்பட்ட தரப்புகளால் கூடியளவில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் உணரப் பட்டதால் உப கமிட்டியொன்று நியமிக்கப்பட்டது.

### செயற்பாடுகளின் ஆணையும் பரிமாணமும்

உப கமிட்டியின் விதிகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் உடனடித் தேவைகளைக் கையாள்வதற்கான குறுகியகாலக் கட்டமைப்பே உப கமிட்டியாகும். ஆரம்பத்தில் இந்த உப கமிட்டி வடக்கு, கிழக்கின் புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமான தேவைகளைக் கண்டறிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் அமுலாக்குவதற்கான முன்னுரிமைச் செயற்பாடுகளையும் கண்டறிய வேண்டும். முன்னுரிமைச் செயற்பாடுகளுக்காக வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியத்திலிருந்து நிதி வளங்களை ஒதுக்க முடியும். வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியத்தினால் பணம் வழங்கப்படும் திட்டங்களுக்கு, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்வு அடிப்படைக்கிணங்க இந்த உப கமிட்டி அமுல்படுத்தும் முகவராண்மை நிறுவனங்களைத் தெரிந்தெடுக்க முடியும்.

திட்டங்களை நேரடியாகப் பரிசீலனை செய்வதற்கென சுதந்திரமான ஒரு கட்டமைப்பையும், நிதி, விவகாரங்களைக் கணக்காய்வு செய்வதற்குச் சுதந்திரமான கணக்காய்வுக் கட்டமைப்பொன்றினையும் இக் கமிட்டி கொண்டிருக்கும்.

### சிரான் செயலகத்தின் அமைப்பு

விதிகள் நிபந்தனைகளின் 5.2 பிரிவுக்கேற்ப கிளிநொச்சியிலுள்ள அரசாங்க அதிபரின் அலுவலக வளாகத்தில் உப கமிட்டி செயலகமொன்றினை நிறுவியுள்ளது.

இச் செயலகம் இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்றினைச் சேர்ந்த அதிகாரியான திரு. செல்வின் இரேனஸ் என்பவரால் தலைமை தாங்கப்படுகிறது. செயலகத்தில் இரு மேலதிகப் பணிப்பாளர்கள் செயற்படுவர். இவர்கள் அரசாங்கத்தினாலும் முஸ்லிம் சமூகத்தினாலும் சிபார்சு செய்யப்பட்டவர்களாவர்.

இச் செயலகத்தில் நான்கு முக்கிய பிரிவுகள் உள்ளன. தேவையை மதிப்பீடு செய்யவும் கணிப்பீடு செய்யவுமென ஒன்று, தகவல்களை வெளியிடுவதற்கு மற்றொன்று. மேலும் கணக்கு வழக்குகள் மற்றும் கணக்காய்வு ஆகியவற்றுக்கென நான்கு முக்கிய பிரிவுகள் உள்ளன. மாவட்ட மட்டத்திலான தேவை மதிப்பீட்டுப் பணிகளைச் செயலகம் ஒருங்கிணைக்கும். அதே வேளை, மதிப்பீட்டுப் பிரிவு திட்ட யோசனைகளைக் கணிப்பீடு செய்து அதற்கான முன்முயற்சிகளை மேற்கொள்ளும். இச் செயலக ஆளணியினை இரு தரப்பினரும் சம எண்ணிக்கையினராகச் சிபார்சு செய்வர்.

கிளிநொச்சியில் அண்மையில் தற்காலிக

**உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உப கமிட்டி (அல்லது சிரான் என்றழைக்கப்படும் கமிட்டி)யும் உண்மையில் முற்று முழுதாக வடக்கு, கிழக்குக்கென உருவாக்கப்பட்டதேயாகும். இந்த உப கமிட்டிக்குப் புலிகளின் உறுப்பினரொருவர் பணிப்பாளராகவும் சிங்களவரொருவரும் முஸ்லிமொருவரும் பணிப்பாளர் சபையிலும் அங்கம் வகித்தனர். ஆறு மாவட்டங்களில் 642 திட்டங்களை இந்த உப கமிட்டி அங்கீகரித்திருந்ததோடு வேலைகளும் ஆரம்பிக்கப்படவிருந்தன.**

தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையமொன்று அமைக்கப்பட்டதுடன், இச் செயலகத்துக்கு நவீன உபகரணங்களும் தொலைத் தொடர்பு வசதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இச் செயலகத்துக்கான ஆரம்ப நிதி பத்து இலட்சம் குரோனர் நோர்வே அரசாங்கத்தினால் உதவியென்ற வடிவத்தில் வழங்கப்பட்டது. இச் செயலகத்துக்கு 35 மில்லியன் ரூபா உதவிப் பொதியொன்றினை வழங்க ஜப்பானிய அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

### வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியம்

நிபந்தனைகள் மற்றும் விதிகளின் 4ஆம் பிரிவுக்கேற்ப வடக்கு, கிழக்கு புனரமைப்பு நிதியென்ற நிதியத்தை உப கமிட்டி ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிதியத்தின் காவலராக உலக வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாவலர் ஒப்பந்தத்தின் சிக்கலான விடயங்கள் பற்றி உலக வங்கியோடு கலந்து பேசி இறுதி முடிவு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயத்தோடு உலக வங்கிக்குப் புறம்பானவையாக இருந்தாலும் உலக வங்கி உண்மையில் சமாதான விடயங்களோடு சம்பந்தப்பட்டுள்ளதென்பது குறிப்பிடக்கூடியது. ஆனால் அனுமதிப் பத்திரத்துக்கும் சுதந்திர செயற்பாட்டுக்கும் வித்தியாசமுண்டு.

மேற்கூறப்பட்ட ஸ்தாபன ஒழுங்குமுறையிலிருந்து புலிகள் விலகிய பின்னர், அப்போதைய அரசாங்கம் பல்வேறு யோசனைகளை முன்வைத்தது. வடக்கு, கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைக் கையாள்வதற்கு உச்ச அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று கடந்த அரசாங்கம் முன்வைத்த கடைசி யோசனையையும் புலிகள் நிராகரித்தனர். அந்த யோசனையின் சாராம்சம் வருமாறு:

வடக்கு, கிழக்கின் சகல உடனடி மற்றும் நடுத்தர கால புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான கொள்கைகளை வகுக்கவும் கொள்கை அபிவிருத்தி சம்பந்தமாக ஆலோசனை வழங்கவும் பலரைப் பிரதிநிதித்துவம் செய்யும் உச்ச அமைப்பொன்று (சபை) இருக்க வேண்டும்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான உள்ளக சுயநிர்ணயத்தை தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான தாயகப் பிரதேசத்துக்கு வழங்க வேண்டுமென்று 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒஸ்லோவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அரசியல் தீர்வின் கோட்பாடுகளுக்கேற்ப மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகள் இறுதித் தீர்வு ஆகியவற்றுக்கேற்ப அமைக்கப்படும் இந்த உச்ச அமைப்பு ஓர் இடைக்கால நடவடிக்கையாகவே அமையும். வடக்கு, கிழக்கிலுள்ள சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாகவும் அங்குள்ள சகல இனக் குழுமங்களின் சட்டபூர்வ அபிலாசைகளையும் உரிமைகளையும் நிறைவேற்றக்கூடிய அடிப்படையிலும் இத் தீர்வு அமைய வேண்டுமென்றும் ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்த உச்ச அமைப்பு, கொள்கை ஆலோசனையும், மீளாய்வும் செய்யும் சபையாக அமையும். வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் வேலைகள் மற்றும் செயற்பாடுகளைத் திட்டமிடுதல், முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுதல் கண்காணித்தல், அமுல்படுத்துதல் ஆகிய பொறுப்புகளும் இந்த உச்ச அமைப்பைச் சார்ந்ததாகும்.

புலிகளுக்கு முழுமையான நிர்வாகக் கட்டுப்பாடுகள் வழங்கப்படாத காரணத்தினால் அவர்கள் இந்த யோசனைகளை நிராகரித்தனர். எனவே, புலிகளோடு இணைந்து செயற்பட வேண்டுமென்ற கருத்தோட்டத்தில் புதிதாக எதுவுமில்லை. தள நிலைமைகளின் யதார்த்தத்திற்கேற்பவே இது மேற்கொள்ளப்பட வேண்டும். முன்னைய அரசு முன்வைத்த யோசனைகளிலும் பார்க்க கூடுதலானவற்றை முன்வைத்துப் புலிகளை புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கும் பொறுப்பினைப் பகிர்ந்துகொள்வதற்குமாக புலிகளை வசப்படுத்த அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால முனைந்தாரெனக் கருதுகிறேன்.

இது சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறையின் ஓர் அங்கமாகும். இது அவசியமானதே. இது புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையோடு சம்பந்தப்பட்டதுமல்ல. இவ்வாறான ஒழுங்குமுறையொன்றினை எதிர்ப்பதுகூடப் புலிகளின் கைகளுக்குள் சிக்குவதாக அமையும்.

ஓர் அங்குலத்தைக் கூட விட்டுக்கொடுக்கச் சிங்களவர்கள் தயாரில்லையென்று புலிகள் கூறுவது உண்மையல்ல. ஜே.வி.பி.யின் கடினப்போக்கு, இலங்கையைத் தனிமைப்படுத்துவதற்கும் புலிகளுக்கு மேலும் அனுதாபத்தையும் ஆதரவையும் தேடிக் கொடுப்பதற்குமே உதவும்.


சிறுவர் போராளிகள் பற்றிய விடயத்தில் புலிகளைக் கண்டிக்கும் சர்வதேச சமூகம், புலிகள் தமது எதிரிகளைத் தொடர்ந்தும் கொல்வது குறித்து அவர்களோடு எதுவுமே பேசவில்லையென்பதை ஜே.வி.பி. உணர்ந்து கொள்ள வேண்டும். மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் புலிகள் மதிப்பளிப்பதில்லையென்பதோடு பாசிசத் தன்மை கொண்டவர்களாகவும் உள்ளனர். பல வருடங்களாக மறுக்கப்பட்டு வந்த தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகப் புலிகள் போராடுகிறார்களென்று சர்வதேச சமூகம் கருதுவதால், புலிகளின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகப் பேசத் தயங்குகின்றனர். ஜனாதிபதி முன்முயற்சிகளை மேற்கொண்டு நீதியானதும் நியாயமானதுமான தீர்வைக் காண முனைகிறார் போலத் தெரிகிறது. 1975ஆம் ஆண்டிலிருந்து தமது தமிழீழ இலட்சியத்துக்காகப் புலிகள் செய்த தியாகங்களை மறந்து, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அமைப்பொன்றினை ஏற்றுக்கொள்வார்களா? இந்த முக்கிய தேசியப் பிரச்சினையில் தெற்கிலுள்ள இரு பிரதான கட்சிகளும் இணைந்து பொதுவான நிலைப்பாட்டொன்றுக்கு வந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். நீடித்த, நீதியான சமாதானத்தைத் தரக்கூடிய தீர்வைக் காண முடியுமா?

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அன்றைய புகழ் வாய்ந்த இசையமைப்பாளர்களான விஸ்வநாதன் - ராமமூர்த்தி, கே. வி. மகாதேவன் இவர்களிடம் பாடல்கள் எழுதினலேயல்லாது, ஓர் அங்கீகாரம் கிடைப்பது அசாத்தியம் என்பதை அறியலானேன்.

அந் நாளிலே எனக்குப் பொருளாதார சிரமங்கள் ஏற்பட்ட



போதெல்லாம் - ஐந்தும் பத்துமாகக் கொடுத்து என்னை ஆதரித்து வந்தவர் இருவர்.

அவர்களில் ஒருவர், சமீபத்தில் அமரராகிவிட்ட இசையமைப்பாளரும், இனிய பண்பாளருமான திரு.ஜி.கே வெங்கடேஷ்.

மயிலாப்பூர் கச்சேரி ரோடை ஒட்டியிருந்த அவர் வீட்டிற்கு வாரத்திற்கு ஒரு முறை போய் வருவேன்.

அனேகமாக அவரை நான் சந்திக்கச் செல்வது அதி காலையில்தான்.

அவர் துயில் நீங்கி எழுந்து வரும் வரை, அவர் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு தெருவில் போவோர் வருவோரையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பேன்.

வழக்கமாகப் பாவாடை தாவணியோடு ஒரு பெண் அந்த வழியே பால் வாங்கிக் கொண்டோ, காய்கறி வாங்கிக் கொண்டோ வந்து போவதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

அப்போது நான் நினைத்தேனில்லை - அந்தப் பெண்தான் பிற்காலத்தில் புகழ்வாய்ந்த பின்னணிப் பாடகியாகத் திகழ இருக்கும் திருமதி வாணிஜெயராம் என்று.

ஒன்பது மணியளவில் ஜி.கே.வெங்கடேஷ் வீட்டை விட்டு வெளியே வருவார். திண்ணையில் இருக்கும் என்னைக் கண்டு, பாசத்தோடு தட்டிக்கொடுத்து கோடம்பாக்கத்திற்குச் செல்லும் தன்னுடைய TAXIயிலேயே என்னை ஏற்றிக்கொள்வார்.

"கவலைப்படாதேடா, வாலி' - உன்னைத் தேடி ஏகப்பட்ட கார்கள் உன் வாசல்ல வந்து நிக்குற காலம் ஒண்ணு வரும்...." என்று என்னை உற்சாகப்படுத்தி விட்டு கையில் இரண்டு ரூபாய் கொடுத்து என்னை பனகல் பார்க் அருகே இறக்கிவிடுவார்.

ஒருநாள் திரு.ஜி.கே. வெங்கடேஷ் என் ரூமுக்குத் திடீரென்று வந்தார். நான் ஆனந்த அதிர்ச்சியோடு அவரை வரவேற்று உபசரித்தேன். நான், 'பக்கோடாவும் பச்சைத் தண்ணியும் அன்றாட ஆகாரமாகக் கொண்டிருந்த காலம் அது.

"டேய் வாலி! இனிமே நீ ரெண்டு வேளை வயிறாரத் திங்கலாம்... உனக்கு மாசம் முந்நூறு ரூபா கிடைக்கிற மாதிரி, ஒரு ஏற்பாடு பண்ணிட்டேன்.... ஏறு. என் வண்டில..." என்று என் கையைப் பற்றி இழுத்தார்.

நான் சற்று இடைமறித்துப் பேசினேன்:

"அண்ணே, எனக்கு ஆபீஸ் வேலெ வேணாம்ணே;... பாட்டு எழுதற வேலைதான் வேணும்!" என்று நான் சொன்னவுடன்;

"பாட்டு எழுதுற வேலைதாண்டா... கண்ணதாசன் பாட்டெழுதச் சொல்லுவாரு... அதெ நீ உடனே ஒழுங்காப் பேப்பர்ல எழுதணும். கவிஞர், உன்னெ அசிஸ்டென்டா வெச்சுக்க ஒத்துக்கிட்டாரு... உனக்கு அவுரு மாசம் முந்நூறு ரூபா சம்பளம் தந்திடுவாரு..." என்று வெங்கடேஷ் அண்ணன் சொன்னதும், நான் மிகுந்த மரியாதையோடு அந்த வாய்ப்பை மறுத்தேன்.


"அண்ணே, கண்ணதாசன் கடைக்கு, எதிர் கடை விரிக்க நான் வந்திருக்கிறேன். அவர்கிட்டயே உதவியாளனாச் சேர்ந்தா, என் தனித்தன்மை காணாம போயிடும்... டெய்லர் கிட்ட வேலைக்குச் சேர்ந்தா காலமெல்லாம் காஜாதான் எடுக்கணுமே தவிர, மெஷின்ல ஏத்தமாட்டாங்க...."

—இப்படி நான் சொன்னதும் திரு.ஜி.கே.வி.யின் முகம் 'ஜிவ்'வென்று சிவந்து போயிற்று.

"நீ உருப்படமாட்டேடா" என்று கோபமாகச் சொல்லிவிட்டுக் காரேறிப் போய்விட்டார்.

(தொடரும்.......)



பிளாஸ்டிக் பொருட்கள், குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள் மற்றும் வாசனைத் திரவியங்கள் (.'.பேர்பியூம்) என்பனவற்றுள் அடங்கியுள்ள இரசாயனப் பொருள் (Synthetic Oestrgen) ஆண்களது விந்தணுக்களின் மட்டத்தைக் குறைக்கக்கூடிய ஆபத்துக்களைக் கொண்டிருக்கின்றன எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதே நேரம் அசுத்தமான நீரில் வாழும் மீனினங்களை உட்கொள்வதாலும் பாலியல் ரீதியிலான கோளாறுகள் தோன்றுவதாக அண்மைய மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

மேற்படி ரகத்தைச் சேர்ந்த ஈஸ்ட்ரோஜன், சோயா உணவுகளில் இருப்பதாகவும் கருத்துக்கள் நிலவி வருகின்றன. அதாவது சோயா உணவுகளில் ஜெனஸ்டின் எனும் ஈஸ்ட்ரோஜன் உள்ளதாக இனங் காணப்பட்டுள்ளது.


# உணவுகள் உணர்வுகளும்

இந்த ஈஸ்ட்ரோஜன் குழந்தைகளுக்கான உணவு களிலும் காணப்படுவதாக அறிய முடிகின்றது.

இந்த இரசாயனப் பொருள் உடலில் கலப்பதன் மூலம் நோய்க் கிருமிகளை எதிர்த்துத் தாக்கும் சக்திக்கு ஊறு விளைவதுடன் இது புற்றுநோய்க்கும் இட்டுச் செல்லக்கூடியது என மேற்படி ஆய்வை மேற்கொண்டுள்ள குழுவின் தலைவர் சேட்ரா ச்க்ஸீன் கூறுகின்றார்.

இதனால், சோயாவினால் குழந்தைகளுக்கான உணவு களைத் தயாரிக்கும்போது மேற்படி ஆபத்துகள் நிகழக் கூடுமென பிரித்தானிய விஞ்ஞான ஆய்வுச் சபை அண்மை யில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

எனினும், இந்த ஆபத்து மனிதர்களைப் பொறுத்தவரையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் தற்போது ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. ஆனால், உலகில் மிக அதிகளவில் சோயா உணவுகளை தங்களது அன்றாட உணவுகளுடன் சேர்த்து வருகின்ற ஆசிய நாட்டவர்களிடையே இந்த ஆய்வு இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். எனினும் பல நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்கள், இந்த உணவு கர்ப்பிணிப் பெண்களுக்கு உகந்ததல்ல என்ற கருத்தை வெளியிட் டுள்ளனர்.



அசைவ உணவு வகைகளை உட்கொள் ளும் தாய்மார்களினதும் ஆசிய நாடுகளிலுள்ள தாய்மார்களினதும் பிள்ளைகளுக்கு, இவ்வாறான விந்து வெளியேறா வியாதி உள்ளதா என்ற ஆய்வுகள் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் இது தொடர்பில் உடனடியாக ஆராய வேண்டும் எனவும், இது ஒரு பாரிய பிரச்சினையாகும் என்றும் பிரித்தானிய பர்மின்ஹெம் பல்கலைக்கழகத்தின் ஈஸ்ட்ரோஜன் தொடர்பான ஆய்வு நிபுணர் கிறிஸ் கர்க் கூறியுள்ளார்.

சோயா கலந்த உணவை கன்று ஈனக் கூடிய நிலையில் இருந்த பசுவுக்கு உண்ணக் கொடுத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் அந்தப் பசுக்கள் ஈன்ற ஆண் கன்றுகளது விதைகள் மிகக் குறுகியவை களாக இருந்துள்ளமையும், பாலியல் ரீதியிலான அவற்றின் செயற்பாடுகளின்போது வித்தியாசங்கள் எதுவும் நிகழவில்லை என்பதும், விந்து உற்பத்திகளின்போது பாதிப்புக்கள் எதுவும் நிகழவில்லை என்பதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆனால் விந்து வெளியேறியதைக் காணக் கிடைக்கவில்லை என்பது நன்கு உணரப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட சோயா உணவுகளில் காணப்படக்கூடிய ஈஸ்ட்ரோஜன் இல்லாத உணவு வகைகளை உண்ணக் கொடுத்த பசுக்கள் ஈன்ற கன்றுகளுடன் மேற்படி நிலையை ஒப்புநோக்கும்போது, தெட்டத்தெளிவான வித்தியாசங்கள் காணப்பட்டதால், சோயா உணவு வகைகள் தொடர்பில் ஒரு முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சோயா உணவுகளில் புரதச்சத்து அதிகமாக இருப்ப தாக எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் மாமிச உணவுகளை உட்கொள்ளாத பலர் சோயா உணவு வகைகளை உட்கொள்கின்றனர். எனினும் இந்த உணவு எங்கள் எல்லோருக்குமே உகந்தது அல்ல என்கின்ற நம்பிக்கை எங்களிடையே இல்லை. எனினும், இன்று மேற்கண்டவாறான ஓர் ஆய்வு எங்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

கர்ப்பிணிப் பெண்கள் சோயா உணவு வகைகளை உட்கொள்வதால், அவர்களது வயிற்றில் வளரும் குழந்தைகளுக்கு அது பாதிப்பை உண்டு பண்ணுகின்றது என்ற கூற்று, மேரிலேண்ட் மருத்துவக் குழுவினர் மேற்கொண்டுள்ள இந்த ஆய்வின் மூலம் இப்போது தெரியவந்துள்ளது. வயிற்றில் வளரும் குழந்தையின் பாலியல் விருத்திக்கு நீண்டகாலத்துக்கான தடையை மேற்படி உணவு ஏற்படுத்துவதாக இந்த ஆய்வு கூறுகின்றது. அதாவது எலிகளைக் கொண்டு நடாத்திய ஆய்வின்போதே இத் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இதற்கு முன்பதாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஓர் ஆய்வின் பிரகாரம், கர்ப்பக் காலத்தில் மாமிச உணவுகளை உட்கொள்ளாத தாய்மார்கள் பெற்றெடுத் துள்ள ஆண் குழந்தைகளின் சிறுநீர்த் துவாரம் ஏனைய ஆண்களைவிடவும் வித்தியாசம் கொண்டதாக அமைந்திருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், ஈஸ்ட்ரோஜன் அடங்கிய சோயா உணவுகளை இத் தாய்மார்கள் உணவாகக் கொண்டுள்ளமையாகும் என சந்தேகிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

அதிகளவில் மிருகங்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ள மேற்படி ஆய்வுகள், மனிதர்களைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டு, இதே ஆபத்துக்கள் அதிலும் ஏற்படும் என்பது உறுதிப்படுத்தப் பட்டால், இது ஆசிய நாடுகளைச் சார்ந்தவர்களுக்கு மாபெரும் பிரச்சினையாகும் என்பது உறுதி. ஏனெனில் இன்று சோயா கலந்த உணவு வகைகளை ஆசிய நாட்டவர்களே மிகவும் அதிகமாக உட்கொண்டு வருகின்றனர்.


எங்கள் நாட்டில்கூட பல விதமான சுவைகளில் சோயா உணவு வகையறாக்கள் சந்தையில் இருக் கின்றன.

ஈஸ்ட்ரோஜன் உள்ளடங்கிய சோயா உணவு வகைகளை மிக அதிகமாக உட்கொள்வதைக் காட்டிலும் அதனைச் சாதாரணமாக ஓரளவு உட்கொண்டு வருபவர் களுக்கே மிக அதிகமான பாதிப்புகள் ஏற்படுவதாகவும் மேற்படி ஆய்வின்போது தெரிய வந்துள்ளது.

உடனடி உணவு வகைகள் என நாம் நாடிச் செல்லும் உணவு வகைகள் குறித்து ஒழுங்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வரையில் அவதானமாக இருப்பதே உகந்த செயலாகும் என மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

-பாரூக்

**உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதைக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




சேகரித்த செய்திகளில் அவனுக்கு எந்த விதமான சந்தேகங்களும் இருக்கக் கூடாது. இதை எல்லாம் கவனித்துச் செயற்படுகிறவனே சிறந்த ஒற்றனாகிறான்.

ஒற்றனின் தகுதிகளைப் பற்றி இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகின்ற வள்ளுவர், அவன் கொண்டு வருகின்ற செய்திகளை அப்படியே நம்பிவிடக் கூடாது என்றும் எச்சரிக்கிறார். ஒரு ஒற்றன் கொண்டுவந்த செய்தி சரியாகனதானா என்று இன்னொரு ஒற்றனை அனுப்பி அறிந்து வரச் செய்து அதற்குப் பிறகே அதை ஏற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

Dis-information என்பதால் வரக்கூடிய குறைகளைத் தவிர்ப்பதற்காகவே வள்ளுவர் இதைச் சொல்லுகிறார். தவறான தகவல்களை நம்பி ஆட்சியிலிருப்பவன் செயற்பட்டால் விபரீத விளைவுகளே ஏற்படும். எனவேதான் ஒரு ஒற்றனின் செய்தியை இன்னொரு ஒற்றனின் செய்தியோடு ஒப்பிட்டுப் சரிபார்ப்பது அவசியமாகிறது.

இரண்டு ஒற்றர்கள் ஒரே மாதிரியான தவறான தகவல்களைச் சேகரித்து வருகின்ற வாய்ப்பு இருப்பதையும் அலட்சியப்படுத்திவிட முடியாது. அதற்கும் பதில் சொல்லுகிறார். ஒரு ஒற்றனைப் பற்றி இன்னொரு ஒற்றனுக்குத் தெரியக் கூடாது.

ஒருவனை ஒருவன் அறியாத மூன்று ஒற்றர்கள் கொடுக்கின்ற தகவல்கள் ஒன்றாக இருந்தால் மட்டுமேதான் அதை உண்மையான தகவல் என ஆட்சியில் உள்ளவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"ஓர் உளவாளி மிகச் சிறப்பாகச் செயற்பட்டாலும் பலர் அறியும்படி வெகுமதி அளித்து அவனைக் கௌரவிக்காதே" என்கிறார் வள்ளுவர். அப்படிச் செய்வது மறைக்கப்பட வேண்டிய இரகசியங்களை அம்பலப்படுத்துவது போல் ஆகிவிடும்.

ஒற்றாடல் என்கிற அதிகாரத்தில் பத்துக் குறள்களில் ஒற்றர்களின் தேவை, அவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்கள், அவர்கள் செயற்பட வேண்டிய முறைகள், அவர்கள் கொண்டுவருகின்ற செய்திகளைப் பரிசீலிக்க வேண்டிய வழிகள் ஆகிய அனைத்து விசயங்களையும் வள்ளுவர் தெளிவாக எடுத்துக் காட்டிவிடுகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது குறள் என்றாலும், அதில் சொல்லப்பட்ட விடயங்கள் இன்றைக்கும் கருத்தில் கொள்ள வேண்டியவை என்பதில் சந்தேகமில்லை. விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து, தொழில் நுணுக்கம் முன்னேறிவிட்ட இந்தக் காலத்தில் உளவுத்துறை மேலும் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறுவது தவிர்க்க முடியாதது.

**வல்லரசுகளின் உளவு ஸ்தாபனங்கள்**

நாடுகள் வளர்ச்சியடைந்து தொழிற் பெருக்கம் ஏற்பட்டபோது நாட்டின் பாதுகாப்புக்கு அண்டைய நாடுகளின் நோக்கங்கள் பற்றிய தகவல்களைத் சேகரிக்கப்பதும் தேவையாயிற்று. பக்கத்தில் உள்ள நாடுகளின் பொருளாதார நிலைமைகளையும் வர்த்தக நோக்கங்களைப் பற்றிய தகவல்களையும் அறிந்து கொண்டால் பொருளாதார ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் எத்தகைய தொடர்புகளை வைத்துக்கொள்வது சாதகமாக இருக்கும் என்று கணிப்பதற்கும் தகவல்களை சேகரிப்பது அவசியமாயிற்று.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

**11**

இளைய மடாதிபதி விஜயேந்திரரின் சொந்த ஊரான தண்டலத்திலுள்ள வேதப் பாடசாலையில் கற்று வந்த சுரேஷ் என்ற மாணவன் மடத்து அதிகாரிகள் கூறுவது போல் குளத்தில் விழுந்து சாகவில்லை. அவனை அடித்துக் கொன்றிருக்கிறார்களென்று அடித்துச் சொல்கிறார், சுரேஷின் தாய் இராஜலட்சுமி. அவனுடைய வயிற்றில் ஒரு சொட்டுக் கூடக் குளத்துத் தண்ணி இல்லையென்று இராஜலட்சுமி மேலும் தொடர்ந்து சொன்னார். "வலது நெத்திப் பொட்டுல அடிச்ச மாதிரி காயம் இருந்துச்சு. மூக்குல இருந்து இரத்தம் வந்திருந்தது. இதெல்லாம் வெச்சுப் பார்க்கும்போது, நிச்சயம் அவன் குளத்துல விழுந்து இறந்துருக்க சான்ஸே இல்லை. யாரோ அடிச்சுதான் கொன்னு போட்டிருக்கணும்னு எங்களுக்குச் சந்தேகம் வந்தது. அதுக்கும்கூட யாரும் பதில் சொல்லலை. அவசர அவசரமா ஒரு வேனை வரவழைச்சு அதுல என் பையன் உடலை ஏத்திட்டாங்க. சடலத்தை ஊருக்குக் கொண்டுவந்து நாங்க அடக்கம் பண்ற வரைக்கும் இங்கேயே இருந்துட்டுதான் போனாங்க.

"துக்கச் செலவுக்குனு ஒரு ஐயாயிரம் ரூபா மடத்து சார்புல வேத பாடசாலையோட நிர்வாகிகள் கொடுத்தாங்க. மூணு மாசம் கழிச்சு ஐயாயிரம் ரூபாயை அவங்களே கொடுத்தாங்க. ஆனா, எங்களுக்கு நிறையப் பணம் கொடுத்த மாதிரி கணக்கெழுதி மடத்துல கொடுத்திருக்கிறதா எங்களுக்குத் தகவல் வந்துச்சு. அதனால மடத்துக்கே போய் விசாரிச்சோம். எம் பையன் கணேஷ், பாலப் பெரியவர் விஜயேந்திரரைச் சந்திச்சு, இது பத்தி சொன்னப்ப, 'ரகுவைப் பார்'னு அனுப்பிவிட்டார். அவங்க யாரும் எங்களை அதன்பிறகு கண்டுக்கவே இல்லை" என்றவர். "இப்ப மடத்துக்கு எதிரா பல விவகாரங்களைப் பொலிஸ் விசாரிக்க ஆரம்பிச்சிருக்கு. அதனால எங்க சுரேஷோட மரணம் தொடர்பாகவும் விசாரிக்கணும்" என்று வேண்டுகோளோடு முடித்தார்.

இஸ்லாத்திலும் கிறிஸ்துவ சமயத்திலும் பல பிரிவுகள் இருப்பதைப் போன்று இந்து சமயத்திலும் சைவம், வைணவம், சாக்தம் என்று இப்படி பல பிரிவுகள் இருக்கின்றன. சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்டு வழிபடுபவர்கள் சைவர்கள். விஷ்ணுவை மூலாதாரமாகக் கொண்டு வழிபடுபவர்கள் வைஷ்ணவர்கள். சங்கரமடத்து சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரர் எல்லாம் இந்துக்கள். திருக்கோட்டியூர் மாதவன், சதுர்வேதி சுவாமிகள் எல்லாம் வைஷ்ணவர்கள். சங்கர மடத்துக்கும் சதுர்வேதிக்கும் சம்பந்தம் கிடையாது. இரு தரப்புக்குமுள்ள ஒரேயொரு ஒற்றுமை பண மோசடி, மிரட்டல், பெண் சில்மிஷங்கள் போன்ற தகாத விவகாரங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமைதான். பெண்களுக்கெதிரான வன்கொடுமை, மோசடி, மிரட்டல், சித்திரவதை, அடைத்து தடுத்து வைத்தமை உள்ளிட்ட 22 பிரிவுகளின் கீழ் சதுர்வேதி சுவாமிகள் மீது சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அறுபது பக்கக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை, ஆழ்வார்பேட்டையைச் சேர்ந்த தொழிலதிபரும் கிருஷ்ண பக்தருமான ஒருவரின் மனைவியையும் மகளையும் கடத்தியமை, தடுத்துவைத்தமை, மிரட்டியமை, பாலியல் பலாத்காரம் போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி சதுர்வேதி கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். பின்னர் டிசம்பரில் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சதுர்வேதி, இப்போது சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சதுர்வேதியோடு கைதுசெய்யப்பட்ட ஏனைய நால்வரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதால் சதுர்வேதி மட்டும் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

திருக்கோட்டியூர் மாதவன் தாக்குதல் வழக்கில் ஜெயேந்திரருக்கு முன் ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி ஜாமீன் வழங்கப்பட்டது. ஜெயேந்திரரின் முன் ஜாமீன் மனுவை முதன்மை செசன்ஸ் நீதிபதி பி.முருகேசன் விசாரித்தார்.

ஜெயேந்திரர் தரப்பில் ஆஜரான வக்கீல் கே.எஸ்.தினகரன் வாதாடுகையில், "கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 3ஆந் திகதி மாதவன் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் நவம்பர் 3ஆந் திகதிதான் புகார் தரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். மாதவனுக்கு சிகிச்சை அளிக்கும்போது விபத்து காரணமாக காயம் அடைந்ததாக கூறிவிட்டு, பின்னர் 3 மாதம் கழித்துத்தான் தாக்கப்பட்டதாகப் புகார் கொடுத்துள்ளார். எனவே இதில் சந்தேகம் எழுகிறது" என்று குறிப்பிட்டார்.

அரச தரப்பில் வக்கீல் கே.துரைசாமி வாதாடுகையில், "திருக்குறுங்குடி அழகிய நம்பிராயர் கோவில் சந்நிதானத்தை இடிக்க ஜெயேந்திரர் செயற்பட்டார். இதற்கு மாதவன் எதிர்ப்புத் தெரிவித்ததால் தாக்கப்பட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

திருக்குறுங்குடி கோவிலில் வைணவர்களுக்கும் சைவ மதத்தினருக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டதால், சமரசப் பேச்சுவார்த்தை நடத்த ஜெயேந்திரர் நடனப் பெண் ஒருவரை அனுப்பினார் என்றும், இதற்கு மாதவன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் என்றும் அவர் வாதாடுகையில் குறிப்பிட்டார். தாக்கப்பட்ட பிறகு மயக்கம் அடைந்ததால் தனது காயம் பற்றி அவரால் அப்போது டாக்டரிடம் கருத்துக் கூற முடியவில்லை என்றும் அரசு வக்கீல் வாதிட்டார்.



நீதிமன்றத்துக்கு வெளியே நீதிமன்ற வளாகத்தில் அமர்ந்திருக்கும் ஜெயேந்திரருக்கு பக்தர்கள் விசிறிக்கொண்டிருக்கிறார்கள்.



வழக்கறிஞர்கள் ஜெயேந்திரருடன் வாக்குவாதம் செய்கிறார்கள்.

## முன்ஜாமீன் தர உத்தரவு

ஜெயேந்திரருக்கு முன் ஜாமீன் வழங்க நீதிபதி பி.முருகேசன் உத்தரவிட்டார். நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது :-

"அர்ச்சகர் மாதவன் 3.8.2004 அன்று தாக்கப்பட்டு அப்பலோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின்னர் 7.8.2004 அன்று டிஸ்சார்ஜ் ஆனார். தாக்கப்பட்டது குறித்து 3.11.2004 அன்று புகார் தரப்பட்டுள்ளது" என்று அரசு தரப்பில் கூறப்பட்டது.

இந்த முன் ஜாமீன் மனு விசாரணைக்கு உகந்ததா இல்லையா என்பதுதான் வாதம்.

ஜெயேந்திரர் சார்பில் ஆஜரான வக்கீல் கே.எஸ்.தினகரன் வாதாடுகையில், சம்பவம் நடந்த பிறகு மிகவும் தாமதமாகப் புகார் கொடுத்ததாகத் தெரிவித்தார். மேலும், ஆஸ்பத்திரியில் காயம் குறித்து, விபத்து என்றுதான் கூறப்பட்டுள்ளது என்றும் அவர் வற்புறுத்திக் கூறினார்.

எனவே, பொலிஸ் தரப்பில் கூறுவது போல அர்ச்சகர் மாதவன் தாக்கப்படவில்லை என்றும், சாலை விபத்தில்தான் காயம் அடைந்தார் என்றும் தினகரன் தெரிவித்துள்ளார்.

## முகாந்திரம் இல்லை

இந்த வழக்கில் சென்னை ஹைகோர்ட்டு ஏற்கெனவே 4 பேருக்கு முன் ஜாமீன் வழங்கியுள்ளது. ஆவணங்களைப் பார்க்கும்போது இந்த வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், குற்றச்சாட்டுக்கு அடிப்படை முகாந்திரம் இல்லை என்றும் ஹைகோர்ட்டு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.


இந்தத் தீர்ப்பு அடிப்படையில் ஜெயேந்திரருக்கும் இந்த வழக்கில் இந்தக் கோர்ட்டு முன் ஜாமீன் வழங்குகிறது.

ஆடிட்டர் இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கில் சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை ஒரு வருட காலத்துக்கு வெளியே வராதபடி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைக்குள் தள்ளப் பொலிஸார் முயன்று வருகிறார்களென்றும் அதற்கு முன்னோடியாகவே சதுர்வேதி குண்டர் சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளப்பட்டாரென்றும் சங்கர மடத்து விசுவாசிகள் தெரிவிக்கும் அச்சம் உண்மையா பொய்யா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

சதுர்வேதி சுவாமிகளை "ஊஞ்சல் சாமியார்" என்று மக்கள் அழைப்பதும் உண்டு. சென்னை தியாகராஜா நகரில் ஸ்ரீ இராமானுஜ அறக்கட்டளை என்ற பெயரில் ஆசிரமம் நடத்தி வந்த இவர், ஊஞ்சலில் அமர்ந்து பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கி வந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

சுமார் ஆறு கோடி ரூபாவுக்கு மேல் தவறான வழிமுறைகளில் சொத்துச் சேர்த்தாரென்றும் இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

திருச்சியைச் சேர்ந்த இவர், எம்.ஏ வரை கல்வி கற்றுள்ளார். திவ்வியப் பிரபந்தம் சம்பந்தமாகச் சரளமாக உரையாற்றக் கூடியவர் இவரென்று இவரது பக்தர்கள் தெரிவிக்கின்றனர். இவரது வங்கி லொக்கரில் இருந்த தங்க டம்ளர், காப்பு, பூணூல், தங்க, வைர நகைகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இவர் வசமிருந்து நான்கு கார்களும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. இவரது ஆசிரமத்திலிருந்து நவீன வசதிகள் கொண்ட காந்தப் படுக்கையொன்றினையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். தமிழகத்தில் மூன்று இடங்களிலும் மைசூரிலுமுள்ள இவரது சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளனவென்பது குறிப்பிடத் தக்கது.



பக்தர்களுடன் வக்கீல் வாக்குவாதப்பட்டதையடுத்து ஜெயேந்திரர் சோகத்துடன் இருந்த இடத்தை விட்டு வெளியேறுகிறார்

## அருண் கண்ணன்

சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாக ஏற்கெனவே இரு தடவைகள் ஜெயேந்திரரும் விஜயேந்திரரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதும் அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏறவில்லை. குற்றவாளிக் கூண்டில் ஏறுமாறு அவர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிடவில்லை. ஆனால் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்துக்கு வெளியே வளாகத்தில் ஜெயேந்திரர் அமர்ந்திருந்தபோது பக்தர்களுக்கும் வக்கீல்களுக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.


அவர்கள் உள்ளே வந்ததும் கோர்ட்டு பெண் ஊழியர், ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு அழைத்தார். முதலில் ஜெயேந்திரர், பிறகு விஜயேந்திரர், சுந்தரேச அய்யர் ஆகியோரின் பெயரைக் கூப்பிட்டார். உடனே மூன்று பேரும் வந்தார்கள்.

(தொடரும்.....)



செல்வங்கள் கேட்டால்நீ கொடுக்க வேண்டும்,
சிறுமைகளென் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்;
கல்வியிலே மதியினைநீ தொடுக்க வேண்டும்,
கருணையினால் ஐயங்கள் கெடுக்க வேண்டும்.

– சுப்பிரமணிய பாரதியார்



# உச்சிக் குடும்பனும் ஊளை மூக்கனும்

**பாப்பா முரசு சிறுகதை**



விக்னேசபுரம் என்ற கிராமத்தில் தங்கவேல், வடிவேல் என இரு நண்பர்கள் வசித்து வந்தார்கள். இருவரும் மிகவும் நட்போடு பழகி வந்தார்கள்.

தங்கவேலின் தலையில் பெரிய குடுமி ஒன்று இருந்தது. அவனைக் கிராம மக்கள் எல்லோரும் 'உச்சிக்குடும்பன்' என்றே அழைத்து வந்தனர்.

தன்னை எல்லோரும் உச்சிக்குடும்பன் என்று பட்டப் பெயர் வைத்து அழைக்கின்றார்களே என்று ஒருபோதும் கவலைப் படமாட்டான் தங்கவேல்.

வடிவேல் மூக்கில் ஒரு வளையத்தைப் பொட்டிருந்தான். அந்த வளையம் பார்ப்பதற்கு விகாரமாகத் தெரிந்தது. அதனால் வடிவேலுவை எல்லோரும் 'ஊளைமூக்கன்' என்று பட்டப் பெயரிட்டு அழைத்தனர்.

அவர்களின் கேலிப் பேச்சினை வடிவேல் பொருட்படுத்தமாட்டான். தனக்கு நெருக்கமான நண்பர்களிடம் மட்டும்தான் "கோயில் நேர்த்திக் கடனுக்காக மூக்கில் வளையம் அணிந்துள்ளேன் என்றும், நேர்த்திக் கடன் முடிந்த பின்னர் கழற்றிவிடுவேன்" என்று கூறுவான்.

அதனைக் கேட்ட அவர்களோ "அடேங்கப்பா! உனக்கு தெய்வபக்தி அதிகமாகத்தான் இருக்கிறது. நீ ஒரு சிறந்த பக்திமானாக இருக்கின்றாயே!" என்று அவனைப் பாராட்டினார்கள்.

வடிவேல் அவர்களின் பாராட்டினைக் கேட்டும் கேட்காதது போல் இருந்துவிடுவான்.

தங்கவேலுவும் வடிவேலுவும் எப்போதும் ஒன்று சேர்ந்தபடி கோயிலுக்குச் செல்வார்கள். இருவரும் தாங்கள் எடுத்துச் செல்லும் தேங்காய், பழம் மற்றும் கனிகளைக் கொண்டு கோயிலில் பூஜைக்குக் கொடுத்துப் பிரசாதத்தினைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஒருநாள் இருவரும் கால்நடையாகப் புனித யாத்திரைக்குப் புறப்பட்டார்கள்.

புனித யாத்திரையால் பலவேறு கோயிலுக்குச் செல்வதென முடிவு செய்தனர்.

இருவரும் கால் நடையாகவே நடந்து வல்லாபுரி என்ற கிராமத்திற்கு வந்தனர்.

அந்தக் கிராமத்தில் பழைமையான கோயில் ஒன்று இருந்தது. இருவரும் அந்தக் கோயிலில் தங்கினர்.

இருவரும் சற்று நேரம் இளைப்பாறினர். அப்போது வடிவேலு தங்கவேலுவைப் பார்த்து, "நண்பனே! நாம் புனித யாத்திரைக்கு புறப்பட்டிருக்கின்றோமே! நம்மால் இறைவனைக் காண முடியுமா?" என்று கேட்டான்.

உடனே தங்கவேலு "நண்பனே! நாம் எளிமையான முறையில் உண்மையான பக்தி மார்க்கத்தோடு சென்றால் ஒரு வேளை இறைவன் நம் கண்களுக்குக் காட்சித் தந்தாலும் தரலாம். எனவே நாம் இறைவனை காணும் எண்ணத்தோடு உறுதியுடன் இருக்க வேண்டும்" என்றான்.

அதனைக் கேட்ட வடிவேலு "ஆமாம் - நண்பனே! நீ சொல்வதும் ஒரு வகையில் நல்ல யோசனையாகத்தான் என் மனதிற்குப் படுகிறது. நாம் எளிமையான முறையில் இந்தப் புனித யாத்திரையை இனிதாக முடிப்போம். யாத்திரையின்போது இறைவனைக் காண முயற்சிக்கலாம்" என்றான்.

அன்றைய தினம் வடிவேலுவும் தங்கவேலுவும் வேறொரு கிராமத்திற்குச் சென்றனர். அந்தக் கிராமத்துக் கோயிலில் அன்றைய இரவு தங்கினர்.

அந்தக் கோயிலில் இரவு நேரப் பூஜை நடைபெற்றது.

தங்கவேலுவும், வடிவேலுவும் அந்தப் பூஜையில் கலந்துகொண்டனர்.

நடு இரவுக்குப் பின்னர் இருவரும் அந்தக் கோயில் மண்டபத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அப்போது 'தடக்... தடக்...' என்று காலடி ஓசை கேட்கவே இருவரும் திடுக்கிட்டபடி எழுந்துகொண்டனர்.

"இந்தக் கோயில் மண்டபத்தில் நம்மைத் தவிர வேறு யாருமேயில்லை! நாம்தான் இங்கே படுத்துறங்கிக்கொண்டிருக்கின்றோம்! இந்த நேரத்தில் யார் இந்தக் கோயிலின் உள்ளே நடந்து செல்கின்றார்கள்?" என்று வடிவேலுவைப் பார்த்துக் கேட்டான் தங்கவேலு.

"ஆமாம்! யார் நடந்து செல்கின்றார்கள்? எனக்கும் தெரியவில்லையே! நாம் இருவரும் எழுந்து யாரெனப் பார்த்துவிடலாம்!" என்று கூறினான் வடிவேலு.

இருவரும் தாங்கள் படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்தனர்.

மெல்ல சப்தம் வருகின்ற திசையை நோக்கிப் பின்தொடர்ந்து சென்றனர்.

அந்தச் சத்தமானது கோயில் மண்டபத்தின் அருகே கேட்டது. உடனே இருவரும் வேகமாக அந்த மண்டபத்தின் அருகே சென்றனர்.

அந்த மண்டபத்தில் சுற்றிலும் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

இருவரும் ஒளி பரவியிருக்கின்ற திசையினை வியப்போடு பார்த்தார்கள்.

அந்த இடத்தில் அந்தக் கோயிலில் உள்ள இறைவன் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

இறைவனைக் கண்ட மாத்திரத்தில் வடிவேலுவும் தங்கவேலுவும் ஆனந்தமடைந்தனர்.

"ஆண்டவா! உன்னைத் தரிசனம் பண்ண மாட்டோமா என்று ஒவ்வொரு நாளும் ஏங்கிக்கொண்டிருந்தோம். இப்போது நாங்கள் இருவரும் உனது தரிசனத்தைப் பார்ப்பதைப் பெரும் பேறாக நினைக்கிறோம்" என்றான் தங்கவேலு.

"பக்தர்களே! உங்களிடம் தூய்மையான பக்தியும் எளிமையான வழிபாடும் இருக்கின்றன. இவைகள் இரண்டையும் நான் பெரிதும் விரும்புவேன். அதனால் உங்களை எனக்கு மிகவும் தகவல் காட்சி கொடுத்தேன்!" என்றார் இறைவன்.

அதனைக் கேட்ட இருவரும் பயபக்தியுடன் அவர் முன்னே கை கட்டியபடி நின்று கொண்டிருந்தனர்.

உடனே அவர்களைப் பார்த்த இறைவன், "நான் பக்தர்களுக்குக் காட்சி கொடுத்து விட்டால் அவர்கள் கேட்கும் வரத்தைக் கொடுத்துவிடுவேன்! ஆனால் உங்கள் இருவரில் ஒருவருக்குத்தான் நான் வரம் கொடுக்க முடியும். இரண்டு பேருக்குமாகச் சேர்த்து வரம் கொடுக்க முடியாது. எனவே உங்கள் இருவரில் யார் வரம் வாங்க வேண்டும் என்பதை தேர்வு செய்த பின்னர் என்னிடம் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார் கடவுள்.

இதனைக் கேட்டதும் தங்கவேலும் வடிவேலுவும் குழப்பமடைந்தனர்.

"இறைவனே! நாங்கள் இருவருமே இணைபிரியாத நண்பர்கள். இருவரில் ஒருவர் என்று நாங்கள் இதுவரையிலும் எதிலும் பிரித்துப் பார்த்ததில்லை. அதனால் நாங்கள் இருவருமே தங்களிடம் வரம் வாங்கலாம் என்று நினைக்கின்றோம்" என்றனர்.

"பக்தர்களே! நீங்கள் கேட்காமலேயே நான் வரத்தைத் தர முன்வந்துவிட்டேன். ஆனால் உங்கள் இருவரில் ஒருவருக்குத்தான் வரம் தர முடியும். இந்த எண்ணத்தை நான் மாற்றிக்கொள்ளப் போவதில்லை! எனவே நீங்களோ இருவரில் யார் வரம் வாங்க வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்" என்று மீண்டும் வலியுறுத்தினார் இறைவன்.

இறைவனின் திட்டவட்டமான இந்த அறிவிப்பினைக் கேட்டதும் இருவரும் என்ன செய்வது என்று யோசித்தனர்.

அப்போது கோயிலில் ஒரு பீடத்தின் மீது பூஜைக்குரிய பொருட்கள் இருந்தன. அதில் தேங்காயும் இருந்தது. அந்தத் தேங்காயைப் பார்த்த வடிவேலு ஓடிச் சென்று அதனை எடுத்துக்கொண்டான்.

அந்தத் தேங்காயை அவர் முன்னே காட்டினான்.

"இறைவனே! இந்தத் தேங்காயில் குடுமி போன்ற தேங்காய் நார் இருக்கிறது. மூக்கு போன்ற கண்களும் இருக்கின்றன. எங்கள் இருவரையும் எல்லோரும் உச்சிக் குடும்பன், ஊளை மூக்கன் என்றே அழைப்பார்கள். தேங்காயை விட்டு இவைகள் இரண்டும் பிரியாமல் இருப்பதுபோல், வாழ்க்கையை விட்டு நாங்கள் இருவரும் பிரியாமல் நட்போடு இருக்கின்றோம். அதனால் உங்கள் கருணைப் பார்வையானது எங்கள் இருவரின் மீதும் பட வேண்டும்!" கட்டாயமாகக் கூறினார்கள். இறைவன் ஒரு நிமிடம் யோசனை செய்தார். பின்னர் அவர்களைப் பார்த்தார்.

"பக்தர்களே! உங்களுடைய ஒற்றுமையான குணம் என் மனதை மிகவும் கவர்ந்து விட்டது. அதனால் உங்கள் இருவருக்குமே நான் அருள் தர முடிவு செய்துவிட்டேன். நண்பர்கள் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நீங்கள் இருவரும் இருக்கின்றீர்கள்! அதனால் நீங்கள் இருவருமே சொர்க்கத்தை அடைவீர்கள்" என்று வரம் கொடுத்தார்.

உடனே வடிவேலுவும் தங்கவேலுவும் சொர்க்கத்தை அடைந்தனர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.03.2005**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **588**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 586

பரிசுக்குரியவர்:
**வி. ஜெயந்தி,**
**அலஸ் தோட்டம், நிலாவெளி வீதி, திருகோணமலை**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பு. ஜனார்த்தனன், காலிங்க மாவத்தை, பொல்ஹென்கொட, கொழும்பு - 05. | இ. இந்துஜா, கண்டி வீதி, நகராட்சி மன்ற வீடுதி, காந்தி நகர், திருகோணமலை. |
| பாத்திமா பர்சானா, ஆசரிகம, கம்பிரிகஸ்சாவ, அனுராதபுரம். | ப. கம்ஷா, தரம் 3, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கொக்குவில். |
| யோகராசா சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| எம்.ஐ.எப். மஹ்பூபா, 116, ஓடாவியார், ஏறாவூர் -2C | ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை |
| தங்கவேலாயுதம் வேணுஜா, 59, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை. | கமிலஸ் கிரித்திகன், ஆண்டு 1, விபுலானந்த கல்லூரி, பண்டாரிக்குளம், வவுனியா. |


# ஆத்திசூடி

## இயல்பு அலாதன செயேல்

நீ வழமைக்கு மாறான காரியங்களைச் செய்யாதே!

நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# மணக்கும் மனத்திரை



கள்ளமோ கபடமோ
காசினில் ஆசையோ
வெள்ளமாய் வந்த தில்லையே!

வெள்ளையாய் சிரிப்புகள்
விளையாட்டு நினைவுகள்
உள்ளத்தில் குறைந்த தில்லையே!

வெற்றிகள் தோல்விகள்
வேதனை நினைவுகள்
உற்றெமை வதைத்த தில்லையே!

வெறுப்புகள் விருப்புகள்
வேடங்கள் மாற்றியே
வித்தைகள் செய்த தில்லையே!

பொறுப்புகள் இன்றியே
போயின பள்ளிநாள்
மனத்திரை மறைக்க வில்லையே! - அதன்
மலர்மணம் மறக்க வில்லையே!

# உங்கள் பொது அறிவு எப்படி?

## கண்டு பிடித்தவர்கள்

| | |
|---|---|
| 1. தேயிலையை உபயோகித்தவர்கள் | - சீனர் |
| 2. நாணயத்தை உபயோகித்தவர்கள் | - பாரசீகர் |
| 3. கண்ணுக்குப் போடும் கண்ணாடி | - றோக்கர் பெக்கன் |
| 4. சாரணர் இயக்கத்தை தாபித்தவர் | - பேடன்பவல் பிரபு |
| 5. செஞ்சிலுவைச் சங்கத்தை தாபித்தவர் | - ஹென்றி நோன்ற் |
| 6. நியூமாற்றிக் டயர்கள் | - ஜோன்பொறிற் டன்லப் |
| 7. ஹோமியோபதி வைத்திய முறை | - கலாநிதி சனோமார் |
| 8. சீமேந்து | - ஜோன் சிமிற்றன் |
| 9. இராமகிருஷ்ண சங்கம் | - சுவாமி விவேகானந்தர் |
| 10. பூமி தான இயக்கம் | - ஆச்சாரியர் வினோபாவே |




# இரண்டுக்கு மூன்று



இரு வகையில் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறத் துடிக்கும் மூவர். நடுவில் தென்னை மரம் போல் காட்சியளிக்கும் இவர் சீனாவைச் சேர்ந்த க்ஷி ஷுன். உலகின் உயர்ந்த மனிதனாகச் சாதனை படைக்க விரும்பும் இவரின் உயரம் 7 அடி 10 அங்குலம். இரு பக்கத்திலும் உள்ளவர்கள் உலகிலேயே நீண்ட கூந்தலை உடைய பெண்களாகத் தமது பெயர்களைப் பதிவு செய்யத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

# நெருக்கமான பார்வை



பனிக்கரடிகளின் செயற்பாடுகளை மிக அருகில் பார்த்து இரசிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது இந்த அதிசய கண்ணாடிக் கூண்டு. யப்பானில் அசஹியாமா மிருகக் காட்சிசாலையில் அமைந்திருக்கிறது.

# நாய்ப் போர்வை



அமெரிக்காவின் மேசேயுசேட்ஸ் பிராந்தியத்தில் இப்போது கடும் பனி கொட்டும் காலநிலை நிலவுகின்றது. ஒரு எஜமானார் தனது செல்லப் பிராணியை இக் கடும் பனியில் இருந்து பாதுகாப்பதற்காக அதற்கு வீசேடமாகத் தயாரிக்கப்பட்ட பனிப் போர்வையொன்றைப் போர்த்தியிருக்கும் அழகே இது.

# பாய்ச்சல்




அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தை அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாக்கிய அண்மைய பருவ கால மாறுபாடு காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கே இது. இவ்வெள்ளப் பெருக்குகினால் பாதையில் சென்றுகொண்டிருந்த வாகனங்கள் கூட வெள்ள நீரோட்டத்தில் சிக்கின. அந்த வகையில் வெள்ளத்தில் சிக்கிய தனது நண்பரை காப்பற்ற காரினுள் பாய்கிறார் யூட் என்பவர்.

# கரணம்



கடந்த பெப்ரவரி மாதம் இடம் பெற்ற கார் ஓட்டப் பந்தயத்தின்போதே இச் சம்பவம் நிகழ்ந்தேறியிருக்கிறது. கார் ஓட்டப் பந்தயத்தின் அபாயத்தை இது உணர்த்திநிற்கிறதல்லவா! ஸ்கெட் விம்மர் என்ற 22 வயதுடைய இளைஞனே இக் காரைச் செலுத்திச் சென்றபோது வளைவு ஒன்றில் திரும்பும்போது அதிவேகம் காரணமாக கார் 5 தடவைகள் சுழன்றமை இங்கு குறிப்பிடத் தக்கது. காரைச் செலுத்தியவருக்கு ஆயுள் அதிகம். ஆகவே அவர் காயங்களுடன் உயிர் தப்பினார்.

# யானை ஓவியம்



தாய்லாந்தின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள வியங் மாய் பிரதேசத்தில் உள்ள ஓவியம் வரையும் யானைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அண்மையில் இந்த ஓவியர்கள் ஒன்றுசேர்ந்து கின்னஸ் சாதனைக்காக வரைந்த ஒரு சித்திரமே இது. 'அதி கூடிய விலையில் விற்பனையான யானைச் சித்திரம்' என்ற கின்னஸ் சாதனையாக இச் சித்திரத்தைப் பதிவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.



சச்சின்
விஜய் - பிபாஷா பாசு


# மறுபடியும் ஒரு கிசுகிசு....

பிரபுதேவா - மீனாவைப் பற்றி அடுத்த பரபரப்பு ஆரம்பமாகிவிட்டது. பிரபுதேவா புகழின் உச்சத்தில் இருந்தபோது தன்னுடைய குழுவிலிருந்த ரமலத் என்கிற நடனப் பெண்மணியைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார். இந்தக் காதலுக்கு பிரபுதேவா வீட்டில் கடும் எதிர்ப்பு. இதனால் வீட்டை விட்டு வெளியேறித் தனிக் குடித்தனம் நடத்தி வந்தார். ஒரு ஆண் குழந்தை கூட இருக்கிறது.

ஆனால், அங்கு போய் வருவதை ரொம்பவே குறைத்துவிட்டார். 'நாமிருவர் நமக்கிருவர்' படத்தின் சமயம் அதில் நடித்த பிரபுதேவாவுக்கும் மீனாவுக்கும் நெருக்கம் அதிகமாகிவிட்டது. இந்தக் காதலுக்கு முட்டுக்கட்டை போட்டார் மீனாவின் அம்மா!

ஆனால், மீனா தாய் சொல்லைத் தட்டினார். இதனால் மலையாள மாந்திரீகத்தின் உதவியை நாடினார். மீனாவின் உள்ளாடையை எடுத்துச்சென்று கேரளாவில் மந்திரித்து மை வைத்தார்கள். இதையடுத்து மீனா - பிரபுதேவா மறக்க....சக்ஸஸ் சக்ஸஸ் எனச் சந்தோசப்பட்டார் மீனாவின் மம்மி.

இப்போது ஆந்திராவில் பெரிய டைரக்டராகிவிட்டார் பிரபுதேவா. 'பாய்ஸ்' சித்தார்த் - த்ரிஷா ஜோடியை வைத்து இவர் பண்ணிய காதல் படம் பிச்சுக்கிட்டுப் போகிறது. இந்தச் சமயம் பார்த்து மீனா என்னை இன்னும் காதலிக்கிறார் என பிரபுதேவாவே வதந்தியைக் கிளப்புகிறாராம். "அப்படியொரு வதந்தி வந்தால் போட்டுராதீங்க" என தனக்கு வேண்டப்பட்ட செய்தியாளர்களிடம் செப்பியிருக்கிறார் மீனா.



சந்திரமுகி ரஜி

# தமிழச்சி பூஜா!

சமீபத்தில் மதுரையில் அமுதசுரபி கலைமன்றம் சார்பில் நடந்த விழாவுக்கு வருகை தந்திருந்த பூஜாவை மைக்கில் பேசச் சொன்னார்கள். ஏதாவது தஸ் புஸ்சுன்னு ஆங்கிலத்தில் பிதற்றிவிட்டுப் போகப் போகிறார் எனக் காத்திருந்த கூட்டத்தினரை வாய் பிளக்க வைத்துவிட்டார் பூஜா!

எப்படி?

மைக்கைப் பிடித்த பூஜா, எடுத்ததும் "மதுரை மண்ணே வணக்கம்!" என ஆரம்பித்து, பாரதிதாசன் கவிதைகள், வள்ளுவரின் குறள் என்று அரை மணி நேரத்திற்குத் தமிழில் பொளந்து கட்டிவிட்டாராம். முடிவில் "எனது பேச்சில் அங்க இங்க ஆங்கில வார்த்தைகள் வந்ததற்கு மண்ணிக்கனும். அடுத்த முறை மதுரை மண்ணிற்கு வரும்போது, முழுதும் தமிழிலேயே பேசுவேன் நான் ஒரு தமிழச்சிதான்" என்று பேசி முடிக்க...அந்த இடமே கைதட்டலால் அதிர்ந்தது.

---

கார்த்திக் நடித்த 'மனதில்' படம் மூலம் அறிமுகமான முத்துவுக்கு கலைஞர் பாராட்டு. கேமரா மேன் சி.எம்.முத்துவுக்கு இவ்வளவு சீக்கிரம் கலைஞரின் படத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்தான்!

சி.எம்.முத்துவிடம் பேசினோம்.

"கிட்டத்தட்ட 20 படங்களுக்குப் பணியாற்றியிருக்கிறேன். ஆனால் கலைஞரின் படத்தில் பணியாற்றியதுதான் பெருமையிலும் பெருமை என ஒரு சுற்று பெருத்துப்போய் பேசுகிறார்.

பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளராகப் பணியாற்றியவன் நான். மலையாளத்தில் 20 படங்கள் ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிருக்கிறேன். வினயனுடன் 'பிரணய நிலவு', டைரக்டர் நிசாரின் 12 படங்களுக்கும் பணியாற்றிருக்கிறேன். அது மட்டுமல்ல, 2001, 2002இல் அதிக படங்களில் பணியாற்றிய ஒளிப்பதிவாளர் நான். இதற்காகக் கேரள விருதுகளையும் பெற்றிருக்கிறேன்."

"கண்ணம்மா அனுபவத்தைச் சொல்லுங்கள்?"

"என்னுடைய பிறவிப் பயனை நான் அடைஞ்சுட்டேன்னுதான் சொல்லணும். கலைஞர் கையால் பாராட்டு வாங்குவதற்கு எத்தனையோ பேர் தவம் கிடக்கிறபோதும், 'ஒளிப்பதிவு நல்லாயிருக்கு. அந்த தம்பியை வரச் சொல்லுங்க' என்று என்னைக் கூப்பிட்டுப் பாராட்டினார். இன்னும் அந்தப் பிரமிப்பிலிருந்து நான் விலகவில்லை."

---

இலங்கையில் 20 நாட்கள் படப்பிடிப்பு நடத்தப்பட்டது 'செவ்வேலு'க்காக. ஜெய் ஆகாஷ், மிசாஷா, ராஜ்கிரண், சீதா ஆகியோர் நடித்த இந்தப் படத்தைத் தயாரித்து, ஒளிப்பதிவு செய்து, இயக்கி இருப்பவர் பிரீமூஸ்.

இந்தப் படம் அப்பா - மகன் சென்டிமெண்ட் கலந்த ஆக்ஷன் படம். சிறப்பாக வந்திருப்பதாக ஏரியாவில் பேச்சு. இதனால் 'அடிக்கடி', 'மகாநடிகன்' ஆகிய படங்களைத் தயாரித்த சுந்தரி பிலிம்ஸ் இந்தப் படத்தின் ஒட்டுமொத்த உரிமையை வாங்கிவிட்டார்கள். இலங்கையில் காலிக் கடற்கரையிலும், நுவரேலியாவில் ஒரு பிரம்மாண்ட செட் போட்டும், துறைமுகத்தில் 15 நாட்களும் படப்பிடிப்பு நடத்தினார்கள். இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட காலிக் கடற்கரை உள்ளிட்ட சில பகுதிகளை முதலில் எப்படி இருந்தது என்று இலங்கைத் தமிழர்கள் பார்க்க, 'செவ்வேல்' படம் உதவும்.

---

நடிகர் கரிகாலன் இயக்குநராகவும் அவதாரம் எடுத்திருக்கும் படம் 'வைரவன்'. இந்தப் படத்தில் அவரது தாயார் தமிழம்மா ஒரு அற்புதமான பாடலை எழுதியிருக்கிறார். இந்தப் பாட்டில் ஆங்கில வார்த்தைகளே இல்லை என்பது ஆச்சரியத்திற்குரிய தகவல். என்ன செய்வது? இப்போதெல்லாம் ஆங்கிலமில்லாமல் பாட்டெழுதினால் தமிழ் சினிமாவில் ஆச்சரியத்திற்குரிய விசயம்தானே?

---

பிரதாப் போத்தன், மணிவண்ணன் போன்ற இயக்குநர்களிடம் பணியாற்றிய அனுபவம், அதோடு சச்சின் டெண்டுல்கர், ஸ்டீவாக், லாரா போன்ற கிரிக்கெட் வீரர்கள் நடித்த விளம்பரப் படங்களிலும் பணியாற்றிய அனுபவத்தோடு 'குருதேவா' படத்தை இயக்கி வருகிறார் ஜாபர்.

குருவாக ஜெய் ஆகாஷ் தேவாவாக பிரணதி நடிக்கிறார்கள். கீழ் தட்டு இளைஞனும் மேல் தட்டுப் பெண்ணும் சந்திக்கிறபோது ஏற்படுகிற விளைவுகள்தான் 'குருதேவா' படத்தின் கதை. இது ஒரு ஆக்ஷன் படம் போல தெரிந்தாலும் ஆக்ஷன் படம் அல்ல. முழுக்க முழுக்கக் காதல் படம். அதிலும் இது வரை நீங்கள் எந்தப் படத்திலும் பார்த்திராத காதல் இந்தப் படத்தில் உண்டு எனச் சவால் விட்டுச் சொல்கிறார் ஜாபர்.



கஸ்தூரிமான்
பிரசன்னா - மீரா ஜாஸ்மின்

கிரியைத் தொடர்ந்து சுந்தர்.சி.யின் அடுத்த படம் 'தகதிமிதா'. இது முழுக்க முழுக்கக் காதல் இன்னிசைச் சித்திரம். டி.இமான் இசையில் ஒன்பது பாடல்கள் படத்தில் உண்டு. எல்லாமே இனிமையான பாடல்கள். இந்த ஆண்டின் சூப்பர் ஹிட் பாடல்களாக இவை அமையும்.

எல்லா வித்தைகளையும் கற்ற யுவகிருஷ்ணா எனும் இளைஞரை இந்தப் படம் மூலம் நாயகனாக அறிமுகப்படுத்துகிறார் சுந்தர்.சி. இப்போதைய இளம் ஹீரோக்களுக்கு ஒரு சவாலாக அமைவார் என சர்டிபிகேட் தருவார் சுந்தர்.சி. படத்தின் நாயகி அங்கீதா இப்போது 'லண்டனி'ல் பிரசாந்துடன் நடித்து வருகிறார். தெலுங்கில் இரசிகர்களின் இதயங்களைக் கொள்ளையடித்த தேவதை இப்போது சுந்தர்.சி. தயவில் தமிழக இரசிகர்களையும் ஆட்டி வைக்க வருகிறார்.

---


யோகானந்த சாஸ்திரி என்ற பெயரில் கதை, திரைக்கதை, வசனம் எழுதி வைத்திருக்கிறார் சரத்குமார். ஆனால், இந்தப் படத்தை அவர் தயாரிப்பாரே ஒழிய, அவர் இயக்கப் போவதில்லை. பல புரட்சிகளை உண்டுபண்ணுகிற இந்தக் கதையை கே.பாலசந்தர் இயக்கினால்தான் சிறப்பாக இருக்கும் என்று ஆசைப்படுகிறார் சரத்.

சரத் ஆசை நிறைவேறுமா?

---

டைரக்டர் செல்வராகவனும் நடிகை சோனியா அகர்வாலும் காதலிக்கிறார்கள் என விவரமறிந்தவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகளிலும் அதை எழுதிக்கொண்டுதானே இருக்கிறார்கள். சில பத்திரிகைகளிலோ அதெல்லாம் இல்லை என செல்வராகவன் பேட்டியே கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனாலும், அவர்கள் ஊர் சுற்றுவது உண்மையோ உண்மை. சமீபத்தில் '7ஜி ரெயின்போ காலனி' படத்தின் வெற்றிவிழா மதுரையில் கொண்டாடப்பட்டது. விழாவில் கலந்துகொள்ள வந்த இருவருக்கும் ராயல் சிட்டி ஹோட்டலில் தனித்தனி அறை போட்டுத் தந்தார்கள் விழாக் குழுவினர். ஆனாலும், அவர்கள் தங்கியிருந்தது ஒரே அறையில்தான்.

அத்துடன் அப்படியே தன் சொந்த ஊரான தேனி மாவட்டத்திற்கு சோனியாவைக் கூட்டிக்கொண்டு போனார் செல்வராகவன். அங்கே உள்ள கஸ்தூரிராஜா குடும்ப குலதெய்வம் கோட்டைக் கருப்பசாமி கோவிலில் இருவரும் சாமி கும்பிட்டு வேண்டுதல் சொல்லிவிட்டு வந்து இருக்கிறார்கள்.







சந்திரமுகி
ரஜினி - நயன்தாரா




மாயாவி
சூர்யா - ஜோதிகா

## சர்க்கரையை மொய்க்கும் பெண்கள்

பிரசாந்த் சுசிகணேசன் கூட்டணியில் உருவான 'விரும்புகிறேன்' படம் மூலம்தான் சினேகா அறிமுகமானார். அந்த ராசிதான் இப்போது பிரசாந்த் - சுசி மீண்டும் சேர்ந்திருக்கும் 'சக்கர' படத்தில் வாய்ப்புப் பெற புதுமுக நடிகைகள் சுசி கணேசனை நோக்கிப் படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ரீமாசென்தான் கதாநாயகி என்றாலும் மேலும் இரண்டு கதாநாயகிகள் கதையில் உண்டு. அதற்காகத்தான் இந்தப் படையெடுப்பு.

## உலகம் சுற்றும் இலங்கைத் தமிழர் கோடம்பாக்கம் சுற்றுகிறார்

இலங்கைத் தமிழர் ஸ்ரீ நாராயணதாஸ் கனடாவில் செட்டிலாகி இருக்கிறார். லண்டன், பங்களாதேஷ், இலங்கை என விமானத்திலேயே நாடு நாடாய் சுற்றிக் கொண்டிருக்கிற பரபரப்பான பிசினஸ் மேன். பாலு மகேந்திரா இயக்கத்தில் 'வீடு' என்கிற அற்புதமான படத்தைத் தயாரித்த நாராயணதாஸ், நீ.......ண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். படத்துக்குப் பெயர் 'அடைக்கலம்'. பிரசாந்த், தியாகராஜன், உமா ஆகியோர் நடிக்கிறார்கள்.

## மீண்டும் கேப்டன் ராஜ்ஜியம்

நடிகர் சங்கத் தேர்தலில் மீண்டும் தலைவராக விஜயகாந்த், உபதலைவர்களாக நெப்போலியன், எஸ்.எஸ்.சந்திரன், பொதுச் செயலாளராக சரத்குமார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தேர்தலின்போது தமிழ்ப் படங்களில் துணை நடிகையாக நடிக்கும் ஜெர்மன் நாட்டுப் பெண் மார்க்கரெட்டும் ஓட்டுப் போட வந்திருந்தார். வந்த இடத்தில் விஜயகாந்த் உள்ளிட்ட பலருக்கும் "இச், இச்" என ஃபாரின் ஸ்டைலில் முத்தம் கொடுத்து அசத்தினாராம்.



ரகசியா

## 'அலரி'க்கு அர்த்தம் தெரியுமா?

படங்களுக்கு இங்கிலீஷ் டைட்டில் வைக்கும் மோகம் அரசியல் எதிர்ப்புகளையும் மீறி வளர்ந்துகொண்டு இருக்கிறது. இன்னொரு புறம் முரளி நடிக்கும் படத்திற்குப் பெயர் 'அலரி'. அட இதென்ன டைட்டில், 'அலரி' என்றால் சூர்யன் என்று அர்த்தமாம். அட சுத்தத் தமிழன்களா! சரி, "அலரியைப் பற்றிச் சொல்லுங்கள்" என டைரக்டர் ரவிராஜாவிடம் கேட்டோம்.

சூரியனுக்கு ஒப்பான குணமுள்ளவன் இக் கதையின் கதாநாயகன். இவனை நம்பியவர்கள் கெட்டதில்லை. நம்பாதவர்களை விட்டதில்லை. வாழும்போதே வரலாறான ஒரு மகாமனிதனின் கதை 'அலரி'. என்கின்றனர் இரட்டையர்களான டைரக்டர் ரவி ராஜா.

# சினி விசிட்



சச்சின்
பிபாஷா பாசு

## ஐம்பது புரொடியூசர் ஒரு படம்

'அன்பே உன் வசம்' படத்தைத் தயாரித்த அழகன் தமிழ்மணியின் அடுத்த படத்தை இயக்கும் வாய்ப்பு யார் கண்ணனுக்குக் கிடைத்தது. அவரும் பக்காவான ஒரு த்ரில்லர் கதையை அமானுஷ்யம் கலந்து தயார் செய்துகொண்டு காத்திருந்தார். ஆனால், படம் ஆரம்பித்த பாட்டையே காணோம். இப்போது அதே கதையை 'யுகா' என்ற பெயரில் இயக்குகிறார் யார் கண்ணன். படத்தில் ரிச்சர்ட், சொர்ணமால்யா, சுகுமார் ஆகியோர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் எண்ணிக்கை ஐம்பது. ஆமாம். ஐம்பது நடனக் கலைஞர்கள் சேர்ந்து இந்தப் படத்தை உருவாக்குகிறார்கள்.

## கற்க கசடற....கற்ற பின்.....?

'கற்க கசடற' படத்தை முடித்த கையோடு, சூர்யாவை வைத்து ஒரு கிரைம் சப்ஜெக்டையும் ஜெயம் ரவியை வைத்து ஒரு கிராமியப் படத்தையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளார் ஆர்.வி. உதயகுமார்.

## மறுபடியும் உள்ளே வெளியே

'சுகமான சுமைகள்' என ஒரு யதார்த்தப் படத்தைத் தந்தார் பார்த்திபன். பொருளாதார நஷ்டம். அடுத்து 'உள்ளே வெளியே' என "கிளுகிளு" படம் எடுத்தார். பின்னர் குடைக்குள் மழை என வித்தியாசமாகப் படம் எடுத்தார். பொருளாதார நஷ்டம். அடுத்து 'பச்சைக் குதிரை' என்கிற படத்தை எடுக்கிறார். இதுவும் "கிளுகிளு" படம்.

## காமெடிக் கான்ஸ்டபிள்

'பேரரசு' படத்தில் சி.பி.ஐ. ஆபீஸராக வரும் விஜயகாந்துடன் கலக்கலான காமெடிக் கான்ஸ்டபிளாகப் படம் முழுக்க வருகிறார் பாண்டியராஜன்.

## சிந்துவிடம் சரண்டர்

சுந்தர்.சி. இயக்கத்தில் அர்ஜுன் நடிக்கும் 'சின்னா' படத்தில் சினேகா ஒரு நாயகி. இன்னொரு நாயகிக்கு அலையோ அலை என அலைந்து கடைசியில் சிந்து துலானியிடம் சரண்டராகி இருக்கிறார்கள்.

## கின்னஸ் முயற்சி

'ஆரம்பப் பள்ளி' என்கிற புதிய படத்தில் 560 புதுமுகங்கள் நடிக்கிறார்கள். அநேகமாக இது கின்னஸ் சாதனையாக இருக்கும்.

## கொறஞ்ச மனசு

'நெறஞ்ச மனசு' படத்தின் நாயகிகள் சூசனுக்கும் மகிமாவுக்கும் தமிழில் புதிய வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மகிமா தெலுங்கு பக்கமும் சூசன் மலையாளப் பக்கமும் வரிந்து கட்டிக்கொண்டு வாய்ப்புத் தேடும் வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

## கஸ்தூரிமான் விருது

பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியது மீரா ஜாஸ்மின் டைரக்டர் லோகிதாஸ் விவகாரம். மலையாள இயக்குநர் லோகிதாஸ் இது வரை 56 படங்களுக்குக் கதை, வசனம் எழுதியுள்ளார். எல்லாப் படங்களுமே வெற்றிப் படங்கள். இவர் இயக்கிய ஒன்பது படங்களில் ஆறு அட்டகாசமான வெற்றி.

வெற்றியையும், கூடவே விருதுகளையும் பெற்றுத் தரும் லோகி படம். மீராஜாஸ்மினை அறிமுகப்படுத்தியதோடு 'கஸ்தூரிமான்' படம் மூலம் மீராவுக்குத் தேசிய விருது கிடைக்கக் காரணமாகவும் இருந்தவர் லோகி. சமீபத்தில் லோகியையும் மீராவையும் இணைத்து ஏகப்பட்ட கிசுகிசு. இது போதாதென்று, ஜெயராம் படம் ஒன்றுக்கு கதை, வசனம் தர ஒப்புக்கொண்டு, அட்வான்ஸையும் வாங்கிக்கொண்டு, எழுதித் தராமல் அலைய விட்டாராம். இதனால் தயாரிப்பாளர் கேரள திரைப்பட வர்த்தக சங்கத்தில் முறையிட, லோகிக்கு இப்போது கேரளாவில் தடை. அதனால் லோகி தமிழுக்கு வருகிறார். அழைத்து வருகிறவர் மீரா ஜாஸ்மின்.

'அழகிய தீயே' பிரசன்னா, மீரா ஜாஸ்மின் ஜோடி போடும் 'கஸ்தூரிமான்' படத்தைத் தமிழில் இயக்குகிறார் லோகி. தயாரிப்பது மீரா ஜாஸ்மின்.



பெப்ரவரி 14




## என்னாலும் முடியும்!

பெரிதாய் படித்து
'டிகிரி' வாங்கி
அரச
உத்தியோகம் பெறாவிட்டாலும்
நானோர் எழுத்தாளன்!

உன்
விடுதலைப் போராட்டத்தால்
என்
தேசத்தின் கிழக்கே
நிறையவே
எழுத்தாளர்களும்
கவிஞர்களும்
ஆய்வாளர்களும்
உருவாக
காரணகர்த்தா - நீயல்லவா!

அப்படியானவர்களில்
ஒருவன்தான்
நான்!
ஆதலால் - உங்களுக்கு
என் காணிக்கையான
நன்றி!

இரண்டாயிரத்து இரண்டு
வைகாசி
வெள்ளியன்று
என் வாப்பாவைக் கொன்றபோது;
அது பற்றியதான நிகழ்வுகளை
சொல்லியழுதேன்.
ஆனாலும்
சோகங்கள்
என்னை விட்டு
விடுபட்டதாகவே இல்லை!

அகதிகளாக,
அநாதைகளாக,
விதவைகளாக,
நிற்பவர்களுக்கு
உங்களது பதில்தான் என்ன?
மௌனம்! மௌனம்!!

ஆயுதமேந்திய - உன்னை
நிராயுதபாணியான - என்னால்
ஒழித்துக்கட்ட முடியவில்லை
ஆதலால்தான்
என் பேனாக்களால்.....
உன்னாலான
இழப்புகளைப் பேசுகிறேன்.....

*-காவத்தமுனை ஜாபிர் எச்.எம்.*

## வரவேற்கின்றோம் உன்னை!

வருக.....
வருக....!
இரண்டாயிரத்து ஐந்தே
இன்பமுடன் வருக.....
இனிதாய் வரவேற்கின்றோம் உன்னை!

கஷ்டங்கள் எதையும்
காட்டாய் என்று - கரத்தில்
அடித்துக் கூறிவிட்டு வருக.....
கனிவோடு வரவேற்கின்றோம் உன்னை!

உயிர்கள் எதையும்
உருக்குலையச் செய்யேன் என்று
உறுதி மொழி கூறிவிட்டு வருக.....
உவகையுடன் வரவேற்கின்றோம்
உன்னை!

சந்தோசங்கள் மட்டுமே
தந்திடுவேன் என்று
சத்தியம் செய்துவிட்டு வருக....
சங்கடமின்றி வரவேற்கின்றோம்
உன்னை!

போர் என்ற சொல்லுக்கே எதிராகப்
போர்க் கொடி எடுத்திடுவேன் என்று
பொல்லாதவர்களிடம் கூறிவிட்டு
வருக.....
பொய்யின்றி வரவேற்கின்றோம்
உன்னை!

மொத்தத்தில்....
மனிதர்களை
மனிதர்களாகவே - வாழச்
செய்வேன் என்று
மனதில் உறுதி கொண்டு வருக....
மகிழ்வோடு வரவேற்கின்றோம்
உன்னை!

*-எஸ்.வினோ, மாத்தளை.*

## மனிதம் தேடி விரைகிறேன்

மாமிச அழுக்குகளின்
மதுரங்கள் நிரம்பி....
உணர்வு சௌந்தர்யங்கள்
ஊளையிட்டுக் கொள்கிறது.

தொலைதூரம் - வரை,
தொடர்ந்து திரும்பி இருக்கிறேன்
காணவில்லை....!
மனிதம் தேடிய...
யாத்திரையில் இன்னுமே...
மனிதனை மட்டும் யாசிக்க
முடியவில்லை.

பசுத்தோல் போர்த்த...
புலிகளின் பொய் முகங்களுக்குப்
பின்னே...
புதையுண்டுப் போன....
மனிதம் தேடியே....விரைகிறேன்
மாறுபட்ட அனுபவங்கள் மட்டுமே....
உள்வாங்கப்படுகிறது.
மனிதத்தை மட்டும் காணவில்லை!

ஒரே மூலத்தில் ஏன்...?
இத்தனை முரண்கள்
அமுதமாய் சில ஆத்மாக்கள்
ஆலகாலமாய் சில அழுக்குகள்
படைப்பின் பின்னணி புரியாமல்
மனிதம் தேடியே...விரைகிறேன்.

மனிதம் கண்டவர்களுக்கு.....
மானசீகமாய் ஒரு மனு:
கருணையிருந்தால் எனக்கும் -
கொஞ்சம்
காட்டி விடுங்கள்.
மனிதத்தைச் சந்தித்த....
மகிழ்ச்சியில் மரணித்துப்
போகிறேன்.

*-சிவனு மனோஹரன், ஹட்டன்.*

## இலட்சியப் பயணம்

பாலைவனத்து
முட்புதர்களில்
என் பயணங்கள்......
பாதச் சுவடுகளை
அடையாளப்படுத்தாமலே!

நீண்டநாள்
இலட்சியக் கனவுகள்....
நிறைவேறும்,
நிறைவேறுமென்று
தூரங்களும்
நீண்டுதான் போயிற்று.

நிம்மதி தேடித்தான்.....
இப் பயணமும்
தொடரப்பட்டிருந்தது.
நிம்மதி காணேன்.
கால்கள்தான்
வலிக்கின்றன.

என்ன செய்வது
இதயச் சுமையிறக்கி
சலனமின்றி - உறங்கும்
இரவுகள் போல - நானும்
உறங்கவேண்டும்.

அதனால் தான்....
எங்கோ - ஓர் மூலையில்
எனக்கென்று
அமைதி கிட்டும் வரை....
என் பயணங்களை -
நான்
இடைநிறுத்தப்
போவதில்லை.

*-செயின் தம்பி ஸியாம், கல்முனை - 06.*

## மேன்மையுண்டு

கத்தும் கடல் அலையே
கரை தாண்டி வந்தாயே
சற்றும் எதிர்பாராது
சதி மோசம் செய்தாயே!

மீனவரின் தரிப்பிடத்தை
மணல் மூடி மறைத்தாயே
வான மலை உயரலையாய்
வாரிக் கொண்டு சென்றாயே!

பாசமுடன் பெற்றெடுத்த
பாலகரைப் பிரித்தெடுத்தாய்
ஆசையுள்ள மனையாளை
அடித்துச் சென்ற மாயமென்ன?

பலர் கூடி வாழ்ந்த இடம் இன்று
பரந்தவெளி யானது மேன்?
நலம் குன்றிப் போனோமே
நிம்மதிக்கு என்ன வழி?

அகதி மடம் எத்தனைநாள்
அல்லற் பட்டு வாழுவது
முக மலர்ந்து நாம் சிரித்து
மகிழ்ச்சியுறும் நாள் வருமா?

இரக்க மற்ற பேரலையே
இனியுனக்கு நிம்மதியோ?
இரந்து பாட வைத்தாயே
இரந்தாலும் மேன்மையுண்டு.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் - 01.*

### :.போன்



எண்ணங்களும் எமதே,
வெளிப்படுத்துவதும் நாமே,
ஆனாலும் நம்மிடம் காசு
கறக்கும் உயிரற்ற பிறவி.

### கோல்

சிந்தனைகளை வார்த்தைகளாக்கி,
பிரிந்த உறவுகளை ஒன்றாக்கி,
மற்றவர்களின் உணர்வுகளுக்கு
மதிப்பளிக்க
வழி செய்யும் இணையற்ற ஊடகம்.

### மெசேஜ்

நினைவுகளுக்கு வடிவம் கொடுத்து,
பிரிவுகளுக்குச் சாவு மணியடித்து,
தொடர்புகளைத் தந்துதவினாலும்
தாய் மொழியில் நாம் பெறமுடியா,
ஓர் அன்னிய இலத்திரனியல்
ஊடகம்.

### மிஸ் கோல்

வார்த்தைகளில்லை,
வரிகளில்லை - ஆனாலும்
ஞாபகங்களை உதிக்கச்
செய்யும்
செலவற்ற - தொந்தரவான
வழியொன்று.

*-த.ஜெகதீஸ்வரன், வரணி.*


# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

"கவிதையைக் கலைப் பொருளாகப் பாவிக்கின்ற ஒரு கவிமனம், அனுபவத்தைத் துல்லியமாகப் பதிவு செய்வதை முக்கிய பணியாகக் கருதுகிறது. யாவருக்குமான பொது அனுபவமானாலும் சரி, கவிஞன் மாத்திரமே உய்த்துணரும் பிரத்தியேக அனுபவமானாலும் சரி, இதுவரை மனிதகுலம் எதிர்கொண்டிராத நூதன அனுபவமானாலும் சரி, அதைப் பதிவு செய்வதில் உருவத்தின் பங்கு பிரதானமானது. முறிந்த முனைகளோ, உபரியாக நீட்டிக்கொண்டிருக்கும் அங்கங்களோ கவிதையின் உருவ இலட்சணத்தைக் குலைத்துவிடுவன. அடுத்தது சொல்தேர்வு. ஒவ்வொரு சொல்லும் தன்னளவில் ஒரு முழுமையான கருத்துருவமே. புழுங்கித் தேய்ந்த சொற்களைப் பயன்படுத்தும்போது, கவிதையில் நாள்பட்ட எண்ணெய்ப் பதார்த்தம் போலச் சிக்குவாடையடிக்கும். கவிஞன் தானே உருவாக்கும் புதிய சொற்களை, சொற்றொடர்களைப் பயன்படுத்தும்போது, புரியாத்தன்மையின் சிடுக்கு இன்னும் கூடும்....கவிஞனின் சுதந்திரம் அவ்வளவு வசீகரமாகவும் பொறாமைப்படத் தக்கதாகவும் தென்படவில்லை." கவிஞர் யுவன் சந்திரசேகரின் கருத்துக்கள் அவை. இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக கவிஞர் தேவதேவனின் ஐந்து கவிதைகள்.

### யானை



அப்போப்பட்ட கானகத்தைக்
காட்டு விலங்கை
நான் கண்டதில்லை எனினும்
கண்டிருக்கிறேன் வேறு
எங்கோ எவ்விதமோ

முறியும் பெருங் கிளைகள்
சாயும் குற்று மரங்கள்
சிக்கித் தவிக்கும்
உயிரினங்கள்
சரிந்த புதர்கள்
நடுவே
திடமாக
எதையோ
பூமியில் ஊன்றி விதைப்புச்
செய்யும்
ஒரு விரல் போல்
யானை ஒன்று நடந்து
செல்வதை.

### இனி என்ன கவலை எனக்கு?

நான் இன்ன மதத்தின் தீவிரப்
பற்றாளி
ஆகவே வாங்கிவிட்டேன்
சொர்க்கத்திற்கு டிக்கெட்டு.
இனி என்ன கவலை எனக்கு?

நான் இன்ன குழுவின் தீவிர
உறுப்பினன்
ஆகவே ரொம்ப விபரமானவன்,
மனிதாபிமானி, முற்போக்கு
இனி என்ன கவலை எனக்கு?

எமக்குத் தொழில் எதிர்த்து
நிற்றல்
ஓர் ஆலை முதலாளி
என்னை எடுத்துக்கொண்டார்
என் வீரத்திற்காக.
கும்பிடு,
பயமுறுத்தல், மிரட்டல் மற்றும்
கொலைகளும் செய்வேன் இனி!
இனி என்ன கவலை எனக்கு?

### கரும்புச்சாறு விற்பவன்

புல்லைப் பூதக் கரும்பாக்கிய தீரத்துடன்
தன் வாழ்வும் தாழ்வும்
விழைவோர் முன் தான் எனும்
தாழ்மையுடன்
தன் தொழிலாலே தான் பெற்ற
உரத்துடன்
போதகர்களும் தீர்க்கதரிசிகளும் நின்ற,
அதே நடைபாதையில்தான் அவனும்
நிற்கிறான்.

காய்ந்த கருப்பஞ் சக்கைகளாய்ப் படர்ந்த
ஒளியில்
சிற்றெறும்புகளாய் உலவுகின்றனர்
மக்கள்.

### எது?


பள்ளிக் குழந்தைகளின்
நீண்ட அணிவகுப்பிலிருந்து
இராணுவத்தின்
நீண்ட அணிவகுப்பிற்கு
யாரோ நம்மை வளர்த்துக்
கொண்டிருக்கிறார்கள்
வரிசை வரிசையாய் நீளும்
கூண்டுக்குள்
முட்டையிட்டுக் கொண்டிருக்கும்
ஒரே வகைப் பறவைகளாய்
நாம் மாறிய தெவ்விதம்?
சாட்டைகளேந்தி
நம்மை மாற்றிக்
கொண்டிருப்பதுதான்
எவ்வகைச் சக்தி?
கூண்டுக்கு வெளியேயிருக்கும்
சுதந்திர வெளி
நம்மை ஆகர்சிக்காமல் போன
தெவ்விதம்?
இருள், பொந்து மற்றும்
மறைவிடங்கள் தேடிப்
பதறியோடும் சிறு விலங்குகளாய்
நாம் மாறினோம் எவ்வாறு?
நம்மை உருமாற்றிய
மெதுவிஷத்திடமிருந்து
நம்மை விடுவிக்கும் திடீர் அமிர்தம்
எது?

### அத்துணை பெரிய துக்கமும் இத்துணை பயங்கரங்களும்


கண்ணில் விரல்விட்டு
ஆட்டுகிறாய்
எல்லாச்
சந்தோஷங்களையும்
வெட்டித் தகர்த்து
எத்துணை பெரிய
துக்கத்தை ஆக்குகிறாய்?

அத்துணை பெரிய துக்கமும்
ஒரு பயனுமற்றது என
மீண்டும் என் கண்ணில்
உன் விரல்.
அத்துணை பெரிய துக்கம்
கடக்கப்படுவதற்கோ மீண்டும்
மீண்டும்
இத்துணை பயங்கரங்களும்?

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : உ.ச.மு. முகஸ்தீன்
வயது : 25
முகவரி : தோப்பூர் 07, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு, கிரிக்கெட்.



பெயர் : S. Suventhiran.
வயது : 21
முகவரி : P. O. Box - 40209, Doha, Qatar.
பொழுதுபோக்கு : கிரிக்கெட்.




பெயர் : எச்.எம்.எம். ரொஷான்.
வயது : 24
முகவரி : 234/5, மத்திய வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : ச. ஜெய்விக்ரமன்
வயது : 22
முகவரி : U.D.41, ஸ்ரீ தர்மராம வீதி, தெமட்டகொடை, கொழும்பு - 09.
பொழுதுபோக்கு : புத்தகம், பேனா நட்பு, பத்திரிகை.


# பெண்களின் முதல் மாரடைப்பு ஆஸ்பிரின் தடுக்காது...!




**மா**ரடைப்பு ஆபத்து அதிகமாக உள்ளவர்கள் தினந்தோறும் ஆஸ்பிரின் மாத்திரை எடுத்துக் கொள்வதன் மூலம் ஆபத்தைத் தடுக்க முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள். ஆனால் முதன் முதலாக மாரடைப்பைச் சந்திக்கும் பெண்களுக்கு இதனால் ஒரு பயனும் இல்லை என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. குறைந்த திறன் கொண்ட ஆஸ்பிரின் மாத்திரைகள், 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுஉடைய பெண்களைப் பக்கவாத ஆபத்திலிருந்து காப்பாற்றுவது உண்மைதான். ஆனால் அதே பெண்கள் முதன்முதலாக மாரடைப்பைச் சந்திக்கும் நிலையில் ஆஸ்பிரின் கை கொடுப்பதில்லை.'.

10 வருட காலம் நடந்த ஒரு ஆய்வில் தினந்தோறும் ஆஸ்பிரின் எடுத்துக்கொண்ட பெண்களுக்குப் பக்கவாத ஆபத்து 17 சதவீதம் குறைந்தது. ஆனால் அதே பெண்கள் மாரடைப்பு அல்லது வேறு விதமான இருதய நோய்களால் உயிரிழப்பதை தடுக்க ஆஸ்பிரின் உதவுவதில்லை. வைட்டமின் E மாத்திரைகள் பக்கவாதம் மற்றும் இருதய நோய் ஆகிய இரு வகை ஆபத்துக்களையுமே தடுப்பதில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

ஆஸ்பிரின் மாத்திரைகளால் ஆண்களுக்கு நன்மை ஏற்படும் என்பது ஏற்கெனவே பல்வேறு ஆய்வுகள் மூலம் ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.





# லேடிஸ் ஸ்பெஷல்

## பிள்ளைகளின் காதலை ஏற்பீர்களா..?

**கா**தல் திருமணம் செய்த தம்பதியராக இருப்பார்கள். ஆனாலும், அதே காதல் தங்கள் வாரிசுகளுக்கு வரும்போது அதை ஏற்கமாட்டார்கள். காதல் அநுபவமே இல்லாத பெற்றோரும் கூட அந்த அநுபவம் தங்கள் வாரிசுகளுக்கு வரும்போது அதைப் பெரும்பாலும் அனுமதிப்பதில்லை. ஆக, காதலைப் புரிந்தவர்களும் சரி, புரியாதவர்களும் சரி காதலுக்கு எதிரிகளாகவே இருக்கிறார்கள்.



"நீங்க எப்படி? உங்க பிள்ளைங்க காதலிச்சா, அதை ஏத்துப்பீங்களா?" என்று சிலரிடம் அபிப்பிராயம் கேட்டபோது,

### மனோரமா (டாக்டர்)

"என் பையனுக்கு இப்ப பதினாறு வயசுதான் ஆகுது. ஆனாலும் எந்த மாதிரியான பெண் அவனோட வாழ்க்கைத் துணையா வரணுங்கிற மாதிரி சில விஷயங்களை சொல்லிக் கொடுத்திருக்கேன். அழகுங்கிற விஷயத்தை மீறி, அவனோட சமுதாய, பொருளாதார அந்தஸ்துக்குப் பொருந்தற பெண்ணா இருக்கணுங்கிறதை முதல் கண்டிஷனா சொல்லிருக்கேன். அவன் பிற்காலத்துல காதலிச்சுக் கல்யாணம் பண்றதுல எனக்கு ஆடசேபம் இல்லை. அதே சமயம் இது காதலிக்கிறதுக்கான வயசில்லைங்கிறதையும் ரொம்பத் தெளிவா அவனுக்கு சொல்லிருக்கேன். பதினெட்டு இருபது வயசுக்குப் பிறகு வர்ற காதல்தான் ஓரளவு பக்குவமானதா இருக்கும். அதையும் விட படிச்சு முடிச்சு, வேலையெல்லாம் தேடிக்கிட்டு, வாழ்க்கையில செட்டிலான பிறகு காதல் வந்தா ரொம்ப நல்லதுனும் சொல்லிருக்கேன்."

### அனிதா குஹா (நடனக் கலைஞர்)

"எனக்கு ஒரே பையன். உயர்தரம் படிக்கிறான். நானும் சரி, எங்கக் குடும்பத்துல மத்தவங்களும் சரி, காதலுக்கு எதிரிங்க இல்லை. ஆனா அந்தக் காதல் சரியானதா இருக்கணுங்கிறதுதான் எல்லாரோட ஆசையும். சினிமாவும் மீடியாவும் இன்னிக்குக் காதலை சித்திரிக்கிற விதம் கவலையைத் தரும். பதினாறு, பதினேழு வயசுல வர்ற காதலையெல்லாம் என்னால ஏத்துக்கவே முடியாது. அந்த மாதிரிக் காதலைப் பொறுத்தவரைக்கும் நான் பழைமைவாதிதான். அந்த வயசுல வாழ்க்கையைப் பத்தின பார்வை விசாலமா, தெளிவா இருக்காது. என்னோட பையனுக்கு மட்டுமில்லை. என்னோட ஸ்ருடண்ட்ஸ் எல்லாருக்குமே நான் சொல்ற அட்வைஸ் சின்ன வயசுக் காதல் வேண்டாங்கிறதுதான். அப்படி ஏதாவது சிந்தனை இருந்தா அதை ஆரம்பத்துலயே விட்ருங்கனு சொல்வேன். இருபத்தாறு, இருபத்தியேழு வயசுல லவ் பண்ணட்டுமே... அதுல ஒரு பக்குவம் இருக்கும்.

என் பையனுக்கு இன்னொரு கூடுதல் அட்வைஸும் உண்டு. அதாவது கலாசார வித்தியாசம் இல்லாத மாதிரியான பெண்ணாப் பார்த்துக் காதலிக்கிறது வாழ்க்கையை நல்லபடியா கொண்டு போகும். காதலிக்கிறப்ப கண்ணை மறைக்கிற அந்த வித்தியாசங்கள் கல்யாணத்துக்குப் பிறகு பெரிசாகி, அவங்க நிம்மதியைக் கெடுக்கிறதை நிறைய குடும்பங்கள்ல நான் பார்த்திருக்கேன். இந்த மாதிரி கண்டிஷன்களை ஏத்துக்கிட்டு காதலிக்கிறதா இருந்தா, அதுக்கு பச்சைக் கொடி காட்டத் தயார்."


### ரேவதி (சமையல் கலை நிபுணர்)

"எங்களுக்கு ரெண்டு பிள்ளைங்க. பொண்ணுக்குக் கல்யாணமாயிடுச்சு. நாங்க பார்த்துப் பண்ணி வச்ச கல்யாணம். சந்தோஷமா இருக்காங்க. அடுத்து ஒரு பையன் கல்யாணத்துக்குப் பார்த்திட்டிருக்கோம்.

எங்க பிள்ளைங்களோட விருப்பங்களுக்கு நானும் என் வீட்டுக்காரரும் என்னிக்குமே குறுக்கே நின்னதில்லை. அது வாழ்க்கைத் துணையை செலக்ட் பண்றதா இருந்தாலும் அவங்க விருப்பத்துக்கு முதல்ல மதிப்புக் கொடுப்போம்.

வீட்டுக்கு வரப் போற மருமகள் இப்படியெல்லாம் இருக்கணுங்கிற மாதிரி எனக்கு எந்த எதிர்ப்பார்ப்பும் கிடையாது. வாழப் போறவங்க அவங்க. அவங்க ரெண்டு பேருக்கும் பிடிச்சுப் போய், சந்தோஷமா இருந்தாங்கன்னா அதுதான் பெத்தவங்களுக்கு நிம்மதியே.

இந்தக் காலத்துல பெரியவங்க பார்த்துப் பண்ணி வைக்கிற கல்யாணங்களும் சரியா வராமப் போகுது. ஒருத்தரை ஒருத்தர் விரும்பி, புரிஞ்சுக்கிட்டுப் பண்ற காதல் கல்யாணங்களும் பாதில முறிஞ்சு போகுது. இதுதான் பெஸ்ட்டுனு எதையும் சொல்றதுக்கில்லை. பிள்ளைங்க காதலிக்கிறாங்கனு தெரிஞ்சா, அது சரியான சாய்ஸா இருக்கிற பட்சத்துல ஓ.கே. சொல்லிடறது நல்லது. அந்த ரிஸ்க் முழுக்க முழுக்க அவங்க மட்டுமே சம்பந்தப்பட்டது.




# சிகை அலங்காரங்கள்


## இந்தியன் பிரைட்


முதலில் தலையை நன்றாக Poney tail ஆகக் கட்டுக.

Poney tail இன் மேலே தலைமுடியில் ஒரு பின்னல் போட்டுக்கொண்ட பின் இருபுறமும் உள்ள தலைமுடியில் சிறிதளவை மாறி மாறியெடுத்து நடுப் பின்னலோடு சேர்த்துப் பின்னிக்கொண்ட பின் மிகுதித் தலைமுடியை மடித்து பின்னலின் கீழ் வைத்துக் குற்றி, Poney tail இன் கீழ் உள்ள



பின்னல் பகுதியை தூக்கி Poney tail இன் மேல் வைத்து குற்றிக் கொள்க.





# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது —ஷோபா—*

## பைனப்பிள் பவ்

**5–8 பேருக்குப் போதுமானது**

| | |
|---|---|
| அன்னாசிப்பழம் | - 1 |
| ரின் பால் | - 1 ரின் |
| சீனி | - 6 மே.க. |
| ஜெலற்றீன் | - 1 பக்கற் (30 கிறாம்) |
| முட்டை வெண்கரு | - 1 |
| பைன்னப்பின் எசன்ஸ் | - 1 தே.க. |

செய்முறை:-

ஜெலற்றீனுக்கு 1 தம்ளர் வெந்நீர் விட்டுக் கரைத்து வைக்குக.
அன்னாசியைத் துப்பரவு செய்து சதைப் பகுதியை மட்டுமெடுத்து சதுரவடிவமான துண்டுகளாக வெட்டிக்கொள்க.
தாச்சியை அடுப்பில் வைத்து அன்னாசித் துண்டுகள், 4 மே.க. சீனி என்பவற்றையிட்டுக் கலந்து சீனி கரைத்து பாகு தடிக்கும் பதம் வந்ததும், கரைத்து வைத்த ஜெலற்றீன் கலவையை ஊற்றிக் கிளறி உடனேயே அடுப்பில் இருந்து இறக்கிக்கொள்க.
ரின் பாலை பீற்றரால் நன்கு அடித்துகொள்க.
முட்டை வெண்கருவிற்கு 2 மே.க. சீனி, எசன்ஸ் என்பன கலந்து பீற்றரால் நுரை பொங்க அடிக்குக.
பிறிதொரு பாத்திரத்தில் நன்றாக ஆறிய அன்னாசிக் கலவையை ஊற்றி அதன் மேல் ரின் பாலையூற்றி, அதன் மேல் முட்டை வெண்கருக் கலவையை ஊற்றி, இறுக மூடி, குளிரூட்டியில் வைத்தெடுத்துப் பரிமாறுக.

# அடிவயிற்றுக் கொழுப்பு

**டைப் 2** - நீரிழிவு நோய் உள்ள பெண்கள் தங்களது வயிற்றைக் குறைக்க விரும்பும் பட்சத்தில் உடற்பயிற்சிதான் சிறந்த வழி. என்னதான் நல்ல சத்துள்ள ஆகாரங்கள் மற்றும் டயட்டை பின்பற்றினாலும்

உடல் இயக்கம் இல்லாவிட்டால் அடிவயிற்றுச் சதையைக் குறைப்பது நிறைவேறாது. அடிவயிற்றில் ஆழமாக உள்ள கொழுப்பைக் குறைக்க வேண்டுமானால் உடற்பயிற்சி அவசியம் செய்ய வேண்டும். அதென்ன அடிவயிற்றில் உள்ள கொழுப்புக்கு மட்டும் முக்கியம் கொடுக்கிறார்கள் என்று கேட்கத் தோன்கிறது அல்லவா? விஷயம் இருக்கிறது.



அடிவயிற்றில் ஆழமாகக் காணப்படும் கொழுப்புக்கு Visceral fat என்று பெயர். இந்தக் கொழுப்பு உடலின் மற்ற இடங்களில் காணப்படும் கொழுப்புகளைக் காட்டிலும் அதிக ஆபத்தானது. உடம்பின் எந்தவொரு தவறான இடத்திலும் சிறிதளவுக்கு கொழுப்புச் சேர்ந்தால் கூட ஆபத்துதான். அந்த வகையில் அடிவயிற்றுப் பகுதி உடல் நலனுக்குக் கூடுதலாக ஆபத்தை ஏற்படுத்தும்.

இந் நிலையில் குறிப்பிட்ட கொழுப்பு உடற்பயிற்சிக்கு மட்டுமே கட்டுப்பட்டுக் குறையும். மற்றப்படி தனியாக டயட் மட்டும் பலன் தராது. உடற்பயிற்சியை மட்டும் தனியாகவோ அல்லது கூடவே டயட்டைப் பின்பற்றுவதன் மூலமாக Visceral fat கொழுப்பை குறைக்க முடியும்.

# ஒரு தாயின் மகள் 23

**சென்ற வாரம்**

**விபத்தில் இறந்த பிலிப்பின் தந்தை சாப்மன் தன் பிள்ளை இறந்தது பற்றி வைத்தியரிடம் வினவிக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு நல்ல சட்டத்தரணி. சில சட்டங்களை வைத்து டாக்டரிடம் தன் பிள்ளையின் மரணம் குறித்து விசாரணை நடத்துகிறார். பேஜ் இப்போது சிறிதளவு ஆறுதலடைந்து இருக்கிறாள்.**

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? என் பிள்ளை பதினேழு வயதுப் பையன் என்பதால் அவன் அரை கிளாஸ் ஒயினோ அல்லது அது மாதிரி ஏதாவதோ குடித்திருந்தால் அவன் மீது சுலபமாய்க் குற்றம் சாட்டி விடலாம். அதே சமயம் ஒரு பெரிய பெண்பிள்ளை எவ்வளவு குடித்திருந்தாலும் குடிபோதையில் கார் ஓட்டிக் விபத்து ஏற்படுத்தியிருந்தாலும் அவளை விட்டு விடலாம். ஏனென்றால் அவள் அரசியல்வாதியின் பெண்டாட்டி அப்படித்தானே?" என்று இரைந்தார்.

"என் பிள்ளையை எனக்குத் தெரியும்!" என்று உறுமினார் சாப்மன். "அவன் குடிக்கிறவனேயில்லை. அப்படிக் குடித்தாலும் ரொம்ப ரொம்பக் கொஞ்சமாக ஒயின் குடிப்பான். அதுவும் கார் ஓட்டும்போது குடித்திருக்கவே மாட்டான்!" என்று திரும்பத் திரும்பச் சொன்னாரே தவிர, யார் மீது குற்றம் சொல்லி என்ன பயன் என்பது அவருக்கும் தெரியவில்லை அவர் மனைவிக்கும் தெரியவில்லை.

எட்டத்தில் நின்றபடி ஒரு பத்திரிகை நிருபர் அவர்களைப் படம் பிடித்துக் கொண்டிருந்தான். அவனை அடித்து விரட்ட வேண்டும் போலிருந்தது சாப்மனுக்கு, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்.

பிலிப்பின் சடலத்தைக் கண்டபோது அவர்களுடைய துக்கம் எல்லை மீறியது. தாங்களும் சவமாகி விட்ட மாதிரி ஒரு நிமிடம் அசைவற்று நின்றார்கள். சாப்மன் ஏற்படுத்த நான் இடம்பொடுக்கப் போவதில்லை" என்று சொல்லியபடி மனைவியை அழைத்துக் கொண்டு காருக்குத் திரும்பினார்.

தாரென்ஸனும் பேஜும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பலபலவென்று பொழுது விடிந்து கொண்டிருந்தது. இனிமையான, கதகதப்பான வசந்த காலம். ஆனால் பேஜுக்கு அது வசந்தமாக இருக்கவில்லை. அவள் இருதயத்தில் குளிரும் ஒரு பனியும் குடிகொண்டிருந்தன.

யாராலும் அகற்ற முடியாத அளவுக்குப் பேஜின் முகத்தில் வேதனை குடிகொண்டிருந்தது. தாரென்ஸனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"தலைமை சர்ஜன் டாக்டர் ஹேமர் மோன் சொன்னதை நினைக்க நினைக்க மனசில் பயங்கரமான எண்ணங்கள் ஓடுகின்றன" என்றாள். "அவர் சொன்ன மாதிரி மூளையில் சேதம் ஏற்பட்டிருந்தால் உடம்போ மனமோ பலமாய்ப் பாதிக்கப்பட்டிருக்குமே? அந்த நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? அந்த மாதிரி குழந்தையை வைத்துக்கொண்டு எப்படி வாழ்க்கையை..." என்றவள் நாக்கை கடித்துக் கொண்டாள். தாரென்ஸனுக்கு அப்படியொரு குழந்தை இருக்கிறான் மன வளர்ச்சி இல்லாமல் அவனை வைத்துக் கொண்டார்கள். எதிர் காலத்தில் எப்படி எப்படிச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்ற நினைப்பு இருவர் மனதிலும் மேலோங்கியிருந்தது.

சற்றே மனச்சுமை குறைந்தவளாக பேஜ் அவனை ஏறிட்டு நோக்கினாள். தன்னைப் போலவே அவனும் அவசர அவசரமாக வந்ததில் கசங்கிய தலையுடன் கன்னாபின்னாவென்ற உடையுடன் வந்திருப்பதைக் கண்டு அவளையும் அறியாமல் மெல்லிய புன்சிரிப்பு வந்தது. தன்னையே ஒருமுறை பார்த்துக்கொண்டவள், "ஓட்டமாய்ப் புறப்பட்டு வந்ததில் நான் டிரெஸ் என்று ஒன்றை மாட்டிக் கொண்டேனே என்பதே ஆச்சரியமாக



கதறி அழுதார். மேரி குனிந்து மகனை முத்தமிட்டாள்.

பதினேழு வருடங்களுக்கு முன், அன்னையாகிவிட்ட பூரிப்புடன் அவனைக் கையிலேந்தி மகிழ்ந்தது இப்போது தான் போலிருந்தது. அந்தக் குழந்தை யைத் தன் கையிலிருந்து யாரும் பறிக்கப் போவதில்லை என்று எண்ணியதெல்லாம் எத்தனை பொய்யாகி விட்டது!

இன்னொரு பத்திரிகை நிருபரும் அவர்களைப் படம் எடுத்தார். இப்போது சாப்மன் அவர் மீது கோபப்படவில்லை. தன் கோபம் எல்லாருக்கும் தெரியட்டும் என்றே தீர்மானித்தவராக "இதை இப்படியே விடமாட்டேன்! ஒரு செனெட்டரின் மனைவியைக் காப்பாற்றுவதற்காக, செனெட்டரின் பெயரையும் பதவியையும் காப்பாற்றுவதற்காக, என் பிள்ளையின் பெயருக்குக் களங்கம்

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கொண்டு அவன் சமாளித்துக்கொண்டு வருகிறான்.


"ஸாரி... வாயில் வந்துவிட்டது. யோசனை இல்லாமல் பேசி விட்டேன்" என்றாள்.

"பரவாயில்லை. உன் வேதனை எனக்குப் புரிகிறது. க்ளோவின் கால்களைப் பற்றி நானும் அப்படித்தான் இன்று நினைத்து வேதனைப்படுகிறேன். அன்று என் குழந்தை பிஜானுக்கு மனவளர்ச்சி இருக்காது என்று டாக்டர்கள் சொன்னபோதும் அப்படித்தான் இருந்தது. என்ன செய்ய?" என்றான் தாரென்ஸன். இருவரும் ஒருவரிடம் ஒருவர் மனம் திறந்து பேசிக் இருக்கிறது" என்றாள்.

அந்த நீண்ட ராத்திரியில் முதல் முறையாகத் தாரென்ஸனும் புன்னகை செய்தான். "நான் அணிந்திருப்பது என் பெரிய பிள்ளை நிக்கினுடைய ஜீன்ஸ், ஷர்ட் சின்னவன் பிஜானினுடையது. காரை எடுக்கும்போது அங்கே கிடந்த ஷூக்களை மாட்டிக் கொண்டேன். யாருடையது என்றே தெரியாது," என்றவன், "பிஜானைப் பற்றி உன்னிடம் நான் அதிகம் சொன்னது கிடையாது அவன் பிறந்தது முதலே என் மனைவி டானாவுக்குப் பிடிக்கவில்லை. அவனை வெறுத்தாள். அப்படியொரு குழந்தை பிறந்ததற்கு நான்தான் காரணம் என்பது போய்விட்டாள். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான விடுதியில் அவனைச் சேர்த்துவிடவேண்டும் என்பது அவள் அபிப்பிராயம்..."

(தாய் தொடர்வாள்.....)

# ஓவிய உடை



நிர்வாண உடலில் அழகழகான ஓவியங்களை வரைந்து கொள்வது மேற்கத்தைய நாடுகளில் பேஷனாக கருதப்படுகிறது. இதற்காகப் பிரத்யேகமாக போட்டிகளும் நடத்தப்படுகின்றன. சமீபத்தில் பெல்ஜியம் நாட்டின் புருசெல்ஸ் நகரில் இது போன்ற உடல் ஓவியப் போட்டி நடைபெற்றது. இதில் ஐரோப்பா முழுவதும் இருந்து ஏராளமான அழகிகள் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்து கொண்ட அழகிகள் துணி உடைகளை களைந்து நிர்வாண உடலில் அழகழகான ஓவியங்களை வரைந்து கொண்டனர். இதற்காக உலகப் புகழ் பெற்ற ஓவியர்கள் புருசெல்ஸ் நகருக்கு வந்திருந்தனர். இவர்கள் ஒவ்வொரு அழகிக்கும் சுமார் 5 மணி நேரம் செலவழித்து அவர்கள் உடலில் அழகிய ஓவியங்களைத் தீட்டினர். பின்னர் அனைத்து அழகிகளும் ஓவிய உடையுடன் மேடையில் உலா வந்து பார்வையாளர்களை கிளுகிளுப்பூட்டினர். படத்தில் ஒரு அழகி ஓவிய உடையுடன் ஒயிலாக நடந்து வரும் அழகைக் காணலாம்.



## ஓரினச் சேர்க்கையாளர் திருமணம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஓரினச் சேர்க்கையாளர் திருவிழா கொண்டாடப்பட்டது. அப்போது ஆயிரக்கணக்கான ஆண், பெண் ஓரின சேர்க்கையாளர்கள் கவர்ச்சி உடையில் பேரணி நடத்தினர். படத்தில் ஒரு பெண், பேரணியில் நடனமாடிக் கொண்டே சென்ற காட்சியைக் காணலாம். மேற்கத்திதைய நாடுகளில் ஓரினச் சேர்க்கையாளர் திருமணமத்திற்கு சட்டபூர்வ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.



## ஆடை குறைப்பு

உலகப் பிரசித்தம் பெற்ற விக்டோரியா பெக்காம். கிறிஸ்டினா அகுலிரியா, செரினா வீல்லியம்ஸ். கேட் மாஸ், கெரி ஹாலிவெல் பாரிஸ் ஹில்டன் காரா பெர்கூஸன்போன்றோர் முழு நிர்வாணமாக போஸ் கொடுத்துள்ள படங்களை 'போர் இஞ்சஸ்' (Four Inches) என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. இவர்கள் போஸ் கொடுத்ததால் வரும் பணத்தை, எல்டன் ஜான் எய்ட்ஸ் அறக்கட்டளைக்கு வழங்க இருப்பதால், அந்த செலப்ரிட்டிகள் தங்கள் ஆடைகளை துறந்தனர்.

# புலம் பெயர்ந்தவர்களின் பேனா முனை

**பூ**ச்சியத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் - எல்லாவற்றையும் போலவே. இழந்தபோது புகுந்துகொள்ளும் சூனியத்தைப் போல விக்கித்து நிற்கிறேன். நீண்ட இடைவெளியின் பின் 'தாயக' ஆசிரியருக்கு ஒரு கட்டுரை என்றபோது மகிழ்ச்சிதான். ஆனால் அது எதற்காகவென்றபோதுதான்

# ஒரு மரத்துப் பறவைகளாய்....

இனந்தெரியாத சோகம் மூழ்கடிக்கிறது.

மீண்டும் பூச்சியத்துக்கே மீள்கிறேன். வலு ஒன்றுமே இல்லையென்றபோதும் அதன் வலிமையை என்னவென்பது! இங்கிருந்தே எல்லாமே ஆரம்பித்தது. பின்னால் இணைந்ததுக்கெல்லாம் வலிமை. இதைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டதுக்கெல்லாம் கூட வலிமை. ஆனால், அது மட்டும் எதுவுமே இல்லாமல் சிரித்தபடி, இன்னும் ஒன்றுமே இல்லாத வெறும் பூச்சியமாக.... தாயகம் போல.

தாம்தான் நடுநிலையின் காவலரென்று சுயதம்பட்டமடிக்கப் பலர் இருக்கின்றனர் இங்கே. ஆனால் தாம் சேர்ந்தவர்களைத் தடவிக் கொடுக்கவில்லையென்று அவர்களால் பிரசுரம் மறுதலிக்கப்பட்ட ஆக்கங்கள் சாட்சியாயிருக்கின்றன. நடுநிலை என்னவென்று விளங்கிக்கொள்ளாத இத்தகையோர் எதைத்தான் நமுநிலையென்று சொல்கிறார்களோ...யாரறிவர்?

அது ஒரு காலம்...சரியாகச் சொல்லப்போனால் "தாயகக் காலம்". அப்போதுதான் அதுவும் 'தாயகம்' பத்திரிகையில் மட்டுந்தான் என் சார்பு உன் சார்பு என்றில்லாமல் எவரும் எது சார்ந்தும் எழுதக்கூடிய எழுத்துச் சுதந்திரத்தை அனுபவித்தனர். தாம் பெரிய எழுத்தாளர்கள் எனப் பெருமைப்படும் பலருக்கும் களத்தையும் துணிவையும் தந்தது 'தாயகம்' பத்திரிகை மட்டுமே. இது தெரியாது, நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்து தாமும் பத்திரிகையாளர் எனத் தாமே சொல்லிக்கொள்வோர் எதிர்ப் புரட்சிக்காரப் பத்திரிகையே 'தாயக'மென்று மிகப் பிழையாகச் சொல்லியும் எழுதியும் வருவது அவர்களது அறிவு வறுமையையே காட்டுகின்றது.

'தாயகம்' நின்றுபோனதன் பின் இன்று வரை உண்மையான நடுநிலைத் தமிழ்ப் பத்திரிகை எதுவும் கனடாவில் வெளிவரவில்லை என்பது கசப்பான உண்மையுங்கூட. இனியும் ஏதும் நடுநிலையான பத்திரிகையாக வெளிவருமென்று கட்டியங் கூறவும் முடியாதுள்ளது.

தனக்குப் படுவதை எவருக்கேனும் சொல்ல வேண்டுமென்ற உந்துதலே ஒருவரை எழுத்தாளர் ஆக்கிவிடுகிறது. ஆயினும் தான் சொல்ல வருவதை அப்படியே மற்றவர் புரிந்துகொள்ளும்படி எழுதும்போதே ஒருவர் சரியான எழுத்தாளராக அடையாளப்படுத்தப்படுகிறார். அதே நேரம் மற்றவர்களைத் திருப்திப்படுத்தவும் மற்றவர்களுக்குத் தெரிந்ததை எழுதுவதும், பிரதிபண்ணுவதும் சரியான எழுத்தாகாது. ஆகையால்தான் எழுதிப் பிரசுரிப்போரெல்லாம் எழுத்தாளர்களல்லர்.

'தாயகத்'தில் எழுதியோர்கள் நிர்ப்பந்தத்தாலோ புகழ் தேடவோ எழுதியோரல்லர். அதனால்தான் நல்ல பல எழுத்தாளர்கள் அங்கு அறிமுகமானார்கள். இலக்கியம், சமயம், அரசியல், விஞ்ஞானம், இலக்கணம் எனப் பலதும் அதில் சங்கமித்தன. இன்னொரு வகையில் சொல்லப்போனால் பற்பல பறவைகளும் நாடி வந்தமர்ந்த மரமாக 'தாயகம்' இருந்திருக்கிறது.

ஆளையாள் நேரடியாக அறிந்திராவிடினும் பலரும் கூடியிருந்திருக்கிறோம். தத்தம் நோக்கில் தம் பிரக்ஞைகளை ஆற்றுப்படுத்தியிருக்கிறோம். அது ஒரு காலம்...இனிமையான 'தாயக'க் காலம். இப்படிக் கூடியவர்களில் நிலா குகதாசன், குமார் மூர்த்தி, இப்போது தி.உமாகாந்தன் இரங்கலில் வந்தமர வேண்டியது சோகமானதுதான்.

சந்தர்ப்பம் கிடைத்தாலே தம் கொள்கைகளையும் குதர்க்கங்களையும் கொட்டித் தீர்ப்பதிலேயே பலரும் குறியாயிருக்கும். இக் காலத்தில் எழுத்துச் சுதந்திரம் இருக்கிறதென்று கண்டபடியெல்லாம் எழுதாமல், கருத்தை நாணயமாக எழுத்து இங்கிதத்துடன் எழுதியவர்கள் தாயக எழுத்தாளர்கள். இன்று வரை இவர் எது சார்ந்தவர் என்றே தெரியாமல் பல தாயக எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவராய் உமாகாந்தனும் இருந்திருக்கிறார். இன்று இவர் இந்தக் கொள்கையினை உடையவர் எனப் பலரும் கூற முன்வந்தாலும், தாயகத்தில் இவர் எழுதிய எதிலும் இம்மியளவும் இதனை இனங்காட்டிக்கொள்ளாது இருந்தது இவரின் எழுத்து நேர்மையைக் காட்டுகிறது.



வாசுதேவ நாணயக்காரவுடன் உமா காந்தன்

உலக அரசியல் என்றால் உமாகாந்தன்தான் என்று எழுத்தாளர், வாசகர் மட்டத்தில் தனக்கென அடையாளத்தை ஏற்படுத்திக்கொண்டது அவரது உலக அரசியல் ஞானத்தைப் புலப்படுத்துகின்றது. உலக அரசியல் பற்றி முன்னம் அட்சரம் எதுவும் வாசித்திராத பலருக்கும் பக்குவமாகத் தனது எழுத்தாற்றலால் அட்சராப்பியாசம் செய்துவைத்தவர் இந்த உமாகாந்தன்தான்.

எழுத்தாற்றல் எல்லோருக்கும் வருவதில்லை. அங்கிங்கு சாயாமல் தன் நோக்கைச் சீருடனும் நேர்த்தியாகவும் எழுத்துருவில் கொண்டுவருபவனே சிறந்த எழுத்தாளன். இந்த வரையறையைக் கச்சிதமாக நிறைவேற்றியவராக தி.உமாகாந்தனைக் காண முடிகிறது. சரியாகச் சொல்லப்போனால் ஒரு நடுநிலையான எழுத்தாளனாகத் தன்னை வார்த்திருந்ததே அவரது சிறப்பு.

மீண்டும் பூச்சியத்துக்கு....இழந்து நிற்கிறோம். சூனியத்துள் உழன்றபடியே. இந் நேரத்தில் எதைக் கூறிக்கொள்வது? நடுநிலையின் வலிமையை வலியுறுத்துவதைத் தவிர வேறேதுமறியாது தவித்தபோது எல்லாமே முடிந்துபோய் ஒரு பூச்சியத்துக்கு மீண்டுவிட்டது....மிக்க வலியதாய்....புதிய பாதை இடவேண்டிய கடமை மீதிப் பறவைகளுக்காகக் காத்திருக்கிறது என்பதுதான் இறுதியாகக் கிடைக்கப்பெற்ற செய்தி!

*(நன்றி:- www.Thayagam.info)*

(அடுத்த வாரமும் தொடரும்)

---

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா*
*அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

## உரிமை மடல்... 2

*அன்பான எம் தேசத்து மக்களே!*

**ம**றுபடியும் உங்களை ஒரு உரிமை மடலில் சந்திப்பதில் மகிழ்ச்சி! இது உங்களது உரிமைக்காக நான் எழுதும் மனந்திறந்த மடல்! உங்களது அவலங்களுக்கு முடிவுரை எழுத இது நான் எழுதும் ஆதங்க மடல்!

இதில் வரும் விமர்சனங்கள் தவறுகளில் இருந்து ஆதாயம் தேடுவதற்கான முயற்சி அல்ல! மௌனமாக்கப்பட்ட உங்களுக்கு சில உண்மைகளைப் புலரவைப்பதற்காகவே! நீங்கள் உணர்ந்துகொண்டால் இனியும் இந்தத் தவறுகள் நிகழாது தடுக்க உங்களால் முடியும் என்ற நம்பிக்கையில் மட்டும்தான் இவைகளைக் கூற விரும்புகிறேன்.

என் பாதங்கள் சுடுகின்றன!.. ஏன் என்று நீங்கள் நினைக்கலாம். எரிந்துபோன எம் தேசத்தில் எழுந்த தீச் சுவாலையில் நானும் கால் பதித்து நடந்தவன்! தேசத்திற்காகத் தீ மிதித்த அந்த ரணங்கள் இன்னமும் ஆறவில்லை! ஆகவேதான் என் பாதங்கள் இன்னமும் சுடுகின்றன.

சாத்வீகம் சரிப்பட்டு வராது... அகிம்சையினால் எதுவும் ஆகாது என்று எண்ணித்தான் நாமும் அன்று ஆயுதம் ஏந்தியவர்கள்!

கடையடைப்பும், கர்த்தாலும், பகிஸ்கரிப்பும், பஸ் எரிப்பும், விடுதலைக்கு வழிகோலாது என்று எண்ணித்தான் நாமும் ஆரம்ப காலத்தில் ஆயுதம் ஏந்தியவர்கள்.

எமது தேசம் தலை நிமிர... தேசத்தின் தலைவிதியை எமது வலிய கரங்களால் எழுதி முடிக்கலாம் என்ற நம்பிக்கையில்தான் நாமும் ஆயுதம் ஏந்தியவர்கள்!

ஆயுதப் போராட்டம் என்பது தவறானது என்று நான் கருதியதில்லை. எமது சமகால இருப்பையும் நகர்வையும் நியாயப்படுத்துவதற்காக நாம் முன்னெடுத்திருந்த கடந்த கால இலக்கு நோக்கிய நகர்வுகளைக் கொச்சைப் படுத்துவதற்கு நான் தயாரில்லை!

எமது மக்கள் மீது விரிந்திருந்த ஒடுக்குமுறைதான் எம்மை ஆயுதம் ஏந்தச் சொன்னது. அன்றைய சூழ்நிலை ஆயுதப் போராட்டம் என்ற வடிவத்தைத்தான் எமக்குப் போராட்ட முறையாகக் கற்றுத் தந்தது.

ஆனாலும் நாம் யுத்த வெறியர்களாக இருந்ததில்லை!.... ஆயுதங்களின் மீது மட்டும் மோகங் கொண்டவர்களாக நாம் இருந்ததில்லை!...

அரசுக்கு எதிராக நாம் ஆயுதம் ஏந்திய போராட்டத்தை உறுதியுடன் முன்னெடுத்திருந்தோம்! அதில் எமது இன்னுயிர் தோழர்கள் பலரை நாமும் இழந்திருக்கின்றோம்! எங்கள் தேசப் புதல்வர்கள் பலரைத் தேச விடுதலை என்ற எமது தியாக வேள்விக்கு நாமும் உரமாக்கியிருக்கின்றோம்!

கால மாற்றமும் சூழல் மாற்றமும் எங்களது போராட்ட வடிவத்தில் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றது. அந்த மாற்றங்கள் மக்களாகிய உங்களது விருப்பங்களில் இருந்து உருவெடுத்த ஒன்றுதான்.

ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு பாலஸ்தீன மண்ணில் நான் பயிற்சி எடுத்துக்கொண்ட அந்த ஆரம்ப நாட்களின் நினைவுகளை நான் உங்களிடம் கூற வரவில்லை!

ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி பாராளுமன்றப் படிகளில் இன்று நான் எதற்காகக் கால் பதித்தேன் என்பதைத்தான் உங்களிடம் கூற வருகின்றேன்!

தூக்கிய துப்பாக்கிகளைக் கீழே பதியோம்... துப்பாக்கிக் குழாய்களுக்கு ஊடாகவே நாம் அரசுடன் பேசுவோம் என்று நாம் அன்று களத்தில் நின்ற நினைவுகளை உங்களிடம் நான் கூற வரவில்லை!.

தூக்கிய துப்பாக்கிகளைத் தூக்கி எறிந்துவிட்டு மாற்றம் ஒன்றை நிகழ்த்துவதற்காக மாற்று வழியில் நின்று நாம் எதற்காகப் பயணித்து வருகின்றோம் என்பதைத்தான் நான் உங்களிடம் கூற வருகின்றேன்!...

விடுதலைக்கான பாதை என்பது நாங்களாகத் தீர்மானிக்கும் விடயமல்ல!.. அது மக்களாகிய உங்களிடம் இருந்துதான் பிறக்கின்றது. சூழ்நிலை அறியாமல்... மக்களின் கருத்துக்களை அறியாமல்.... அதிகாரங்களையும் தீர்மானங்களையும் எமது கைகளில் எடுத்துக்கொண்டு எந்தப் போராட்டத்தையும் நாம் வெற்றிகரமாக நடத்திவிட முடியாது.


ஒரு காலத்தில் மக்களாகிய நீங்கள், உங்களுக்காகப் போராடப் புறப்பட்ட இயக்கங்களிடம் அனைத்து அதிகாரங்களையும் தீர்மானங்களையும் ஒப்படைத்திருந்தீர்கள்! ஆனால் அந்த அதிகாரங்களை அவர்களில் பலர் சரிவரப் பயன்படுத்தியிருக்கவில்லை! அதனால் நீங்கள் அழிவுகளை மட்டும்தான் சந்தித்து வருகின்றீர்கள்!

ஆரம்ப கால விடுதலைப் போராளி என்ற வகையில் மக்களாகிய நீங்கள் சந்தித்த அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் உரிய தார்மீகப் பொறுப்பை நானும் ஏற்றுக்கொள்கின்றேன்! சரியான அரசியல் மார்க்கம் என்பது தன்னியல்பாக வருவதில்லை! அது போராட்டத்தின் போக்கிலேயே வருகின்றது.

நீங்கள் பட்ட அவஸ்தைகளின் அனுபவங்கள் உங்களது மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இன்று நீங்கள் அதிகாரங்களையும் தீர்மானங்களையும் உங்களது கைகளில் எடுத்துக்கொள்ளப் பிரியப்படுவதையே நான் உணர்கின்றேன்! இது மக்களாகிய உங்களது நாடி நரம்புகளைப் பிடித்துப் பார்த்ததில் நான் கண்டுகொண்ட உண்மை!

தியாகம் மட்டும் இருந்தால் போதாது!... ஒரு போராட்டத்திற்கு ஒரு திசை இருக்க வேண்டும்!.. ஆகவேதான் நாம் கண்டுகொண்ட நடைமுறை அனுபவங்களின்படி போராட்டம் என்பது திசைவழி மாறிய பாதையில் தடம் புரண்டதை நாம் உணர்ந்துகொண்டோம்! திசைவழி மாறிய பயணத்தின் முடிவில் வெறும் பூச்சியங்களைத் தேடி இனியும் பயணிப்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தோம்!

எதிரியின் படை முகாம்களைச் சுற்றிவளைக்க வேண்டியவர்கள், சகோதர இயங்கங்களின் முகாம்களை என்று சுற்றிவளைத்தார்களோ அன்று போராட்டம் திசைவழி மாறியது!...



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

எதிரியின் குருதியில் தமது கைகளை நனைக்க வேண்டியவர்கள், சகோதரப் போராளிகளின் குருதியில் கைகளை என்று நனைத்தார்களோ அன்று போராட்டம் திசைவழி மாறியது.

எந்த மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகப் போராட முற்பட்டார்களோ, அதே மக்களின் ஜனநாயக உரிமைகள் போராட முற்பட்டவர்களால் என்று மறுக்கப்பட்டதோ அன்று போராட்டம் திசைவழி மாறியது.

இந்த இடத்தில் மற்றுமொரு உண்மைச் சம்பவத்தை நான் உங்களிடம் கூற விரும்புகிறேன்! சில வருடங்களுக்கு முன்பு லண்டனில் நடந்த ஒரு மனித உரிமைகள் குறித்த கலந்துரையாடலை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்!

சிறீலங்கா அரச படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதப் படுகொலைகள் குறித்து அங்கு கேள்விகள் தொடுக்கப்பட்டன. அது குறித்த புள்ளிவிபரங்களை அக் கூட்டத்தில் தேடுதல் நடத்திக்கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கே எழுந்த ஒரு மனித உரிமை வாதி எழுப்பிய கேள்வி அனைவரையும் சிந்திக்க வைத்தது. அந்தக் கூட்டம் ஒரு முடிவின்றிக் கலைந்துபோக வழி சமைத்திருந்தது. அவர் கேட்ட கேள்வி இதுதான்!

"இதுவரை எத்தனை தலைவர்களை நாம் இழந்துவிட்டோம்! இதில் சிறீலங்கா அரச படையினரால் கொல்லப்பட்ட ஒரு தமிழ்த் தலைவரின் பெயரை உங்களால் கூற முடியுமா" எனக் கேள்வி எழுப்பியிருந்தார். சபையிலிருந்து யாரும் கருத்துக் கூறவில்லை. அனைவரும் மௌனம் சாதித்தார்கள்.

அந்த மௌனத்தின் அர்த்தம் எந்தவொரு தலைவரையும் அரச படையினர் கொல்லவில்லை என்பதுதான். அப்படியானால் யார் கொன்றார்கள்?...

யாரை நம்பி மக்களாகிய நீங்கள் போராளிகள் என்று கருதி உங்களது அதிகாரங்களைக் கையளித்தீர்களோ அவர்களே தமிழ்த் தலைவர்களைக் கொன்றார்கள்!

ஆகவேதான் போராட்டம் என்பது திசைவழி மாறியதாக நாம் உணரத் தலைப்பட்டோம்! மக்களாகிய நீங்களும் அதை உணர்ந்திருப்பீர்கள்!

இவைகள்தான் நாம் போராட்டப் பாதையை மாற்ற வேண்டியதற்கான அகநிலைக் காரணிகள் என்று கூறலாம்! ஆனாலும் இவைகள் மட்டும்தான் காரணங்கள் என்று கூறிவிட முடியாது!

புற நிலையிலும் அதை விடப் பலமான காரணங்கள் இருந்தன. இன்று வரை இன்னமும் இருக்கின்றன. மெல்ல மெல்ல மாறி வந்த உலகத்தின் போக்கு எமது போராட்டப் பாதையிலும் ஒரு பாரிய மாற்றத்தை வேண்டி நின்றது.

அதில் ஒன்றுதான் இலங்கை இந்திய ஒப்பந்தம்!

இது குறித்த சில விரிவான விளக்கங்களோடு... சில நடைமுறை அனுபவங்களோடு....

மீண்டும் மறு மடலில் சந்திப்போம்!

திட்டங்கள் எங்களது!.... தீர்மானம் உங்களது!...

தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!

*என்றும் நாம் மக்களுக்காக!...*
செயலாளர் நாயகம்
**- தோழர் டக்ளஸ் தேவானந்தா!**

*நன்றி :- இதயவீணை*

(அடுத்த வாரம் வரும்)

ஒரு பெண்ணின் வாழும் வரலாறு
ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அழைப்பு

இலங்கையின் டாக்டர்களைப் பயன்படுத்த முயற்சி செய்து பார்த்தோம். ஆனால் அவர்களால் சிகிச்சையளிக்க முடியவில்லை. இப்போது நோயாளி இந்தியாவுக்கு வந்துள்ளார். இந்திய டாக்டர்கள் சர்வகட்சி மாநாட்டுப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுமாறு

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளோடு அவர் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தினார். இக் கட்சிகளிடம் அவர் இரு கேள்விகளைக் கேட்டார். அவை, சர்வகட்சி மாநாட்டுக் கலந்துரையாடலுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியை அழைப்பதா? தீர்வாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் பொதியின் தன்மை எப்படி இருக்க வேண்டும்? ஆகிய இரு கேள்விகளை அவர் பிரதானமாக முன்வைத்தார்.

இக் காலகட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன இரு முனைத் தந்திரோபாயங்களைப் பிரயோகித்தார். தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இந்திரா காந்தி மேற்கொண்ட




மருந்தினைச் சிபார்சு செய்துள்ளனர் என்று புதுடில்லி தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய மாநாட்டில் உரையாற்றிய கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூறினார். அங்கு அமிர்தலிங்கம் மகாபாரதத்தில் ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

"பார்த்தசாரதி ஒரு தூதுவராக அனுப்பி வைக்கப்பட்டார். அவர் துரியோதனனிடம் சென்று பஞ்ச பாண்டவர்களுக்கென ஐந்து கிராமங்கள் கேட்டார். அது மறுக்கப்பட்டபோது ஐந்து வீடுகள் கேட்டார். இவைகள் கிடைக்காதபோதே யுத்தத்தைக் கேட்டார்" என்று மகாபாரதத்தில் தூது சென்ற பார்த்தசாரதியின் கதையைக் கூறினார் மகாபாரதத்தில் வருடம் கிருஷ்ண பரமாத்மா, பார்த்தசாரதி என்றும் அழைக்கப படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

சௌமியமூர்த்தி தொண்டமானும் இந்திரா காந்தியைப் புதுடில்லியில் சந்தித்துப் பேசிவிட்டுக் கொழும்பு திரும்பியிருந்தார். ஜெயவர்த்தன இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசிய பின்னரே தொண்டமான் இந்திராவைச் சந்தித்தார். தனது சந்திப்புப் பற்றிக் கொழும்பில் நடத்திய பத்திரிகை

**இதேவேளை சர்வகட்சி மாநாடு குறித்து தமிழர் தரப்பு அமைப்புகளிடத்தில் நம்பிக்கையூட்டும் முயற்சிகளில் தமிழர் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் ஈடுபட்டார். பேச்சுவார்த்தைக்குத் தேவையான மனோரீதியான சூழலை ஏற்படுத்தும் முயற்சியில் அமிர் ஈடுபட்டார். இம் மாநாடு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உதவுமென்றும், எனவே தமிழ் அமைப்புகள் இதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டார். தனது கட்சிக்குள்ளிருந்த தீவிரவாத இளைஞர்களுக்கு அவர் நம்பிக்கையூட்டியதோடு, சென்னையில் தளமமைத்து இயங்கிக்கொண்டிருந்த புளொட், ரெலோ, ஈரோஸ், புலி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்களின் தலைமைகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.**

யாளர் மாநாட்டில் தொண்டமான் விளக்கினார். வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான விடயம் பற்றியே தீர்வு காணப்பட வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்று தான் நம்புவதாகவும் தொண்டமான் சொன்னார்.

இலங்கை திரும்பியதும் சர்வகட்சி மாநாட்டுக் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கான முன் தயாரிப்புகளில் ஜெயவர்த்தன ஈடுபட்டார்.

(*அரசியல் தொடர்*)

அரசியல் கட்சிகளையும் பௌத்த மகா சங்கத்தினரையும் கூடத் தனித்தனியாக அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எம்.ஈ.பி., தமிழ்க் காங்கிரஸ்,

அழுத்தங்களை ஜெயவர்த்தனவினால் மீற முடியவில்லையென்றபோதிலும், அமெரிக்க ஜெனரல் வோல்டர்ஸ் மேற்கொண்ட முயற்சிகளால் ஜெயவர்த்தன கொண்டிருந்த இந்திய விரோத மனோபாவம் பேச்சை இழுத்தடிக்க வேண்டுமென்று ஜெயவர்த்தனவை உந்தியது.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

அதிகாரப் பகிர்வு தொடர்பாக இந்தியாவின் விசேட பிரதிநிதி பார்த்தசாரதி பல தரப்புகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, அதிகாரப் பகிர்வின் மூலமே பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று ஜெயவர்த்தனவை வலியுறுத்தியிருந்த போதும் மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்வுகள் மேற்கொள்ளப்படுமென்று சில வேளைகளிலும், மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படுமென்று சில சந்தர்ப்பங்களிலும் தடுமாற்றமான கருத்துக்களை ஜெயவர்த்தன கூறிக்கொண்டிருந்தார்.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென்று முன்னர் அறிவித்திருந்த பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி, பின்னர் கலந்துகொள்ளச் சம்மதித்தது மட்டுமல்ல, இம் மாநாட்டுக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அழைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியது. இம் மாநாட்டுக்குத் தமிழர் கூட்டணி அழைக்கப்பட்டாலேயே நம்பகத்தன்மையுடன் கூடிய முடிவுகள் எடுக்கப்படுமென்று சுதந்திரக் கட்சி தெரிவித்தது. சுதந்திரக் கட்சியின் இந்த மாற்றத்துக்கு இந்திய அழுத்தமும் பார்த்த சாரதியின் இராஜதந்திரமும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டுக்கு அழைக்கப்படுவதை ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளிருந்த சில சிரேஷ்ட தலைவர்களும் பௌத்த மகா சங்கத்தினரும் கடுமையாக எதிர்த்தனர். இதேவேளை சர்வகட்சி மாநாடு குறித்து தமிழர் தரப்பு அமைப்புகளிடத்தில் நம்பிக்கையூட்டும் முயற்சிகளில் தமிழர் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் ஈடுபட்டார். பேச்சுவார்த்தைக்குத் தேவையான மனோரீதியான சூழலை ஏற்படுத்தும் முயற்சியில் அமிர் ஈடுபட்டார். இம் மாநாடு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க உதவுமென்றும், எனவே தமிழ் அமைப்புகள் இதில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டார். தனது கட்சிக்குள்ளிருந்த தீவிரவாத இளைஞர்களுக்கு அவர் நம்பிக்கையூட்டியதோடு, சென்னையில் தளமமைத்து இயங்கிக்கொண்டிருந்த புளொட், ரெலோ, ஈரோஸ், புலி, ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகிய இயக்கங்களின் தலைமைகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். பார்த்தசாரதி அதிகாரப் பகிர்வு தொடர்பாக முன்வைத்திருக்கும் யோசனைகள் பற்றியும் அதனால் ஏற்படப்போகும் பலாபலன்கள் பற்றியும் அமிர்தலிங்கம் இவர்களுக்கு எடுத்து விளக்கி நம்பிக்கையூட்டும் முயற்சிகளில் ஈடுபட்டார்.

(தொடர்ந்து வடியும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

இந்த வாரம் கொலை விழும் கோலம் கொஞ்சம் தணிஞ்சு போன மாதிரி மந்தமாத் தெரிஞ்சாலும், தொடரும் போலதான் தெரியுது. உப்பிடியான கொலைகளைச் செய்யிறதுக்கெண்டே சின்னச் சின்னக் குழுக்கள் அமைக்கப்பட்டிருகிறதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைச்சிருக்கு. மட்டக்களப்பைப் பொறுத்த மட்டில மூன்று வகையான கொலைக் குழு திரியுதாம். ஆக.....அச்சுறுத்தல் இருக்கிறதாக உணர்ந்துகொள்ளுறவை கொஞ்சம் அலேட்டா இருங்கோ.

சின் :- ***ஜனாதிபதி முறையில மாற்றம் செய்யிறதாக இருந்தாலும் சமஷ்டி தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு எண்டாலும் எந்த வகையான தேர்தலையும் சந்திக்கத் தாங்கள் தயாரெண்டு யூ.என்.பி. சொல்லியிருக்குதே.***

**மன்** :- அவையள் இப்ப எதிர்க் கட்சி. அது மட்டுமில்லாம சிலவேளை இந்த அரசு கவுண்டு கொட்டிண்டால் தங்களுக்கு வாய்ப்பு இருக்கும் எண்ட நம்பிக்கை வேற அதிகமாக இருக்கு. அடுத்த சனாதிபதி தேர்தலில விக்கிரமசிங்க முன்னிலை வகிப்பாரெண்டும் ஒரு கணக்கு அவைக்கு இருக்கு. இதுகளைக் கூட்டிக் கழிச்சுப் பாக்க ஒரு சந்தர்ப்பத்தப் பாத்துக் கொண்டிருக்கினமெண்டதாலதான் எந்தவொரு தேர்தலையும் எதிர் கொள்ளத் தயார் எண்டினம்.

சின் :- ***அடடா! இது நாடி பிடிக்கிற விளையாட்டுத்தானோ? நானும் என்னமோ ஏதோவெண்டு யோசிச்சுப் போட்டன்.. அது சரி - அடிக்கடி காலிப் பகுதியில் கடல் மட்டம் உயருவதாகவும் - அதனால் மக்கள் பயந்து போயிருப்பதாயும் செய்திகள் வருகுதே....***

**மன்** :- உண்மைதான். சுனாமி வந்து போனாப் பிறகு சனம் இன்னும் கூட அந்தப் பயத்தில இருக்குது எண்டு சில பேர் சொல்லினம். ஆனால் உண்மையில கடல் மட்டம் உயர்ந்திருக்குது. சாதாரண நாட்களில கடும் மழையில வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது போல் கடல் நீர்மட்டம் உயர்ந்திருக்குது. போன கிழமை ஒன்றரை அடிக்கு கடல் மட்டம் உயர்ந்திருக்கு. அது மட்டுமில்லை, பதின்மூன்றாம் திகதி இந்தியாவின்ர கன்னியாகுமரி மாவட்டத்தில சுமார் நூறு மீற்றருக்கு கடல் அலைகள் நிலத்தை நோக்கி உட்புகுந்ததாகவும் அறியமுடிகிறது. இதையெல்லாம் பாக்கும்போது கடலுக்கடியில பூகம்பம் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்குதோ எண்டு எண்ணத் தோணுது. அதிலையும் அரசின்ர 100 மீற்றர் திட்டத்தை மக்கள் எதிர்க்கிறதாகவும் செய்திகள் வருகின்றன. என்னைப் பொறுத்த அளவில் கடலை நம்பி நெருங்கிறது தொடர்பில் நிறையச் சிந்திக்க வேணும் எண்டுதான் சொல்லுவன்.

சின் :- ***அப்பிடியெண்டால் அவசரப்படாமல் உந்த நூறு மீற்றர் திட்டத்தைப் பற்றி ஆறுதலா யோசிக்கச் சொல்லிறியள்.... கடல் எண்டதும்தான் ஞாபகம் வருகுது. வருண கிரண எண்ட கடற்படையின்ர கண்காணிப்புக் கப்பலில போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தங்கட பிரதிநிதி ஒருவரையும் போட வேணுமெண்டு கேட்க, அதைக் கடற்படை மறுத்துப் போட்டுதாமே.....***

**மன்** :- ஓமோம்...இந்தக் கண்காணிப்புக்காரர் தங்கட ஆள் ஒருவர் இருக்க வேணுமெண்டு கேக்கினம். இதப் போல புலிகளிட்டை எப்பவெண்டாலும் கேட்டிருக்கினமோ? இல்லையே! அதுபோக இவைதான் புலிகளுக்கு கடல் வலையத்தை பிரிச்சுக் கொடுக்க வேணும் எண்டிச்சினம். ஒருக்கால் ஆயுதக் கப்பல் வருகுதெண்டு மெஸேஜ் கடற்படைக்குக் கிடைக்கவும் அதைப் புலிகளுக்குச் சொல்லி திசை மாறிப் போகப் பண்ணினவை எண்டு கடற்படை ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகளை வச்சிருக்கேக்க, இப்ப உதுக்கு எப்பிடி விரும்புவினம். அது போக, ஒரு நாடு தன்ர பாதுகாப்புத் தொடர்பில எடுக்கக் கூடிய நடவடிக்கைகளுக்கு இவை மூக்கை நுழைக்க ஏலாதுதானே. புலிகளின்ர ஒப்பீஸுக்க போனதுக்கே பிடரியைப் பிடிச்சுத் தள்ளி வெளியால விட்டவை. இவையின்ர பொஸிசன் ரொம்ப வீக்கா இருக்கு. அதை முதலில இவை சரிப் பண்ணினா நல்லது.

சின் :- ***இவைக்கும் கடலில சுத்திற ஆசை வந்திருக்கும். கடற்படை சேர்க்காட்டி என்ன புலிகளிட்டைக் கேட்டுப் போவினம். அவைதானே போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கே சேலைன் பாச்சினம். அவையை 'அவாய்ட்' பண்ணக் கூடாது.... இன்னொரு விசயந் தெரியுமோ...? கொழும்பு பல்கலைக் கழகங்கள் இழுத்து மூடப்பட்டுக் கிடக்கு. மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் நடந்த கைகலப்புத்தான் காரணமாமே......***

**மன்** :- தயவு செய்து உதைப் பற்றிக் கதைக்காதேயும். வருஷத்தில படிக்கிறதை விடவும் பூட்டிறதுதான் அதிகமாப் போச்சு. ஒரே ஆர்ப்பாட்டம், கைகலப்பு, காலவரையின்றி கதவடைப்பு. சே....படிக்கிற பிள்ளையள் படிக்க வேணும். பொலிற்றிக்ஸுக்குள்ள தலையைப் போட்டால் உப்பிடித்தான். நாறத்தான் செய்யும். முதலில படிப்பு வேற, பொலிற்றிக்ஸ் வேற எண்டதை எப்ப பிள்ளையள் புரிஞ்சு கொண்டு ஒழுங்காப் படிக்கினமோ அப்பதான் விடிவு பிறக்கும்.

சின் :- ***அப்பிடியெண்டால் பொலிற்றிக்ஸ் எங்கை தலையை நுழைக்குதோ அங்க வில்லங்கம் உருவாகும் எண்டுறீங்கள். ஓ.கே. அடுத்த வாரம் சந்திப்பம்.***

**மன்னவரும் சின்னவரும்**

# அது நிபந்தனைக் காதல்!

ஹைதராபாத்தில் பன்னாட்டு வங்கி ஒன்றில் பெரிய பதவியிலிருக்கும் இளைஞர் ஒருவர் என்னைச் சந்தித்தார்.

"சுவாமி! நான் ஓர் இந்து. வேறு மதத்தைச் சேர்ந்த பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டேன். இப்போது எங்களுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை இருக்கிறது! காதலிலும் சரி, கல்யாண வாழ்க்கையிலும் சரி....மதம் எங்களுக்கு முட்டுக்கட்டையாகக் குறுக்கே வந்தது இல்லை! ஆனால், என் மனைவி நெற்றியில் சிவப்புப் பொட்டு வைத்துக்கொண்டால், பார்ப்பதற்கு லட்சணமாக இருப்பாள் என்று சமீபகாலமாக எனக்குப் படுகிறது! என் மனைவியிடம் இந்த ஆசையைச் சொன்னேன். அவளோ, "உங்களின் மத வழக்கத்தை என் மேல் திணிக்காதீர்கள்!" என்கிறாள். சுவாமி, சத்தியமாகச் சொல்கிறேன். 'பொட்டு' என்பதை நான் மதம் சார்ந்த விஷயமாகவே பார்க்கவில்லை! இந்தப் பொட்டுப் பற்றி எங்களுக்குள் தினம் தினம் நடக்கிற விவாதங்கள், நாளுக்கு நாள் முற்றிக்கொண்டே வருகிறது!

கோபத்தில் நிலையிழந்து நேற்று நான் அவளைப் பார்த்து, 'உன் குடும்பத்தைப் பற்றித் தெரியாதா?' என்று வாய்தவறிச் சொல்லிவிட்டேன். உடனே அவள் ஒரு கத்தியால் விரலைக் கீறி, வழிந்த இரத்தத்தால் நெற்றியில் பொட்டு வைத்துக்கொண்டு....' இப்போது உங்களுக்குத் திருப்திதானே' என்று ஆங்காரமாகக் கேட்டாள். நான் என் மனைவியை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். நீங்கள்தான் அவளுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டும் என்றார்.

நான் அவர்கள் இருவரிடமும் சொன்னேன் நீங்கள் சொல்வதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகப் புரிகிறது. நீங்கள் இருவருமே ஆரம்பத்திலிருந்தே ஒருவரையொருவர் காதலித்ததாகச் சொல்வது பொய்!"


இருவருமே நான் சொன்னதைக் கடுமையாக மறுத்தார்கள்.

கணவனைப் பார்த்து நான் சொன்னேன் - "இந்தப் பெண்ணைக் காதலித்த நாளிலிருந்து நீங்கள் சொன்ன எல்லா விஷயங்களையும் இந்தப் பெண் ஒப்புக்கொண்டாள்! அதனால்தான் இவளை நீங்கள் காதலித்தீர்கள். சொன்னதை ஒப்புக்கொண்டதால் வருகிற பிணைப்புக்குப் பெயர், காதல் இல்லை! அது நிபந்தனைக் காதல். இப்போது பொட்டு விஷயத்தில் நீங்கள் சொல்லும் நிபந்தனையை உங்கள் மனைவி கேட்கவில்லை. அதனால் உங்களுக்குக் காதல் போய்விட்டது.

உங்கள் காதலை வேறு கோணத்திலிருந்தும் பார்க்கலாம்.

"நீங்கள் சொல்லும் விஷயங்களைக் கேள்வியே கேட்காமல் உங்கள் மனைவி ஏற்றுக்கொள்வாள்' என்று அவர் மீது இத்தனை நாளும் நீங்கள் அபிப்பிராயம் வைத்திருந்தீர்கள்! உங்கள் மனைவியும் உங்கள் அபிப்பிராயத்திலிருந்து கொஞ்சமும் விலகாமல் இருந்தார்! ஆக.....நீங்கள் உங்கள் மனைவியைக் காதலித்தீர்கள் என்பதைவிட, உங்கள் மனைவி மீது நீங்கள் வைத்திருந்த அபிப்பிராயத்தைக் காதலித்தீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வாழ்க்கை என்பது ஓர் இசைக் கருவி மாதிரி! சம்பிரதாயம், உறவு..... இந்த இரண்டும் இதிலே இருக்கும் இரண்டு அம்சங்கள்! சம்பிரதாயத்தை அடக்கியும், உறவைத் தூக்கலாகவும் வாசித்துப் பாருங்கள். இசை அற்புதமானதாக இருக்கும்!"



தம்பதி அதன்பின் பொட்டு விஷயத்தில் மோதியிருக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

"சுவாமி! என் காதலி என்னை ஏமாற்றிவிட்டாள்!" என்று சமீபத்தில் இன்னோர் இளைஞர் வந்தார். அவரிடமும், இதே கருத்தைத்தான் சொன்னேன்.

"காதலி உன்னை ஏமாற்றவில்லை! ஓட்டாண்டியானாலும், ஒடிந்து போனாலும் அவள் உன்னைத் தொடர்ந்து காதலிப்பாள் என்று நீ நம்பினாய்! நீ வியாபாரத்தில் நொடித்துப் போனதும், அவள் உன்னை விட்டு விலகிப் போய்விட்டாள். நன்றாகச் சிந்தனை செய்து பார். உன்னை ஏமாற்றியது, உன் காதலி அல்ல - அவள் மீது நீயாக உருவாக்கிக்கொண்ட நம்பிக்கை!"

சரி, கணவன் - மனைவி இருவரும் சண்டை சச்சரவு இல்லாமல் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ என்னதான் வழி?

இதற்கு முதல் தேவை..... Unconditional Love. பொட்டு வைத்தாலும் சரி, வைக்காவிட்டாலும் சரி....வேலைக்குப் போனாலும் சரி...போகாவிட்டாலும் சரி.... சுவையாகச் சமைத்தாலும் சரி.... சமைக்கவே இல்லை என்றாலும் சரி....கணவன் தன் மனைவியைக் காதலிக்க வேண்டும். இதே நிபந்தனையற்ற காதலை மனைவியும் தன் கணவனிடம் செலுத்த வேண்டும்.

இரண்டாவது உங்கள் கணவனிடம் (அல்லது மனைவியிடம்) என்ன இல்லை என்று பார்க்காதீர்கள். பணம் இல்லாமல் இருக்கலாம்...பரிவு இருக்கிறதா? ஓகே! அதைப் பார்த்துச் சந்தோஷப்படுங்கள்.

குடும்பம் என்னும் மலரிலிருந்து தேன் என்னும் இனிமையை அப்போதுதான் பெற முடியும்!

மிக முக்கியமான இன்னொரு விஷயத்தைச் சொல்கிறேன். கோபம், கழிவிரக்கம், குற்ற உணர்வு போன்ற பல உணர்ச்சிகள் நமது நரம்புகளில் ஆங்காங்கே அடைபட்டு, சந்தர்ப்பம் கிடைக்கும்போது வெளியே வரத் திணறிக்கொண்டிருக்கின்றன. இதற்கு 'Energy Clots' என்று பெயர். வெடிகுண்டுத் திரியில் நெருப்புப் பட்டால், அது எப்படி உடனே வெடிக்குமோ அதே போலத்தான் சில வார்த்தைகள் பட்டால் இந்த 'Energy Clots' பூகம்பம் மாதிரி வெடித்து, ஐஸ் மாதிரி குளிர்ந்திருக்கும் இனிய உறவைக்கூடத் தீயாகப் பற்றி எரிக்கும்! உங்களின் கணவனை (அல்லது மனைவியை) எந்த வார்த்தை வெடிக்கச் செய்யுமோ அதைத் தயவுசெய்து பயன்படுத்தாதீர்கள்.

தத்தக்கா பித்தக்கா என்று நடக்கும் சின்னக் குழந்தை தடுக்கி விழுந்தால் - அப்பா, அம்மா யாருமே அருகில் இல்லையென்றால் தன்பாட்டுக்கு எழுந்து போய்விடும். அதுவே, அப்பா, அம்மா எதிரில் தடுக்கி விழுந்துவிட்டால், 'ஓ' வென்று அழுது குழந்தை ஊரையே கூட்டிவிடும். வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டவர்களுக்கு குழந்தையின் இந்தக் குணநலன் உண்டு!

'என்னைக் கவனி, என்னைக் கவனி' என்றுதான் ஒவ்வொரு மனைவியும் தன் கணவனைப் பார்த்து மௌனமாகக் கத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவை, கவனிப்பு....Attention.

கணவன்மார்களே, இதைப் புரிந்துகொண்டு 'கவனிப்பு' என்னும் ஜன்னலை தாராளமாக உங்களின் மனைவிக்காகத் திறந்து வைத்திருங்கள்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 111க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

செல்வி. ரவி அனஸ்ரினா, 65/3, நீதிமன்ற வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எஸ். ஜே. ஏ. நிம்றோ, 33/1, வண்டவேர்ட் பிளேஸ், தெகிவளை.
2. ஆர். மோதிகா, 89/53 C லேடி கோர்டன் டிரைவ், கண்டி.
3. ஆர். எம். பாயிஸ், பனுஸா ஸ்டோர்ஸ், பிரதான வீதி, மூதூர் -01.
4. க. ஜெயப்பிரியா, விநாயகர்புரம், மயிலம்பாவெளி, தன்னாமுனை, மட்டக்களப்பு.
5. ஆயிஷா, 215, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு 15.
6. செல்வி, ஏ.ஜே.எப். பஸ்னா, 173/5B, கந்தவத்த, மல்வானை
7. கு. சாண்டில்யன், கில்னர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
8. த. நிதர்ஷன், லோட்டஸ் பெஸ்ட்வே, வெள்ளவத்தை.
9. மு. றசீதியா, மக்காமடி வீதி, ஏறாவூர் -03.
10. எம். நிஸார்தீன், இல. 11, வீட்டுத் திட்டம், கல்பிட்டி.

## குறுக்கெழுத்துப் போட்டி 113

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | | 7 | |
| 8 | 9 | 10 | | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | |

**இடமிருந்து வலம்**

1. சிரிக்க வைக்கும் வகையில் வேடிக்கையாக பேசுபவர்.
8. நீர் (குழம்பியுள்ளது)
12. அழிப்பு (குழம்பியுள்ளது)
17. வேகம் / அடைக்கலம்.
19. பூமி என்றும் பொருள் படும்.
21. சந்ததி (குழம்பியுள்ளது).

**மேலிருந்து கீழ்**

1. துன்பம்.
4. நனவு - எதிர்ப்பதம்
9. சிரார்த்தம் / நாள் (குழம்பியுள்ளது)
10. தோழன்
11. இந்திய எழுத்தாளர் ராஜேஸ்குமார் 'இந்தக்' கதை புனைவதில் வல்லவர் (குழம்பியுள்ளது).
15. தேர் என்றும் சொல்லலாம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 111 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கு | 2 தி | 3 ஞ் | 4 சி | |
| 5 க் | 6 அ | | 7 றை | 8 க |
| 9 ண | 10 கு | 11 ஙி | | 12 ஞ் |
| 13 வி | 14 தி | 15 சி | | 16 சி |
| 17 ணி | | 18 ஜு | | 19 றா |
| 20 ஓ | 21 லி | | 22 த் | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 22.03.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-113
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளைய மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

87

பெயர்:........................

முகவரி:........................

........................

தொழில்: ........................

கையொப்பம்: ..............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-03-2005

அனுப்ப வேண்டிய முகவரி-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**கண்டி வாசகிக்கு அதிர்ஷ்டம்!**

85

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**ஆர். மோதிகா**
89/53 C, லேடி கோர்டன் டிரைவ், கண்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# மனைவியின் காதலன்!



**சில** நாட்களாகவே பிரதீபின் நடைமுறைகள் வழமைக்கு மாறாக இருப்பதை அவதானித்து வந்த அவனது அலுவலக நண்பனான சங்கர், ஒருநாள் பிரதீபிடம் "ஏய் மச்சான்! உனக்கு என்னடா நடந்தது? ஏன் டல்லாக இருக்கிறாய்? எனி பிராப்ளம்? எதுவாக இருந்தாலும் என்னிடம் மனம் திறந்து சொல்! ஐ வில் ஹெல்ப்யூ!" என்று கேட்டான்.

பிரதீப் ஒரு செயற்கையான புன்னகையை வரவழைத்துக்கொண்டு,

"சே!.....சே...அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது மச்சான்! லேசாய் தலைவலி, அவ்வளவுதான்" என்று கூறிச் சமாளித்தான்.

"என்னது தலைவலியோ? யாரிடம் மச்சான் நீ கதை விடுகிற? உன்னோடு நான் எத்தனை வருஷமாப் பழகுறன். உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதோ என்ன? நானும் பார்த்துக் கொண்டு தானிருக்கிறன்; வர வர உன்னுடைய போக்கே சரியில்ல! முன்னல்லாம் ஒபீஸுக்கு வந்தால் நீ எவ்வளவு சுறு சுறுப்பாய், ஜாலியாய் இருப்பாய் என்பது எனக்கல்லோ தெரியும். கல்யாணம் கட்டி ரெண்டு மாதம் கூட ஆகல்லே.....அதற்குள் உனக்கு அப்படி என்னடா பொல்லாத பிரச்சினை?" சங்கர் உரிமையோடு கேட்டான்.

"அதுதான் தலை வலி என்று சொன்னனானெல்லோ!" பிரதீப் கூறியதில் சங்கருக்கு உடன்பாடில்லை!

"திரும்பத் திரும்ப ஒரு பொய்யைக் கூறுவதாலே பொய் என்றும் உண்மையாகிவிடாது கண்டியோ? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பினம்...அதுதான் தெரிகிறதே!" என்று அழுத்தமாகச் சங்கர் கூறியது கேட்டு பிரதீப் கோபமானான்.

"உனக்கென்ன விசரோ? போடா.... போய் உன்னுடைய வேலையைப் பாரன்!" என்று அவன் மீது கடிந்துகொண்டான்.

"அது சரி....ஏன் சொல்லமாட்டாய்? ம்...என் புத்திக்குச் செருப்பால அடிக்கணும்! பாவம் என்று உதவி செய்ய முன்வந்தால், நீ என்னை ஏண்டா பேசுகிறாய்?"

"ஐயோ கடவுளே! இதோ பார் ராசா...உன்னுடைய உதவியும் வேண்டாம், உபத்திரமும் வேண்டாம்! ஆளை விடுடா சாமி....!" என்றான் பிரதீப். பிறகு சங்கரும் போய்விட்டான். மேசை மீதிருந்த கோவைகளைப் புரட்டிப் பார்த்தான் பிரதீப். அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை! வேலை செய்யவே மனம் இல்லை. அவனுள்ளத்தை ஏதோவொன்று உறுத்திக்கொண்டிருந்தது. மன நிம்மதியற்றுத் தவித்தான். 'சே! இந்தப் பெண்களை நம்பவே கூடாது! கூட இருந்தே குழி பறிப்பினம். கணவனுக்குத் துரோகம் செய்திட இவள்களுக்கு எப்படித்தான் மனம் வருகிறதோ?' அவன் புலம்பல் ஆரம்பமானது.

'இவள்களை எப்படி நம்பி வீட்டில் விட்டுட்டு வாறது? நம்மைப் போக விட்டுட்டு அடுத்தவனோடு அடிக்கிற கும்மாளமிருக்கே...சே! நினைக்கவே அருவருப்பாயுள்ளது. என்ன பிறவிகளோ?' அவன் தன் ஆதங்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தினான்.

பிரதீப்பிற்கு அண்மையில்தான் திருமணம் நடந்தது. மனைவி அழகானவள்! படித்தவள்! நாகரீகமானவளும் கூட. கொழும்பிலுள்ள தனியார் சர்வதேச பாடசாலையொன்றிலே அவள் கல்வி கற்றாள். அவளுடைய தந்தை ஓய்வுபெற்ற கணக்காளர்; பூர்வீகம் யாழ்ப் பாணம்; அவரது தூரத்து உறவினனான பிரதீபின் நல்ல குண இயல்புகளைக் கண்டு தன் ஒரே மகளான லதாவை அவனுக்கு மணம் முடித்து வைத்தார்.

ஒருநாள்....பிரதீப் அலுவலகம் விட்டு வீடு திரும்பியபோது அவனது படுக்கை அறையினிலே எதேச்சையாக அவன் அதைக் கண்ணுற்றதும் ஒரு கணம் அதிர்ந்து போனான். அவனால் நம்பவே முடியவில்லை. இருப்பினும் அவன் அங்கு கண்டதைக் காணாதவன் போல் இருந்துவிட்டான். ஆனாலும் அவன் மனமோ உள்ளே குமுறிக்கொண்டிருந்தது. தன் மனைவியிடம் எதையும் அவன் விசாரிக்க விரும்பவுமில்லை. 'சரி மன்னித்து விடுவோம்' என்ற போக்கில் விட்டுவிட்டான். ஆனால் அடுத்தடுத்து மூன்று முறைகள் இது தொடரவே அவனால் பொறுத்திருக்க முடியவில்லை. அவளை எப்படியும் கையும் களவுமாகப் பிடித்துவிட வேண்டுமென்ற வெறியோடு காத்திருந்தான். அவன் எதிர்பார்த்தது போலவே நடந்தது.

அன்று அலுவலகத்திலிருந்து வேளைக்கே வீடு திரும்பியவன் வாசல் கதவு பூட்டியிருப்பதைக் கண்டு ஆத்திரப்பட்டான். உடனே பூனை போல் பதுங்கிப் பதுங்கி கோடிப்புறமாக சென்றான். படுக்கையறை ஜன்னல்கள் அடைக்கப்பட்டிருந்தன.

உள்ளேயிருந்து சிகரட் வாசனை வெளியாவதை நுகர்ந்தான். அவனது கண்கள் அத்திப்பழம் போல் சிவந்தன. நாடி நரம்புகள் புடைத்துப் போயின. ஆத்திரம் மேலோங்க, 'இன்றைக்கு நீ வசமாய் மாட்டிக்கொண்டாய்! உன்னை விட மாட்டேன்....'என்று முணுமுணுத்தபடியே கையில் கிடைத்த இரும்புக் கம்பி ஒன்றினை எடுத்துக்கொண்டு சடாரென பின்பக்க கதவை நோக்கி விட்டான் ஓர் உதை. கதவு திறந்துகொண்டது. உள்ளே விறுவிறுவெனச் சென்றான். படுக்கையறைக்குள் நுழைந்தவனைக் கண்டதும் அவன் மனைவி லதா அவன் நின்றிருந்தக் கோலத்தைப் பார்த்துப் பயத்தினால் உறைந்து போய் நின்றாள்.

அவன் பரபரப்போடு "எங்கடி அவன்....? அவனை இன்று நான் சும்மா விடப் போவதில்லை!" என்று கர்ச்சித்துக்கொண்டே கட்டிலுக்கு அடியில் குனிந்து பார்த்தான். அலுமாரிக்குப் பின்னால் பார்த்தான். பிறகு குளியலறையிலும், சமையலறையிலும் போய்ப் பார்த்தான். யாரையும் காணோம்! ஒரு வேளை தப்பி ஓடியிருப்பானோ, என்ற சந்தேகத்தில் வாசல் கதவைப் பார்த்தான். அது மூடித்தானிருந்தது. அவன் தன்னைச் சுதாகரித்துக்கொள்வதற்குள் லதா அவனைப் பார்த்து, "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டாள். "ஆ.....வேறு யாரைத் தேடுவேன்? எல்லாம் உன் கள்ளக் காதலனைத்தான்! எங்கே அவன்?" என்று பிரதீப் கேட்க, அவள் ஓவென்று ஒப்பாரி வைக்கத்தொடங்கி விட்டாள். சிறு பிள்ளை போல் ஏங்கி ஏங்கி அழுதாள். பிறகு படுக்கையறைக்குள் சென்றவள் திரும்பி வரும்போது கையில் ஒரு பக்கற் சிகரட்டோடு வந்தாள். அதை அவனிடம் காட்டி "இவன்தான் நீங்கள் குறிப்பிட்ட என் கள்ளக் காதலன்!" என்று கூறிவிட்டு அவனைப் பார்த்து முறைத்தாள். அவனோ மௌனமாக நின்றிருந்தான்.

"என்ன நம்ப ஏலாமல் இருக்கோ?" என்றவள் அவனருகே வந்து தன் வாயைத் திறந்து குப்பென்று ஊதினாள். சிகரட் வாடை வீசியது. பிரதீப்பின் கையிலிருந்து இரும்புக் கம்பி தானே நழுவிக் கீழே விழுந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை; சோபாவில் போய் அமர்ந்து கொஞ்சம் களைப்பாறினான்.

அவனருகில் போய் அமர்ந்துகொண்ட லதா, அவன் முகத்தில் அசடு வழிவது கண்டு கலகலவெனச் சிரித்தாள். "ஐ யேம் வெரி சொரி டியர்! நான் உங்களை டென்ஷனாக்கிட்டேன் இல்லே...? ப்ளீஸ் என்னை மன்னித்துவிடுங்கள் டார்லிங்! எனக்கு தம் அடிக்கும் பழக்கமுண்டு. யாராவது காணாமலிருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்படிக் கதவுகளைப் பூட்டிவிட்டுத் திருட்டுத் தம் அடிச்சனான்!" அவள் கெஞ்சலாகக் கேட்டபடியே அவன் தலை முடியை மெல்லக் கோதிவிட்டாள். நெற்றியில் முத்தமிட்டு, வேர்த்துக்கொண்டிருந்த அவன் முகத்தைத் துடைத்தும் விட்டாள்.

"கோபமா டியர்?" என்றவாறு அவன் தோளில் சாய்ந்தாள். அவன் 'இல்லை' என்பது போல் தலையாட்டினான்.

"அது சரி....எத்தனை நாளாய் இந்தப் பழக்கம்?"

"படிக்கும் போதிருந்தே...." என்று கூறிக் குழைந்தாள் அவள்.

"கிழிஞ்சுது போ...நல்ல பழக்கமடி அம்மா! களவெடுத்தாலும் பிடி கொடுக்காமல் எடுக்கத் தெரியணும்! நீ இப்படி புகை பிடித்துவிட்டு பில்டரை இந்த மாதிரிப் படுக்கை அறையில் போட்டு விட்டால் யாருக்குத்தான் சந்தேகம் வராது?" என்று பிரதீப் கூறவும்,

"ஓம்! ஓம்! அது உண்மைதான். நான் தம்மடிக்கைக்கே எவராவது திடீரென்று உள்ளே வந்துவிட்டால், நான் பயத்தினால் அப்படியே போட்டுவிட்டுப் பிறகு கிளீன் பண்ண மறந்து போய்விடுவேன் டார்லிங்! நீங்களும் அதைப் பார்த்ததனால் தானே இப்படிக் குழம்பிப் போய்விட்டீர்கள். பாவம்! ஓகே....இனி நான் சிகரட்டை தொட்டுக் கூடப் பார்க்கமாட்டேன்! இட்ஸ் ஏ புரமிஸ்!" என்று கூறியவளை அன்பொழுகப் பார்த்தான் பிரதீப். தனது அவசர முடிவினால் ஏற்பட்ட சந்தேகம். இனிமேல் தனது வாழ்விலே என்றுமே ஏற்படக் கூடாதென உறுதி செய்தும் கொண்டான்.

**-யாழமீர் மர்சூன்**

(யாவும் கற்பனை)

# காதல் கிறுக்கன்

"**டே**ய் முரளி....நீ செய்யிறது உனக்கே நல்லதாப்படுதா. ஆயிரம்தானிருந்தாலும் அவள் ரெண்டு நாள்ல இன்னொருத்தனுக்கு மனைவியாகப் போகிறவள். இந்த நேரத்துல அவள் வாழ்க்கையையே நாசமாக்கப் போறேன்னு சொல்லுறியே. நாகரீகமானவன் செய்யிற வேலையா இது.....?"

"மணி நீ புரியாமப் பேசாதே. நான் அவளை உயிருக்குயிரா நேசிச்சேன். அவ என் மாமா மகள். எனக்குன்னு பிறந்தவ.....எனக்கு உரிமையான பொருளை வேற எவனுக்கும் குடுக்க அனுமதிக்க மாட்டேன். கல்யாணம்னா அது என்னோடத்தான். இல்லன்னா அவ மண்ணோட போனாலும் பரவாயில்ல...."

"நீ பைத்தியக்காரன்டா...வேலை வெட்டியில்லாம ஊரைச் சுத்திக்கிட்டிருந்த உனக்கு எப்படிடா துணிஞ்சி அவங்க பொண்ணை குடுப்பாங்க...."

"அன்னைக்கு வெட்டியாத்தான் சுத்தினேன். ஆனா இப்போதான் வேலை செய்யிறனே...."

"கண் கெட்டப்புறம் சூரிய நமஸ்காரம் செய்யிறே...சரி அது போகட்டும் நீ அவளை உயிருக்குயிரா காதலிச்ச மாதிரி அவ உன்னை நேசிச்சாளா?"

"அதைப் பத்தி தெரியாது....ஆனா...நான்...."

"இந்த ஆனா ஆவன்னாவெல்லாம் சரி வராது. உறுதியா சொல்; அவள் உன்னை நேசிச்சாளா...."

"பல விஷயங்களைப் பேசுவா....ஆனா என்னை விரும்பினாளான்னு தெரியாது. என்னோட முறைப்பெண்ணா இருக்கிறதால எப்படியும் எனக்குத்தானே சொந்தமாவாள்னுற நம்பிக்கையில நான் பேசாம இருந்துட்டேன்....."

"உன்னைக் கட்டிக்கிற முறைன்னுறதுக்காக அவ உன்னை நேசிக்கணும் என்றது எந்த விதத்துல நியாயம்? அதோட அவளுக்குன்னு சில கனவுகள் இருக்குமில்லையா. தன்னைக் கட்டிக்கப் போறவன் எப்படியெல்லாம் இருக்கணும்னு...

"டேய்...டேய்....நி கண்டதெல்லாம் பேசி என்னைச் சமாதானப்படுத்தப் பாக்காதே. அவ க்ழுத்துல என்னைத் தவிர வேற எவன் தாலி கட்டினாலும் தாலி தொங்க அவ கழுத்து இருக்காது...."

"என்னடா நீ வெறி பிடிச்சவன் மாதிரிப் பேசுறே....?"

"ஆமா வெறிதான்.....காதல் வெறி...வெறி அதிகரிச்சிடுச்சின்னா எதுவும் செய்வேன்....."

"சரி.....சரி.....இவ்வளவு பேசுறியே, உன்னோட அருமைத் தங்கச்சி அவ மாமா மகனை விரும்பினா.



ஆனா நீ என்ன செஞ்சே. நல்ல உத்தியோகத்தில கை நிறையச் சம்பளம் வாங்கிக்கிட்டிருந்த அவனை உனக்குப் பிடிக்கலையன்னுற காரணத்துக்காக பலவந்தமாக வேற ஒருத்தனுக்குக் கட்டி வச்சியே. அப்போ உன் தங்கை மனசு என்ன பாடு பட்டிருக்கும்? இருந்தாலும் அண்ணன் நீ சொன்னதால எதுவும் பேசாமத் தலையை நீட்டினாதானே. அவ காதலிச்சவன் உன் மாதிரியே கோபக்காரனா இருந்தா உன் தங்கையோட நிலையென்ன.....?"

"அது வந்து....."

"என்ன தடுமாறுறே....."உனக்கொரு நியாயம் ஊருக்கொரு நியாயமா...?உன்னோட ஒரு பக்கத்தை மட்டும் பார்க்காம அந்தப் பெண்ணோட பக்கமும் பாரு...நீ காதலிச்சவ உன்னை விரும்பலை. ஆனா மாப்பிள்ளையா வந்தவனை மனசாரப் பிடிச்சதால தான் மாலையிடச் சம்மதிச்சிருக்கா. இல்லன்னா அழுது அடம் பிடிச்சிருப்பா. உன்னைக் கட்டிக்கிறதா ஒத்தக் கால்ல நின்னுருப்பா....அதுனால ஆத்திரத்தை அடக்கு. உனக்கேத்தவள் உனக்கு நிச்சயமா கிடைப்பா. கிடைக்காததை நினைச்சுக் கோபப்படாம அடுத்துக் கிடைக்கப் போறதை நினைச்சுச் சந்தோஷப்படு....உன் நண்பன்னுற முறையில என்னால இவ்வளவு தான் சொல்ல முடியும்...அதுக்கப்புறம் உன் இஷ்டம்....."

மணி - கடகடவெனப் பேசிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக நடக்க, முரளி தீவிரமாக யோசிக்கத் தொடங்கினான். நிச்சயமாக அவன் மனம் மாறிவிடும் என்ற நம்பிக்கை மணிக்கு இருந்தது. அந்தச் சந்தோஷத்துடன் தன் அண்ணன் வசந்துக்கும் முரளியின் மாமன் மகள் கவிதாவுக்கும் நடக்கப் போகும் திருமணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடந்தான்.

**-பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்.**

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# மனமகிழ்ச்சி

உண்மையான சந்தோசமும், மகிழ்ச்சியும் விலை மதிப்புடையவை. ஒரு மனிதன் வாழ முடியாத தருணத்தில் சந்தோசத்தையும், மகிழ்ச்சியையும் அடைய முடியாது.

குழப்பங்கள், நேர்மையற்ற நிலை மற்றும் பொதுவாக நீதிநெறிகள் தவறிய ஒரு சமுதாயத்தில் வாழ முயற்சிப்பது ஒரு கடினமான செயலாகும்.

எந்த ஒரு மனிதனும் அல்லது ஒரு சிறு குழுவாக இருப்பவர்களும் வாழ்க்கையின் துயரங்களில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியினையும் சுதந்திரத்தன்மையினையும் தங்களால் அடைய முடியும் என்று எண்ணுகையில், அவற்றை அடைய முற்படுகிறார்கள்.

உங்களைச் சுற்றியுள்ளவர்கள் செய்யும் தீய நடவடிக்கைகளினால், உங்களின் சொந்த வாழ்க்கையே மிரட்டலுக்கு இலக்காகிறது. மற்றவர்களின் நேர்மையற்ற, தீய நடவடிக்கைகளினால் உங்களின் மகிழ்ச்சி, துன்பத்திற்கும், கவலைகளுக்கும் ஆட்பட்டு விடுகிறது.

"ஓஷோவின் பொன் மொழிகள்" என்ற நூலிலிருந்து....

# நீதியும் நேர்மையும் நிலைபெறட்டும்! நிம்மதி வாழ்வு சீர்பெறட்டும்

**வெ**ளிநாட்டிலிருந்து வந்திருந்த நண்பரை வழியனுப்புவதற்காக விமான நிலையம் நோக்கி வானொன்றில் சென்றுகொண்டிருந்தனர்.

வாகனத்துக்குள் நிலவிய கனத்த மௌனம் கிருபனைத் தொந்தரவு செய்தது. "இனி எப்போ...?" கேள்வியை முடிக்காதது மட்டுமன்றி, குரலும் அதுவரையான மௌன அழுத்தலில் நசிந்திருந்தது.

நண்பர் திரும்பி, "இப்போதைக்கு இல்லை" என்று சிரித்தார். "நாட்டு நடப்புகள் உங்களை நிறையக் கலவரப்படுத்திவிட்டதா?" ஆதங்கத்தோடு கிருபன் கேட்டான்.



பதில் சொல்லாமல் தெருவைப் பார்த்தபடி இருந்தார் நண்பர்.

"பழையபடி கொலைகள் ஆரம்பிச்சிட்டுது. பயந்து போனீங்களா?"

சற்று நேரத்திற்குப் பின் நண்பர் யோசனையோடு பதில் சொன்னார். "பயப்படுத்துவது கொலைகள் மட்டுமில்லை, கொலைகளை இயல்பான ஒன்றாய் ஏற்றுக்கொண்டு வாளாவிருக்கும் சமூகம்தான் அதிகமாய்ப் பயப்படுத்தியது."

## தருவது முழடில்யன்

"கொலைகளைக் கண்டித்து மக்கள் கடையடைப்புகள், ஹர்த்தால்கள் நடத்துகிறார்கள்....பேரணிகள் நடத்துகிறார்கள்...கட்சி அலுவலகங்களைக் கூடத் தீவைத்துக் கொளுத்துகிறார்கள்....இதெல்லாம் எதிர்ப்பில்லாமல் வேறென்ன?"

கிருபனைத் திரும்பிப் பார்த்துவிட்டு, வாகனத்திற்கு வெளியே பார்வையைச் செலுத்தினார் நண்பர். பிறகு, கிருபனைப் பார்க்காமலேயே பேசினார். "சில கொலைகளுக்குக் காட்டப்படும் அதீத எதிர்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் ஏனைய கொலைகளை அலட்சியப்படுத்துவதாகவும், மனித உயிர்களை இழிவுபடுத்துவதாகவும் உங்களுக்குத் தெரியவில்லையா? சில கொலைகளை மனதுக்குள் வரவேற்று இரகசிய ஆதரவைக் காட்டியும், சில கொலைகளுக்கு எதிர்ப்பின் பிரமாண்டத்தைக் காட்டும் முனைப்பும், வன்முறையை ஒரு திருவிழாக் கொண்டாட்டமாக மாற்றிவிடுவது உங்களுக்குப் புரியவில்லையா? இத்தகைய எழுச்சி ஆவேசமும், கமுக்கமான களிப்பும் இந்நாட்டில் கொலைகளை ஒருபோதும் நிறுத்த உதவாது என்பதை நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லையா?"

கிருபனும் சீரியஸாகவே பேச ஆரம்பித்தான். "இங்கே தொடர்ந்தும் இருக்கிறவர்களுக்கு உந்த மாதிரி எல்லாம் சிந்திப்பதிலுள்ள ஆபத்து விளங்கித்தான் மௌனமாகிவிட்டார்கள். ஹிட்லர் காலத்து, ஸ்டாலின் காலத்து அரசியல் சாணக்கியர்கள்தான் இப்போது இங்கேயும் வாய் திறந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். சனங்களை வெறுமனே ஆவேசப்படுத்தி வைத்துக்கொண்டிருப்பதால், பாதுகாப்பான பெரிய மனிதர்களாக வலம் வர முடிகிறது. தங்கள் தங்கள் அறிவுக்குச் சரி, பிழை என்று தெரிவதைப் பற்றி உள்ளபடி பேசினால் கூட மாமனிதர்களாயோ, தேசப்பற்றாளர்களாயோ சாகும் வாய்ப்புப் பறிபோய்விடும் என்ற யதார்த்தம் இவர்களையெல்லாம் இயக்குகிறது. இல்லாவிட்டால், 'வன்னியில் நம் வீரர்கள் பலமுடன் இருப்பதால்தான், கொழும்பிலும் நாங்கள் கௌரவத்துடனிருக்க முடிகிறது' என்ற அடிமுட்டாள்தனமான பொய்யை நசுக்கிடாமல் பரவ விட்டுக்கொண்டிருப்பனவெல்லாம் அறிஞனென்றும் பேராசிரியனென்றும் ஒரு சமூகத்தைப் பேய்க்காட்டிக்கொண்டிருக்க முடியுமா?"

கிருபனின் கோபம் வெளிநாட்டு நண்பரை ஆச்சரியப்படுத்தியது. மேலும் சிறிது நேரம் மௌனத்தை ஓட அனுமதித்து விட்டுச் சொன்னார் :"அற்பமான சில ஆதாயங்களுக்காகவோ, பாதுகாக்கத் தகுதியே இல்லாத ஒரு வாழ்நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவோ ஒருவர் காட்டக்கூடிய மௌனம், அவரது மனசாட்சியில் கடுமையான இழப்புகளை ஏற்படுத்தும்... புரிந்துகொள்கிறேன்."

கிருபன் எதுவும் பேசவில்லை. வாகனம் அதிவேகத்தில் விரைந்தது. விமான நிலையம் சமீபித்திருந்தது.

"ஒரு முடியாட்சிக் காலத்துக்குரிய, கேள்வி கேட்க முடியாத, தெய்வ நீதி போன்ற ஒரு பய வழிபாட்டை, இன்பப் பெருமிதத்தைப் பாது காத்துக்கொள்வதன் பேரால் சகித்துக்கொள்ள வேண்டுமென ஒரு ஜனநாயகச் சமூகத்திடம் கேட்கும் படித்தவர்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்கள் எல்லோருமே போலிகள்தான்! இவர்கள் அந்தச் சமூகத்தின் ஆன்மாவைக் கொன்றுகொண்டிருக்கிறார்கள். உண்மையில் இவர்கள்தான் கொலைகாரர்கள்!" என்றார் நண்பர்.

வாகனத்தை விட்டு எல்லோரும் இறங்கினார்கள். பயணப் பொதிகளை இறக்கித் தள்ளுவண்டியில் ஏற்றினார்கள்.

கிருபன் நண்பரின் கையைப் பற்றிக் கொண்டே கேட்டான் :

"உங்களுக்கு இப்போ என்ன வயதாகிறது?"

"நண்பர் ஆச்சரியத்துடன் சிரித்தார். எதற்கு திடீரென்று?"

"சும்மாதான் கேட்கிறேன் சொல்லுங்களேன்!"

"அடுத்த மாதம் 70ஐக் கடக்கப் போகிறேன்" என்று சிரித்தார் நண்பர்.

"இத்தனை வயதாகியும் தலையில் ஒரு முடி கூட நரைக்கவில்லையே....அதுதான் ஆச்சரியத்தில் கேட்டேன்."

நண்பர் பலமாகச் சிரித்தார்.

"அன்பான மனைவி, என் மீது பாசத்தைக் கொட்டும் குழந்தைகள், என்னைப் போலவே எண்ணங்களுடனும் சிந்தனைகளுடனுமிருக்கும் என்னை விட வயதில் இளைய வாலிபர்களைக் கொண்ட என் நாடு, மக்களைக் காப்பாற்றுவதும் வசதிகள் செய்து கொடுப்பதுமே தன் கடமையாக நினைக்கும் அரசாங்கம்....எல்லாவற்றுக்கும் மேலாக என் தேசத்தில் உண்மையான அறிவுள்ளவர்களும், மானுடத்தின் நலன், வளர்ச்சி கருதி நிதானமாகச் சிந்திக்கக் கூடியவர்களுமான பலர் வாழ்கிறார்கள். அதுதான் காரணம்" என்று சொல்லி மேலும் பலமாகச் சிரித்தபடியே கிருபனைக் கட்டியணைத்து விடைபெற்றார்.

விமான நிலைய வாசல் தாண்டி அவர் உள்ளே செல்வதைக் கண்கலங்கப் பார்த்தவாறு நின்றிருந்தான் கிருபன்.

யாண்டு பல ஆக நரை இல
ஆகுதல் யாங்கு ஆகியர்?
என வினவுதிர் ஆயின்,
மாண்ட என் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்; யான்
கண்டனையர் என் இளையரும்
வேந்தனும் அல்லவை செய்யான்
காக்கும் அதன் தலை, ஆன்றவிந்து
அடங்கிய கொள்கைச் சான்றோர்
பலர், யான் வாழும் ஊரே.
(புறம் : 191)

## இலக்க நயம்

✍✉ **நல்லவர்களுக்குத்தான் வாழ்க்கையில் சோதனைகள் வருமா?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

இல்லையே....எனக்கெல்லாம்கூட வந்திருக்கிறதே!

✍✉ **கிழக்கில் படுகொலைகள் திடீரென உக்கிரத்தையடைந்திருப்பதற்கு என்ன காரணம்?**

-சுலைகா பீவி, மல்வானை.

வன்னிப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கு மிடையில் மோதலை உருவாக்கி விடுவது, கருணா அணியினரின் நோக்கமாக இருக்கக் கூடும்.

✍✉ **ராஜராஜேஸ்வரி?**

-நா.பிரியா, மொறகொல்ல.

கத்துக்குட்டித்தனத்தில் காவ்யாஞ்சலியுடன் போட்டியிடுகிறது.

✍✉ **உன் ஒரு பார்வையும் பாதிப் புன்னகையும் போதும்; ஆயுள் முழுவதும் பட்டினியாகவே வாழ்ந்திடுவேன் என்று தோன்றுகிறதே....இது எதனால்?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.

இன்னும் கல்யாணமாகாததால்!

✍✉ **பண்பாடு, கலாசாரம், தனிக் கொடுந்தமிழ் என்றெல்லாம் மற்றவர்களை வறுத்தெடுக்கும் உங்கள் மாமிசத் தலைவர், தான் மட்டும் எப்போதும் மேற்கத்தையவர் உடையில் தோன்றுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-ச.சுவர்ணா, கொடிகாமம்.

நாடிருக்கும் நிலையில், உங்கள் பெயரும் முகவரியும் நிச்சயமா உண்மையானதாக இருக்க முடியாது என்று நினைக்கிறேன்!



சூர்யா - ஜோதிகா
மாயாவி

✍✉ **மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுனாமி நிவாரணப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது பற்றி.....?**

-ஆர்.குமரேசன், கினலன் எல்ல.

அரக்கியே, கொடியவளே, உயிரெள்ளிப் போன ராட்சசியே... என்றெல்லாம் கவிதைகள் எழுதிக் கடலைத் தூற்றிய பகுத்தறிவு மனிதர்களே, மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள்!

✍✉ **என்னுடைய நூறாவது கேள்விக்கேனும் பதில் தருவேன் என்ற சிறு வாக்குறுதியையாவது இப்போது தருவீர்களா?**

-ம.ருத்ரா, சின்ன செல்வகந்த.

மிகவும் வறுமையில் உழன்று, தன் முயற்சியால் படிப்படியாக முன்னேறிப் பெரிய தொழிலதிபரான ஒருவர் மரணப் படுக்கையில் கிடந்தார்.

கடைசியில் சில அறிவுரைகள் சொல்லிவிட்டுப் போகலாம் என்று, தன் மகனை அருகில் அழைத்தார்.

"நான் சொல்வதைக் கேள் மகனே! என் வெற்றிக்குக் காரணம் இரண்டு அடிப்படைகள்: நேர்மையும் ஞானமும் தான் அவை. நேர்மையென்றால் என்ன தெரியுமா? நம் வியாபாரச் சரக்குகளை இன்ன தேதியில் தருவதாக வாக்களித்திருந்தால், என்ன கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவற்றைக் கொடுத்தே தீர வேண்டும் - அதுதான் நேர்மை!" என்றார்.

"நான் நினைவில் வைத்துக் கொள்ள முயல்கிறேன், அப்பா. சரி, ஞானம் என்பது என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டான் மகன்.

"அது மிகவும் சாதாரணமானது, மகனே.... அப்படியான எந்த வாக்குறுதியையும் யாருக்கும் கொடுத்துவிடாதே!" என்றார் தந்தை!

✍✉ **மாட்டிக்கொள்ளாமல் பொய்கள் சொல்லும் வல்லமை உள்ளவரா நீங்கள்?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

மறுக்க முடியாமல் மாட்டிக்கொண்டவற்றை மட்டும்தான் நான் பொய்யென்று ஒப்புக்கொள்வது வழக்கம்!

## சிந்தியா பதில்கள்

✍✉ **எல்லா வானொலிகளும் தம்மை முதலாமிடத்தில் இருப்பதாகச் சொல்லிக் கொள் கின்றனவே.... இரண்டாமிடத்தில் எந்த வானொலியும் இல்லையா?**

-எம்.பி.ஜெய், கினலன் எல்ல.

இந்தப் போட்டியில் ஓடுகின்ற ஒவ்வொருவருமே வேறு வேறு எல்லைக் கோட்டுக்கு ஓடுவதால், இரண்டாமிடத்திற்கு ஆள் இருப்பதில்லை!

✍✉ **'திருப்பாச்சி', 'ஐயா' இதில் எது உங்கள் கணிப்பில்?**

-அருள்ஜி, பெரியமுல்லை.

ஐயா, திருப்பாச்சியைச் சொல்ல முடியவில்லை. மன்னியுங்கள்!

✍✉ **இராணுவத்தின் நடவடிக்கைகளால் புலிகள் இப்போது மீண்டும் கோபத்தின் உச்சிக்குச் சென்றிருக்கிறார்கள்.... புலிகள் வெளியிடும் எச்சரிக்கைகளை அரசு இனிமேலும் உதாசீனம் செய்யுமாக இருந்தால் அதன் விளைவுகள் நெருப்பாக மாறும்...இனி வெறும் எச்சரிக்கையுடன் புலிகள் நின்றுவிட மாட்டார்கள்... அவர்களுக்கு என்று ஒரு தனித்துவமான பாணி இருக்கிறது. அரசியல் வாதிகள் போல வெறும் மிரட்டல்கள் விடுத்துக்கொண்டிருக்க மாட்டார்கள், நடவடிக்கைதான்... என்றெல்லாம் தமிழ்ப் பத்திரிகைகள் எழுதுகின்றனவே! என்ன சொல்ல வருகிறார்கள்?**

-எம்.முகுந்தன், தெகிவளை.

ஆஹா! யுத்தம்தான்! சுடச்சுடச் செய்திகள் வந்து கொண்டிருக்கும்! நமது மக்களின் அவலங்களை - அல்லோலகல்லோலங்களைச் சொல்லிச் சொல்லிப் புலம்பிக்கொண்டிருக்கலாம். இப்போது போல பத்திரிகைப் பக்கங்கள் சப்பென்றிருக்காது. நாளுக்கு நாள் உணர்ச்சிகரமான உருக்கங்களும் அதிர்ச்சியோலங்களும் வந்தவண்ணமிருக்கும். விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது; ஒரே கொண்டாட்டம்தான்!

✍✉ **சூர்யா- ஜோதிகா ஏன் இன்னும் தங்கள் திருமண அறிவிப்பை வெளியிடவில்லை?**

-வீ.கதிரமலை, ஹட்டன்.

ஒருவேளை என்னுடைய சம்மதத்திற்குத்தான் காத்திருக்கிறார்களோ என்னவோ! சம்மதம்! சம்மதம்!! சம்மதம்!!! (இந்தத் தினமுரசு இதழில் ஒரு பிரதியை அவர்களுக்கு அனுப்பி வைத்துவிடுங்கள் உங்கள் செலவில்! ஒரு திருமணத்தை நிறைவேற்றி வைத்த புண்ணியம் கிடைக்கட்டுமே.)

✍✉ **இந்தியா - பாகிஸ்தான் முதல் டெஸ்ட் எப்படி?**

-எம்.ஆர்.எம்.றிஸ்வான், கொழும்பு - 12.

பாகிஸ்தானுக்கும் ஒரு கில்கிறிஸ்ட் கிடைத்து விட்டார் என்று தெரிகிறது.

✍✉ **தமிழ் நாட்டில் எவ்வளவோ அழகழகான பெண்கள் இருக்க, தமிழ்ப் படவுலகினர் மும்பையிலிருந்து நடிகைகளை இறக்குமதி செய்ய என்ன காரணம்?**


-இரா.மதுரன், திருகோணமலை.

தாராள மனசுதான். தமிழர்களுக்கில்லை - அவர்களுக்கு!

# செச்சினிய கிளர்ச்சித் தலைவனின் மரணம்

**சிறப்புப் பார்வை**

சமாதானப் பேச்சுகளை நடத்த விரும்பிய மித வாதியாக ஒரு முகத்தையும் ரஷ்யாவிடமிருந்து செச்சினியாவைப் பிரித்தெடுத்து தனிநாடு அமைப்போமென்று பிரிவினைவாதியாக மற்றொரு முகத்தையும் செச்சினிய மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் காட்டிவந்த செச்சினிய இஸ்லாமிய கிளர்ச்சித் தலைவர் அஸ்லம் மஸ்கடோவ் கடந்த வாரம் ரஷ்யப் படைகள்


அஸ்லம் மஸ்கடோவ்

நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார். கடந்த வருடம் ரஷ்யாவின் வடக்கு ஒசேசியாவிலுள்ள பெஸ்லான் பாடசாலையை முற்றுகையிட்டு நடத்திய பயங்கரவாதத் தாக்குதலின் சூத்திரதாரியென வர்ணிக்கப்பட்ட இவரை, உயிருடனோ பிணமாகவோ பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு கோடி அமெரிக்க டொலர்கள் ( இலங்கை நாணயத்தில் நூறு கோடி ரூபாவுக்கு மேல்) வழங்கப்படுமென்று ரஷ்யா அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இவரது அமைப்பில் ஒன்றித்து இயங்கிப் பின்னர் பிரிந்து செயற்பட்ட யுத்தப் பிரபுவான சாமில் பசயேவ் என்பவரும் இத் தாக்குதலின் சூத்திரதாரியென ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அறிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இந்த பெஸ்லான் பாடசாலைத் தாக்குதலின்போது அப்பாவிகளான நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்கள் உட்பட முந்நூறு பேர் பயங்கரமாகப் பலியெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

செச்சினியத் தலைநகரான குரோன்ஸிக்கு வடக்கேயுள்ள டொல்ஸ்டோய் - யூற் என்ற அமைதியான கிராமத்தில் பதுங்கு குழியொன்றுக்குள் பதுங்கியிருந்த போது கடந்த ஆறாம் திகதி ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் மஸ்கடோர் கொல்லப்பட்டார். செச்சினிய மக்களின் தேசியத் தலைவனாகத் தன்னைத் தானே வர்ணித்துக் கொண்ட அஸ்லம் மஸ்கடோவ், தனது சொந்த மண்ணிலேயே மக்கள் மத்தியில் பகிரங்கமாக வாழ முடியாது, பங்கருக்குள் பதுங்கி வாழ வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்துக்குக் காரணங்களும் இருந்தன. அவரது பிரிவினைப் படையணியில் சேர்ந்து செயற்பட்ட சாமில் பசயேவ் என்ற கட்டளைத் தளபதியோடு ஏற்பட்ட முரண்பாடும் பின்னர் பசயேவ்வைக் கொல்வேனென்று அஸ்லம் சூளுரைத்தமையும் அவர் பதுங்கி வாழ்வதற்கு ஒரு காரணமென்பது குறிப்பிடத் தக்கது.

கொர்பச்சேவின் காலத்தில் சோவியத் சோஷலிசக் குடியரசு பல அரசுகளாகப் பிரிவதற்கு முன்னர் ரஷ்ய இராணுவத்தில் உயர் பதவி வகித்தவர் இவர். 1972ஆம் ஆண்டு ரஷ்யாவின் திலிசி இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய இவர், 1981இல் லெனின்கிராட் இராணுவ அக்கடமியில் உயர் கல்வி பெற்று அதிகாரியாக வெளியேறினார். 1992இல் ரஷ்ய ஆயுதப் படைகளிலிருந்து இராஜினாமாச் செய்த கேர்ணல் மஸ்கடோவ் செச்சினிய ஆயுதப் படைகளின் முதலாவது பிரதித் தளபதியாகப் பதவியேற்றுக்கொண்டார். 1994 மார்ச்சில் செச்சினிய ஆயுதப் படைகளின் பிரதம தளகர்த்தராகப் பதவி உயர்வு பெற்றார். 1994 டிசம்பரில் செச்சினியப் பிரிவினைவாதக் கிளர்ச்சியை நசுக்க அனுப்பப்பட்ட ரஷ்யப் படைகளுக்கெதிராக மஸ்கடோவின் தலைமையின் கீழ் செச்சினியக் கிளர்ச்சிவாதிகள் பெரும் போராட்டங்களை நடத்தினர். ஆனையிறவு, பூநகரி, ஜெயசிக்குறுத் தாக்குதல்களில் புலிகள் சாதித்ததைப் போன்று, 1994க்கும் 96க்குமிடையில் நடைபெற்ற செச்சினிய யுத்தத்தில் கிளர்ச்சிவாதிகள் பல வெற்றிகளைக் கண்டபோதிலும், ரஷ்யாவிடமிருந்து பிரிந்து சென்று சுதந்திர செச்சினிய அரசை அவர்களால் நிறுவ முடியவில்லை. 1995ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரையும் 1996ஆம் ஆண்டு ஆகஸ்டிலும் ரஷ்ய அதிகாரிகளோடு நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் செச்சினிய தரப்பில் இவர் அங்கம் வகித்தார். இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட செச்சினிய தற்காலிகக் கூட்டரசாங்கத்தில் பிரதமராக இவர் பதவியேற்றார். 1996 நவம்பரில் ரஷ்ய அரசாங்கத்தோடு ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றிலும் செச்சினிய தற்காலிக அரசின் சார்பாக இவர் கைச்சாத்திட்டார். செச்சினிய ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றுவதற்காக 1996 டிசம்பரில் சகல பதவிகளிலிருந்தும் இராஜினாமாச் செய்துகொண்ட இவர், 1997 ஜனவரி 27ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்றார். இவரது செச்சினிய கிளர்ச்சிப் பிரிவைச் சேர்ந்தவரும், பின்னர் இவரோடு முரண்பட்டுக் கொண்டவரும், இவரை விடக் கடும் தீவிரவாதியென வர்ணிக்கப்படுபவருமான சாமில் பசயேவ் என்பவரைத் தோற்கடித்தே அஸ்லம் வெற்றிபெற்றார். செச்சினியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டியே தீருவேனென்று ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்த வைபவத்தின்போது இவர் சூளுரைத்தமை இவரை மிதவாதியென வர்ணித்தவர்களை முகம் சுளிக்க வைத்தது. இருந்தாலும் ரஷ்யாவின் ஒரு பகுதியே செச்சினியாவென்ற நிலைப்பாட்டை மொஸ்கோ என்றுமே மாற்றிக் கொண்டதில்லை. செச்சினிய யுத்தப் பிரபுக்களான சாமில் பசயேவ் மற்றும் கட்டாப் போன்றோருடன் 1999 ஆகஸ்ட் முதல் இவர் இணங்கிச் செயற்பட ஆரம்பித்தார். 1999இல் யுத்தப் பிரபுவான சாமில் பசயேவ்வை செச்சினியப் படைகளின் பிராந்தியத் தளபதியாக நியமித்த மஸ்கடோவ், இரண்டாயிரம் ஆண்டின் ஆரம்ப காலப் பகுதியில் தலைமறைவானார்.

ரஷ்யத் துருப்புகள் நடத்திய விசேட தாக்குதல் நடவடிக்கையின்போதே மஸ்கடோவ் கொல்லப்பட்டாரென்று ரஷ்ய சமஷ்டிப் பாதுகாப்புச் சேவையின் தலைவர் நிக்கோவாய் பட்ருசேவ் தெரிவித்துள்ளபோதிலும் இவரது மரணத்தில் சந்தேகமிருப்பதாகப் பல ஏஜென்சி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் என்.ரி.வி. தொலைக்காட்சி மேலங்கியற்ற தாடி வளர்த்த மஸ்கடோவின் சடலப் படங்களைக் காண்பித்தமை குறிப்பிடத் தக்கது. மக்களுக்குப் பயந்து பங்கரொன்றுக்குள் பதுங்கியிருந்தபோது இவர் கொல்லப்பட்டாரென்றும் பங்கருக்குள் குண்டு வீசப்பட்டே இவர் கொல்லப்பட்டாரென்றும் சீ.என்.என். தொலைக்காட்சி ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது. இவரது மெய்ப்பாதுகாவலர்களே தவறுதலாக ஆயுதங்களைப் பயன்படுத்தியிருக்கலாமென்றும் அல்லது ஏதோ அசம்பாவிதம் நடைபெற்றிருக்கிறதென்றும் சில தகவல்கள் கூறுகின்றன. உளவாளியொருவர் கொடுத்த தகவலையடுத்து மஸ்கடோவின் தூரத்து உறவினரொருவரின் வீட்டிலுள்ள பதுங்கு குழிக்குள் இவரையும் இவரது மெய்ப்பாதுகாவலர்களையும் ரஷ்யப் படைகள் சுற்றி வளைத்ததாக சீ.என்.என். தொலைக்காட்சியில் ரியான் சில்கோற் என்ற நிருபர் தெரிவித்தார். இவரது மரணம் பற்றிய செய்தி ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்ரியா' "இனி எவருடனும் மேலும் பேச வேண்டிய தேவையே இல்லை" என்று கூறி தனது செய்தியறிக்கைக்கு மட்டுமல்ல, செச்சினியப் பிரிவினைவாதத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஓர் அர்த்தபுஷ்டியோடு கருத்துத் தெரிவித்துள்ளது.

எது எப்படியிருந்தாலும் இந்தப் பிரிவினைவாதியின் மரணத்திலிருந்து பல உயிர்த் துடிப்புமிக்க விடயங்களை


அஸ்லம் மஸ்கடோவ்

எமது மக்கள் கற்றுக் கொள்ள முடியும். ஒரு தேசத்தின் அல்லது தேசியத்தின் பிரதான முரண்பாட்டைச் சரிவரக் கிரகித்துக்கொள்ள வேண்டும். அடக்குமுறைக்கெதிரான சகல போராட்டங்களையும் அது வர்க்க ஒடுக்கு முறையாக இருந்தாலென்ன, இன, மத, மொழி ஒடுக்குமுறையாக இருந்தாலென்ன - சம்பந்தப்பட்ட மக்களின் ஆதரவோடு, அந்த மக்களை அணிதிரட்டி, அந்த மக்களில் தங்கியிருந்து முன்னெடுத்துச் செல்லப்படும் போராட்டங்களையே விடுதலைப் போராட்டங்களென வர்ணிக்க முடியும். விடுதலையென்ற மாயப் போர்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் தனிநபர் பயங்கரவாதம், ஜனநாயக மறுப்பு, மாற்றுக் கருத்துள்ளவர்களைக் கொன்றொழித்தல், எதிர்த்து நியாயம் கேட்கும் மக்களை வேட்டையாடுதல், உட்கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவமின்மை, நிராகரிப்பு, தனிநபர் வழிபாடு, அப்பாவி மக்களின் இலக்குகளைத் தாக்குதல், ஒருபுறம் சமாதான முகமூடியைப் போட்டுக்கொண்டு மறுபுறம் யுத்தத் தயாரிப்பில் ஈடுபடல் போன்ற இவையெல்லாம் அஸ்தமனத்தின் உதயங்களேயென்பதைப் புரிந்துகொள்ளத் தவறிய மஸ்கடோவ்வின் முடிவு எமக்கும் எம்மவர்க்கும் நல்ல பாடமாக அமைய வேண்டும். விடுதலைப் போராட்டமென்றால் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? நேச சக்திகள் எவை? இலக்கு என்ன? இயக்கு சக்திகள் எவை? என்பதையெல்லாம் புரிந்துகொள்ளும் சக்தியுள்ள அரசியல் தலைமையே விடுதலைப் போராட்ட இயக்கத்தின் முன்தேவையாகும். ஆயுதங்கள் தீர்க்கமான சக்தியமல்ல. மக்களே தீர்க்கமான சக்தி - இதனைப் புரிந்துகொள்ளாதவர்கள் நடத்துவதெல்லாம் பயங்கரவாதப் போராட்டமே. புலிகள் தென்னிலங்கைக்குள் ஊடுருவி அப்பாவி மக்களை இலக்கு வைத்து வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியது போல் ரஷ்யாவுக்குள் ஊடுருவி ரஷ்ய அரசை அதிர வைக்குமளவுக்கு அப்பாவி மக்கள் மீது பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்திய மஸ்கடோவ் தெரு நாயைப் போல் சுட்டுக் கொல்லப்பட்டமை ஒரு சிறந்த வரலாற்றுப் பாடமாக அமையுமென்பது திண்ணம்.

---




அவுஸ்திரேலியாவில் தோன்றிய மிகச் சிறந்த சுழற் பந்துவீச்சாளரான க்ளெலி கிலிமெட் தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது 11 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதன்போது அவர் முதலாவது இன்னிங்ஸில் 45 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் இரண்டாவது இன்னிங்ஸில் 37 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

இவர் கலந்துகொண்ட மேற்படி போட்டி 1924 - 25இல் சிட்னி விளையாட்டு மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்றது.

டொனால்ட் பிரட்மனின் காலத்தில் அவுஸ்திரேலிய அணியில் இருந்த முன்னணி சுழற் பந்துவீச்சாளரான இவர், அவுஸ்திரேலிய அணி சார்பாக 1935-36ஆம் வருடம் வரை கிரிக்கெட் விளையாட்டில் பங்குபற்றியுள்ளார். இந்த 12 12 ஆண்டுகளில் 37 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்டு கிர்க்கெட், 216 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். 200 டெஸ்ட் விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்ட உலகின் முதலாவது பந்துவீச்சாளர் இவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந் நிலையில், இந்திய அணியின் யஜுவிந்தர்சிங் 1976 - 77ஆம் வருடங்களில் இங்கிலாந்து அணிக்கெதிராக பெங்களூரில் தனது முதலாவது டெஸ்ட் கிரிகெட் போட்டியில் கலந்துகொண்டு 7 கெட்சுகளைப் பெற்றார். (முதலாவது இன்னிங்ஸில் 5, இரண்டாவது இன்னிங்ஸில் 2)

துரதிர்ஷ்டவசமாக இவர் இந்திய அணி சார்பில் நான்கு டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றியுள்ளார். ஏனைய மூன்று போட்டிகளிலும் இவர் நான்கு கெட்ச்களையே பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

நியூஸிலாந்து அணியைச் சேர்ந்த பீ.ஆர்.டேலர் தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது 5 விக்கெட்டுகளைச் கைப்பற்றியதுடன், துடுப்பாட்டத்தின் மூலம் ஒரு சதத்தையும் பெற்றுக்கொண்டார்.

1964 - 65களில் கல்கத்தாவில் இந்திய அணிக்கு எதிராக விளையாடியபோதே அவர் 105 ஓட்டங்களைப் பெற்றதுடன் 86 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

டேலர் நியூஸிலாந்து அணி சார்பாக 30 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 898 ஓட்டங்களைப் பெற்றதுடன் 111 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கிலாந்து அணியின் எலெக் பெட்வெயர் என்னும் வீரர், தான் கலந்துகொண்ட முதலாவது டெஸ்ட் போட்டியின் போதும், இரண்டாவது டெஸ்ட் போட்டியின் போதும் 11 விக்கெட்டுக்கள் வீதம் கைப்பற்றியுள்ளார்.

1946ஆம் வருடம் ஜூன் மாதம் லோட்ஸ் மைதானத்தில் இந்திய அணிக்கு எதிராக விளையாடியபோது அவர் முதலாவது இன்னிங்ஸில் 49 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸின்போது 96 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

இதே வருடம் ஜூலை மாதத்தில் இவர் தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொண்டு மான்சஸ்டர் நகரில் முதலாவது இன்னிங்ஸில் 41 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 52 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். 1955ஆம் வருடம் வரை இங்கிலாந்து அணி சார்பாக விளையாடிய பெட்யர், 51 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 236 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மொஹமட் அஸாருதீன், தான் கலந்துகொண்ட முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாம் டெஸ்ட் போட்டிகளின்போது சதங்களைப் பெற்றுக்கொண்டார்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக 1984-85களில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டித் தொடரில் கலந்துகொண்ட மொஹமட் அஸாருதீன், கல்ககத்தாவில் 110 ஓட்டங்களையும் சென்னையில் 105 ஓட்டங்களையும் கான்பூரில் 122 ஓட்டங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கிலாந்து அணியைச் சார்ந்த சார்ள்ஸ் பெனர்மன் உலகின் முதலாவது டெஸ்ட் போட்டியின்போது (1877) சதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், 116 ஆண்டுகளில் எந்த ஓர் அணியும் முதலாவது டெஸ்ட் போட்டியில் சதங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. 116 வருடங்களுக்கு பின்னர் அச் சாதனையை நிகழ்த்தியவர் ஸிம்பாபவே அணித் தலைவர் டேவிட் ஹவுடன் ஆவார். 1992 - 93களில் இந்திய அணிக்கு எதிராக ஹராரேயில் இடம்பெற்ற (ஸிம்பாப்வே அணியின் முதலாவது டெஸ்ட் போட்டி) போட்டியின்போது இவர் 121 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஹவுடன்ஸிம்பாப்வே அணிக்காக 22 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு நான்கு சதங்கள், நான்கு அரைச் சதங்களுடன் 1,466 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

'எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்' ஆக்கம் அடுத்த வாரம் வரும்!

# போப்பாண்டவர் இரண்டாம் அர்பன்

# (1042 - 1099)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**போ**ப்பாண்டவர் இரண்டாம் அர்பனை இன்று நினைவில் வைத்திருப்பவர்கள் மிகக் குறைவு. எனினும், அவரைப் போல் மனித வரலாற்றில் பாதிப்பைப் பெருமளவில் ஏற்படுத்தியவர்கள் மிகச் சிலரே. புனித பூமியாகப் பாலஸ்தீனத்தை முஸ்லிம்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றுவதற்காகப் போர் தொடுக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு ஆணையிட்டவர் இரண்டாம் அர்பன் ஆவார். இந்தப் போர்தான் சிலுவைப் போர்களுக்குத் (Crusaders) தொடக்கமாக அமைந்தது.

அர்பனின் இயற்பெயர் ஒடோ-டி-லாகரி என்பதாகும். அவர் 1042ஆம் ஆண்டில் பிரான்ஸிலுள்ள சாட்டிலான்-சூர்-மார்னே என்ற நகருக்கு அருகே பிறந்தார். அவர் பிரெஞ்சுக் கோமான்களின் குடும்பம் ஒன்றில் தோன்றினார். அவர் சிறந்த கல்வி கற்றார். இளமையில் ரெய்ம்ஸ் நகரில் அவர் ஒரு மேற்றிராணியராகப் பணியாற்றினார். பின்னர் அவர் ஒரு சூளுனியாக் சமய குருவாகவும் (Monk) துறவியர் குழுத் தலைவராகவும் (Prior) போப்பாண்டவரின் தேர்வுக் குழுவில் உறுப்பாண்மை பெற்ற மேற்றிராணியராகவும் (Cardinal Bishop) படிப்படியாக உயர்வு பெற்றார். 1088ஆம் ஆண்டில் அவர் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அர்பன், மனத்திட்பமும், செலாற்றலும் அரசியல் விவேகமும் வாய்ந்த போப்பாண்டவராக விளங்கினார். ஆனால், இந்தக் காரணத்திற்காக மட்டும் அவர் இந்த நூலில் இடம்பெறவில்லை. எந்த நடவடிக்கைக்காக இரண்டாம் அர்பன் முக்கியமாக நினைவில் நீங்கா இடம்பெற்றாரோ, அந்த நடவடிக்கை 1095ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாளன்று நிகழ்ந்தது. திருச்சபை மாமன்றக் கூட்டத்தை அவர் கூட்டினார். அக் கூட்டம், பிரான்ஸிலுள்ள கிளர்மாண்ட் நகரில் நடந்தது. பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் வரலாற்றிலேயே உணர்ச்சியைத் தூண்டும் தனிப் பேருரை எனப் புகழ் பெற்ற தமது உரையை அர்பன் ஆற்றினார். இந்தப் பேருரை பல நூற்றாண்டுகள் வரை ஐரோப்பாவின் தலைவிதியை மாற்றியமைக்கும் வல்லமை வாய்ந்ததாகவும் விளங்கியது. அர்பன் தமது உரையில், துருக்கியர்கள் புனித பூமியை ஆக்கிரமித்துக்கொண்டு, கிறிஸ்தவப் புனித இடங்களை மாசுபடுத்துவதையும், கிறிஸ்தவ யாத்திரிகர்களுக்குத் தொல்லை கொடுப்பதையும் வன்மையாகக் கண்டித்தார். கிறிஸ்தவ உலகம் முழுவதும் ஒரு புனிதப் போரில் ஒருங்கிணைந்து, புனித பூமியைக் கிறிஸ்தவர்கள் மீண்டும் கைப்பற்றுவதற்குப் பெரும் புனிதப் போரைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அர்பன் தமது உரையில் மிகவும் மதிநுட்பத்துடன் பொதுநல நோக்கங்களையும் எடுத்துரைத்தார்.

புனித பூமி செல்வச் செழிப்புடையது என்பதையும், மக்கள் நெரிசல் மிகுந்த கிறிஸ்துவ ஐரோப்பாவை விட செல்வ வளம் மிக்கது என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இறுதியாக, இந்தப் புனிதப் போரில் பங்குகொள்வதால் எல்லாத் தவங்களின் பலனும் கிட்டும் என்றும், புனிதப் போராளிக்கு அவரது பாவங்கள் அனைத்திலிருந்தும் மன்னிப்புக் கிடைக்கும் என்றும் அர்பன் அறிவித்தார்.

அர்பன் ஆற்றிய இந்த அற்புதப் பேருரை, அந்தக் கூட்டத்திலிருந்த உயர் நோக்கம் கொண்டவர்கள், தன்னலம் கொண்டவர்கள் ஆகிய இரு சாராரையும் ஒருங்கே கவர்ந்தது. அவர் உரையைக் கேட்ட கூட்டத்தினர் உணர்ச்சி தூண்டப் பெற்றுக் குமுறி எழுந்தார்கள். அர்பன் தமது உரையை முடிப்பதற்கு முன்னரே கூட்டத்தினர் "ஆண்டவன் அதை விரும்புகிறார்" என்று முழக்கமிடலாயினர். இந்த முழக்கமே சிலுவைப் போர்களின் போர் முழக்கமாகியது. இதற்குச் சில மாதங்களுக்குள்ளேயே, முதலாவது சிலுவைப் போர் தொடங்கியது. இதைத் தொடர்ந்து பல சிலுவைப் போர்களும் நடந்தன. (எட்டு பெரிய சிலுவைப் போர்களும், பல சிறிய போர்களும் நடந்தன.) இந்தச் சிலுவைப் போர்கள் சுமர் 200 ஆண்டுகள் நீடித்தன.



முதலாவது சிலுவைப் போரில் ஜெருசலேம் கைப்பற்றப்பட்டது. இதற்கு இரு வாரங்களுக்குப் பிறகு ஆனால், இந்த வெற்றிச் செய்தி தமக்கு எட்டுவதற்கு முன்னர், 1099ஆம் ஆண்டில் அர்பன் காலமானார்.

(வியப்புக்கள் தொடரும்....)

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

"**புதிய** வானம் புதிய பூமி எங்கும் பனி மழை பொழிகிறது.

நான் வருகையிலே என்னை வரவேற்க எங்கும் பூ மழை பொழிகிறது ஹா......ஹா... ஓஹோ....ஓஹோ....ஹ"

உப்பிடி நான் பாடயில்லையுங்கோ. இப்ப ஐரோப்பிய சுற்றுலாப் பயணமொண்டை மேற்கொண்டிருக்கிற எஸ்.பி.தமிழ்தான் பாடுகிறார். இவர் வெளிக்கிட்ட போதாத காலம், ஐரோப்பாவில கடுமையான பனி பெய்யுதாம். அதுமட்டுமில்லை. சில நாடுகளில நீரோடைகள் கூட உறைஞ்சு போச்சுதாம். இந்த நேரத்தில இவர் சுற்றுலா கிளம்பிருக்கிறாரெண்டால். எப்பிடித்தான் குளிருக்கு ஈடுகுடுக்கப் போறாரோ தெரியேல்லை.

அதிலையும் சுனாமியால ஏற்பட்ட பாதிப்புகளைப் பற்றி விலாவாரியா விவரிக்கப் போறாராம். அதோடை இனப் பிரச்சினை எந்தப் பொஸிஷனில போய்க்கொண்டிருக்கு எண்டதையும் சொல்லப்போறாராம். சுனாமி வந்து ரெண்டு மாதமாயிட்டுது. ஆனானப் பட்டவையளெல்லாம் வந்து போனாப் பிறகு இவர் புறப்பட்டிருக்கிறார். எங்களுக்கு என்ன நடந்ததெண்டதை மற்றவை வந்து பாத்திட்டுப் போறதுக்கும் நாங்களே போய் சொல்லிறதுக்கும் வித்தியாசம் இருக்குத்தான். அதை யாரும் மறுக்கேலாது. அது மட்டுமில்லாம பாதிக்கப்பட்ட மக்களுக்குக் வழங்க வேண்டு புலம்பெயர்ந்து இருக்கிற எங்கட சனம், இவையளெட்டக் குடுத்ததுகளுக்கு என்ன நடந்ததெண்டு தெரியாம யோசிச்சுக்கொண்டு திரியேக்க, அவையின்ர டவுட்டுகளையும் கிளியர் பண்ண வேணுமெல்லோ! அப்பிடிப் பாத்தாலும் எஸ்.பி.யின்ர பயணம் அவசியமானதுதான். இப்பிடி அவசியமான விசயங்களுக்குள்ளால அநாவசியமான சில விசயங்களும் இருக்குதெண்டுதான் தோணுது. அதென்ன அநாவசியமானது எண்டு யோசிக்காதேங்கோ. அதையும் நானே சொல்லிப் போறன். எஸ்.பி. சுனாமியைப் பற்றி விளக்கவோ, இனப் பிரச்சினையின்ர, இப்பத்தைய நிலைமைப் பற்றிப் பேசவோ போகயில்லையாம். சுனாமியின்ர பேரால இவை கலக்ஷன் செய்தவையல்லோ அதுகளில பல கோடி தேறிச்சுதாம். அதில ஒண்டிரண்டு கோடிகளை கலக்ஷன் செய்த இவையின்ர நம்பிக்கைக்குரியவையே சுருட்டிப் போட்டினமாம். அப்பிடிச் சுருட்டினது கொஞ்சமெண்டால் தலைமை அவ்வளவாக அலட்டிக கொள்ளாதாம். தேன் எடுக்கிறவன் விரலை நக்குவான்தானேயெண்டு நினைச்சு விட்டிருப்பாராம். ஆனால் சுருட்டின தொகை கொஞ்சம் பெருசாம். அதோட சில இடங்களில நடந்த கலக்ஷன் இவையின்ர கைக்கு வரவேயில்லையாம். இவையே சுருட்டிறதில எமகண்டன்கள். இவைக்கே பால் அப்பம் சுட்டிருக்கினமெண்டால் எப்பிடிப் பொறுமை காக்கிறது?

அதுதான் எஸ்.பி.யை உடன போகச் சொன்னவராம். "எஸ்.பி. போய் என்ன செய்வார்? இந்த எம்டன்களை ஒரு வழிபண்ணுவாரா" எண்டு கேட்டால் பட்சி பல்லைக் காட்டுது. தேசியத் தலைவர் நினைக்கிற மாதிரி எஸ்.பி.க்குப் பெரிய மரியாதை இல்லையாம். எஸ்.பி.யிட்ட அந்த வல்லமையும் இல்லையாமெண்டினம். சீரியஸான பிரச்சினையைக் கூட சிரிச்சுக்கொண்டே கேக்கிற இவரால, உந்த மாதிரி விஷயங்களைக் கையாள முடியாதாம். அது மட்டுமில்லையாம்! புலம்பெயர் நாடுகளில இவைக்கு வால் பிடிக்கிற பெடியள் "வன்னியில இருந்து ஓடர் போடுறதுக்கு இது வவுனியாயோ, யாழ்ப்பாணமோ இல்லையாம்" எண்டு. பகிரங்கமாகப் பேசிக்கொள்ளினமாம். தாங்கள் தங்கட வேலையை பாக்கிறதெண்டு ஒதுங்கி விட்டால் இவை வன்னிக் காட்டுக்க எருமை மாடு ஓட்ட வேண்டியதுதானாம் எண்டு பெடியள் சொல்லினம். 'எஸ்.பி.யின்ர தேசியத் தலைவர் முப்பது கோடி ரூபா ஒதுக்கினவராம். அதுக்கு என்ன நடந்தது? ஒதுக்கினாரா இல்லையா? இல்லாட்டில் சும்மா ஒரு 'இதுக்கு' செய்தி விட்டாரா? சரி அப்பிடித்தான் ஒதுக்கியிருக்கிறாரெண்டால் அந்தக் காசு இவருக்கு எப்பிடி வந்தது? வன்னிக்குள்ள இருக்கிற அண்ட கிரவுண்டுக்குள்ள இவரென்ன காசடிக்கிற வேலையா செய்யிறார்? இல்லையே! நாங்கள் பிச்சை எடுக்குமாப் போல கலக்ஷன் பண்ணிற காசும், நாட்டில எங்கட உறவுகளிட்டை வரி வாங்குறதுமாகத்தான் இருக்கும். உந்த இலட்சணத்தில கணக்குக் கேக்க எஸ்.பி. வாறாராம்' எண்டு பெடியள் பேசிக்கொள்ளினமாம். உப்பிடி பட்சி சொல்லிறதை முழுசா நம்பவும் ஏலாது. ஏன் தெரியுமே! உங்க குளிர் அதிகமெண்டதால குடிபானங்களை குடங்குடமா வாத்துப்போட்டு, குளிர் நடுக்கத்தில நாக்குத் தவறி பெடியள் உளறியும் இருப்பாங்கள். குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சு எண்டிட்டு விடாமல் எஸ்.பி. எல்லாரையும் கொட்டிற பனியிலையும் வெட்டவெளியில அட்டேன்சனில நிக்கச் சொல்லி, உந்த கலக்ஷன் விவகாரத்தை பேசத்தான் போறன் எண்டு வன்னியால வெளிக்கிடேக்கையே சபதம் எடுத்துப் போட்டுத்தான் ஆமியின்ர படபடாவிலயே காலைத் தூக்கித்வச்சு, கம்பியைப் பிடிச்சி ஏறி ஆமிக் காரன்ர கைத்தாங்கல் உதவியோடை பெல்ட்டைக் கொழுவினவர். இது தெரியாத பட்சி பச்சை பச்சையா பேசித் திரியிறது நாகரீகமில்லையுங்கோ. என்னதான் இருந்தாலும் வளர்த்து விட்டவையளிட்டையே தங்கட விளையாட்டைக் காட்டக் கூடாது. பிறகு அங்கேயும் எங்கட தேடுதலும் நடவடிக்கை நடத்த வேண்டியிருக்கும். பிறகு கவலைப்பட்டுப் பிரயோசனமில்லையெண்டு பொட்டர் தன்ர காட்டமான அறிவித்தலை வன்னியில வெளியிட்டிருக்கிறாராம். தம்பிமார் இனிக் கொஞ்சம் அலேட்டா இருங்கோடாப்பா. கோபத்துக்கு ஆளாகாதயுங்கோ. பிறகு உதவினியள் எண்டதுக்கு அப்பால கடுமையாப் பார்க்கப்பட்டுப் போடுவியள் எண்டுதான் சொல்ல முடியும்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(17.03.2005 தொடங்கி 23.03.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், புதன், வெள்ளி, மேடம் - இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், துலாம் - கேது, மகரம் - செவ்வாய்
சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் மந்தம், வீண் குறை கேட்டல், பொருள் வரவு குன்றல், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல்; மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பிரயாண மிகுதி, தேக சுகக் கஷ்டம், குடும்பப் பகை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, குடும்ப நன்மை, பிள்ளைகளால் சுகம், உத்தியோக அலைச்சல், மனக் கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, குடும்ப நன்மை, மனக்குறை நீங்கும், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கஷ்டம், தூர இடப் பயணம், மனக் குறை நீங்கும், அன்னியர் சகவாசம், குடும்ப மேன்மை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, பாரிய செலவு, உயர்ந்த நிலை, மனக் குறை நீங்கும், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் சிக்கல், வீண் பிரயாசம், பெரியோர் சகாயம், இனசன மேன்மை, சுபகாரியத் தடை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மேன்மை, அன்னியர் உதவி, கௌரவம், வெளியிட வாழ்க்கை, பெரியோர் சகாயம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம் :- 01.


**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் பலிதம், மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, அன்னியர் நட்பு, குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் அனுகூலம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் மேன்மை, அன்னியர் சகவாசம், பெரியோர் சகவாசம், குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மனக் குறை நீங்கும், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் உயர்ச்சி, பலவிதப் பேறு, வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.


**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, காரியானுகூலம், உயர்ந்த நிலை, பண வரவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகளால் கெடுதி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

# நட்புத் தொடர்



இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் தற்போது இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இப்போட்டியானது, இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே 06 வருடங்களுக்குப் பிறகு நடைபெறுவது குறிப்பிடத் தக்கது. இப்போட்டியில் ஏதாவதொரு போட்டியை பாகிஸ்தானின் ஜனாதிபதி பர்வெல் முசாரப் பார்வையிட வேண்டுமெனவும், அதற்காக தனக்கு இந்தியா வர விருப்பம் என்றும் தெரிவித்திருந்தார். இவரின் விருப்பத்தை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அவர் இந்தியா வருவதற்கான அழைப்பை விடுத்திருக்கிறது. உத்தியோ பூர்வமற்ற வருகை என்றாலும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே முசாரப்பின் வருகையும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிரிக்கெட் ஆட்டமும் நல்லுறவுகளை வலுப்படுத்தும் என்று நம்பப்படுகின்றது. 3 டெஸ்ட் 6 ஒருநாள் போட்டிகள் அடங்கிய இத் தொடரில் பாகிஸ்தான் அணி புதிய இளம் வீரர்களோடு இன்சமாமின் தலைமையிலும் இந்திய அணி வழமையான வீரர்களோடு கங்குலி தலைமையிலும் மோதுகின்றன. மொகலியில் நடந்த முதல் டெஸ்ட் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி இந்திய அணி முன்னிலை வகித்து 2ஆவது போட்டிக்காக காத்துநிற்கிறது.







கங்குலி

இன்சமாம்

## கார்




ஜனவரி 29ஆம் திகதி இடம்பெற்ற வாகன வடிவமைப்பாளர்களின் கண்காட்சி ஒன்றில் பெறப்பட்ட படமே இது. இது அன்றைய நாட்களில் காணப்பட்ட டெக்ஸி வகையைச் சார்ந்தது. இதில் என்ன விசேஷம் என்னவென்றால், இதன் நீளம் 2.5 மீற்றராகும். நிறை 300 கிலோ கிராம். உலகில் தயாரிக்கப்பட்ட மிகச் சிறிய வாகன ஊர்தி என்ற பெருமையை இது பெற்றுள்ளது. இக் காரில் இருவர் மட்டுமே பயணம் செய்ய முடியும். அதாவது சாரதியும் ஒரு பயணியும் மாத்திரமே. இவ் வாகனம் செலுத்துவதற்கு எரிபொருட்கள் அவசியமில்லை. சாதாரண ஐதரசன் வாயுவே போதுமானது. எனவே இது சூழல் மாசடைவதையும் தடுக்கிறதென வடிவமைத்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

## முடிப் பாம்பு



வியட்நாம் நாட்டின் சாதனை வீரர் வான் கெய் வயது 67. தனது தலைமுடியை 20 அடி 34 அங்குலம் வளர்த்து உலக சாதனை நிலைநாட்டியுள்ளார். 31 வருடங்களாகத் தனது தலைமுடியை வெட்டாமல் பாதுகாத்து வந்தார்.

## இரட்டை பிறவிகள்

ஸிம்பாப்வேயில் உடல் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் 7 மாதத்திற்குப் பின்னர் பிரிக்கப்பட்டுள்ளன.

ஸிம்பாப்வே நாட்டில் ஒரு தாய்க்கு 7 மாதங்களுக்கு முன்பு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன. அந்தக் குழந்தைகளின் பெயர் டினாஷே மற்றும் டினோ டென்டே என்பதாகும். வயிற்றுப் பகுதியில் அவை ஒட்டியிருந்தன. 2 குழந்தைகளுக்கும் பொதுவாக ஒரே ஒரு கல்லீரல் இருந்தது. இந்தக் குழந்தைகள் பிறந்து 7 மாதங்கள் ஆனதும் அவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் தனித்தனியே பிரித்து எடுக்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி கனடாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இதற்கு ஹெர்பி என்ற நிதி அமைப்பு உதவி நிதி வழங்கியது. வளரும் நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள் மருத்துவ சிகிச்சைக்காகக் கனடா செல்ல உதவும் உதவி நிதி அமைப்பு இது. கனடாவில் உள்ள ரொறன்ரோ மருத்துவமனையில் டாக்டர் ஜேக்கப் லேங்கர் தலைமையில் 25 பேர் கொண்ட மருத்துவக் குழு இந்தக் குழந்தைகளைப் பிரிக்க அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டது. 5 மணி நேர ஆபரேஷனுக்குப் பிறகு குழந்தைகள் வெற்றிகரமாகப் பிரித்து எடுக்கப்பட்டன.



## மிதக்கும் சந்தை



தாய்லாந்தின் ரட்சாபுரி பகுதியில் புகழ்பெற்ற மிதக்கும் சந்தை ஒன்று உள்ளது.

இங்கு மிதக்கும் படகுகளில் கடை அமைத்துப் பொருட்களை விற்பனை செய்கின்றனர். இந்தப் படகுக் கடைகள் ஒரே இடத்தில் நிற்காமல் நகரைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டே இருக்கும். படத்தில் 2 படகுக் கடைகள் கால்வாய்க் கரையோரமாக மிதந்து செல்வதைக் காணலாம். சமீபத்திய சுனாமிப் பாதிப்பினால் மிதக்கும் சந்தையில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் குறைவாகக் காணப்படுகிறது.

## ஆஸ்கார் தேவதை



ஆஸ்கார் விருது விழா கடந்த வாரம் அமெரிக்காவின் லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இந்த விழாவில் ஹாலிவுட் நட்சத்திரங்கள் விதவிதமான உடையில் ஜொலித்தனர். இவர்களில் சிறப்பாக உடை அணிந்து வந்தவர்கள் யார்?, மிக மோசமாக உடை அணிந்து வந்தவர்கள் யார்? என்பது குறித்துப் பொதுமக்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இந்தக் கருத்துக் கணிப்பில் ஆஸ்கார் விருது வென்ற ஹிலாரி சுவாங்க் மற்றும் பிரபல நடிகர் ஜூட்லா ஆகியோர் முதலிடத்தைப் பிடித்தனர். இதேபோன்று ஆஸ்கார் விருதில் மக்கள் மனம் கவர்ந்த நடிகைகள் யார்? என்பது குறித்து ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதில் பிரபல நடிகை கேட்டலினா சாண்டினோ மோரீனா, சல்மா ஹைய்க், பெனிலோப் கிரஸ் ஆகிய நடிகைகள் முதலிடத்தைப் பிடித்தனர். படத்தில் நடிகை கேட்டலினா சாண்டினோ மோரீனா ஆஸ்கார் விழாவில் கலந்துகொண்ட காட்சியைக் காணலாம்.